சமூக மாற்றம் - நூல் வெளியீட்டெண் - 06

# கருத்துக் கண்ணோட்டம்

## பாகம் - 04

## ஒரு சமூக அரசியல் பார்வை

122





மிலேனியம் கல்வி ஸ்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கண்ணோட்டம்

ஒரு சமூக அரசியல் பார்வை

பாகம் - 04

*விவாதம் தொடர்கிறது*

மிலேனியம் கல்விஸ்தாபனம்
வெலிகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றம் நூல் வெளியீட்டெண் - 06


| | |
|---|---|
| **Title** | : Karuththuk Kannottam - Oru samuha arasiyal parvai |
| **Edited by** | : S.H. Moulana |
| **Published by** | : Millennium Educational Foundation - Weligama |
| **First Edition** | : April 2008 |
| **Pages** | : 123 |
| **Copies** | : 500 |
| **Copyright** | : Millennium Educational Foundation - Weligama |

| | |
|---|---|
| **நூல்** | : கருத்துக் கண்ணோட்டம் - ஒரு சமூக அரசியல் பார்வை |
| **ஆசிரியர்** | : எஸ்.எச். மௌலானா |
| **வெளியீடு** | : மிலேனியம் கல்விஸ்தாபனம் - வெலிகமை |
| **முதல் பதிப்பு** | : ஏப்ரல் 2008 |
| **பக்கங்கள்** | : 123 |
| **பிரதிகள்** | : 500 |
| **பதிப்புரிமை** | : மிலேனியம் கல்விஸ்தாபனம் - வெலிகமை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


பதிப்புரை
- *திக்வெல்லை ஸப்வான்*

ஓட்டை உள்ள இயக்கங்கள் ஏகத்துவத்தை வளர்த்திடுமா? 1
- *எம்.ஏ.எம். ஆதில்*

நேயர் தபால்
- *முஹ்ஸின் மௌலானா* 7
- *முஹம்மத் ஜௌபர்* 8

அன்றும் இன்றும் ஒன்றே 9
- *முஹம்மத் உஸ்பர்*

அறியப்படாத அரேபியா 18
- *அஸ்மியா*

அறியப்படாத அரேபியா - ஒரு விமர்சனப் பார்வை 32
- *கலைவாதி கலீல்*

ஒரு வாசகனின் எதிர்வினை 41

கருத்துக் கண்ணோட்டம் - ஒரு கொள்கை விளக்கம் 54
- *மர்சூம் மௌலானா*

விவாதம் தொடர்கிறது... 75
- *எஸ்.எச். மௌலானாவின் பதிலடிகள்*

எனது பார்வையில் வகாபிஸம் 103
- *எஸ்.எச். மௌலானா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஒரு சூடான சூழ்நிலையில் கருத்துக்கண்ணோட்டம் பாகம் - 04 உங்கள் முன்னால் குருத்தாய் இதழ் விரித்துள்ளது

கருத்துக்கண்ணோட்டம் பாகம் -03 வாசகர்களிடையே பெரும் பரபரப்பையும், கருத்துச் சர்ச்சைகளையும், பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தமைக்கு வந்து குவிந்த மடல்களும், காதில் விழுந்த தகவல்களும், தொலைபேசி அழைப்புகளும் சிறந்த சான்று. வழமையை விட வேகமான, விமர்சனங்கள் அடுத்த வெளியீட்டுக்கான உத்வேகத்தை எம்முள் விதைத்தன. அனைவரது கருத்துக்களையும் மதித்துக் களமளித்து தெளிவான விளக்கங்களையும் கொடுத்து பயனளிக்கக் கூடிய ஒரு பயணத்தைக் கருத்துக் கண்ணோட்டம் மூலம் தொடர முடிந்தமை எமக்குள் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

கருத்துக் கண்ணோட்டம் 03ல் இடம் பெற்ற ஆக்கங்கள் குறித்து தமது கருத்துக்களை பலரும் பல கோணங்களில் வழங்கியிருந்தனர். அனைவருக்கும் எமது நன்றி. இப்பாகத்தில் அதற்கான விளக்கங்கள் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களினால் தரப்பட்டுள்ளன. இதுபற்றிய உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை ஸ்தாபனம் வழமை போல் ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றது. களமளிக்கத் தயாராக இருக்கின்றது.

கருத்துக் கண்ணோடட்டம் பாகம் - 04 இம் முறையும் பல ஆக்கங்களுடன் வெளிவந்துள்ளது. பல எழுத்தாளர்களும் தமது கருத்துக் களை முன் வைத்துள்ளன.

நேயர் தபால் என்ற பகுதியில் ருஸ்கா ரிப்கான், எஸ்.ஏ.எம் ஜஹ்பர் ஆகியோரின் மடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இம்முறை ஆக்கங்கள் தெரிவதில் பெரும் சிக்கல்கள் முளைத்தன அந்தளவுக்கு எக்கச்சக்கமான ஆக்கங்கள் எதை விடுவது? எதைத் தொடுவது என்ற திணறல். பெருந் தேர்வுக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்கள் இப்பாகத்தை அலங்கரிக்கின்றன. ஏனைய ஆக்கங்கள் நிச்சயமாக இனிவரும் இதழ்களில் சேர்த்துக்கொள்ளப்படும் என உறுதியளிக்கின்றோம்.

அஸ்மியா, உஸ்பர், எம்.ஏ.எம். ஆதில், எம்.ஏ.எம். ஜவ்பர், மூஸின் மௌலானா, கலைவாதி கலீல், எஸ்.எச் மௌலானா, பொறியியலளர் மொஹமட் அலி, மர்சூம்மௌலானா ஆகியோரின் ஆக்கங்கள் பாகம் நான்கிற்கு புத்தூக்கம் ஊட்டுகின்றன.

வாதப்பிரதிவாதம் கருத்துக்கண்ணோட்டம் தரும் விசேடமான விவாத மேடை இம்முறை ருஸ்கா, ரிப்கான், எஸ்.எச் மௌலானா, ஏ.எச்.எம் யுசுப், மர்சூம் மௌலானா ஆகியோர் தமது வாதப் பிரதிவாதங்களை முன் வைக்கின்றனர்.

சமூகத்தை சீராக கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஆதங்கத்தில் செயற்பட்டுவருபவர் எமது ஸ்தாபனத்தலைவர் எஸ்.எச் மௌலானா ஆவார்கள். கருத்தியல் ரீதியாகவும், செயல்ரீதியாகவும், வார்த்தை ஜாலங்கள், நழுவல்கள் தவிர்க்கப்பட்டு கருத்தியல் ரீதியாக எதுவும் முன்வைக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் அவரது ஆக்கம் தரப்பட்டுள்ளது. தமது கருத்துக்களோடு முரண்படுபவர்களோடு இதமாகப் பேசி பதிலளிப்பது போல அவரது ஆக்கம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாகத்தில் இடம் பெற்றுள்ள ஏனைய ஆக்கங்களைத் தந்துள்ள எழுத்தாளர்களும் தமது கருத்துக்களை தமக்குரிய பாணியில் இங்கே முன்வைத்துள்ளனர். அவற்றுள் பெரிய விளக்கங்கள் கூட வழமையை விட தெளிவாக இம்முறை தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையால் முஸ்லிம் மாணவர்கள் பாதிப்பு என்ற ஒரு விசேட ஆக்கமும் இப்பாகத்தில் சேர்க்கப்பட்டது. இதனை வெலிகம - ஹனா மாணவன் எழுதியுள்ளார்.

இந்த இதழ் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஸ்தாபனம் எதிர்பார்கின்றது. எந்தவொரு கருத்தாக இருந்தாலும் அவற்றைக் கத்தரிக்காமல் சித்தரிக்க வைப்பதே எமது ஒரே நோக்கீடு, இலக்கு. நன்றி

*திக்குவல்லை ஸப்வான்*
*பதிப்பாசிரியர்*
*2007-06*

தொடர்புகளுக்கு :

DICKWELLA SAFWAN
SECRETARY
MILLENNIUM EDUCATION FOUNDATION
KAPUWATTA, WELIGAMA
PHONE : 041-2250826, 0779172959



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டை உள்ள இயக்கங்கள் ஏகத்துவத்தை வளர்த்திடுமா?

ஏகத்துவத்தின் அறக்காவலர்கள் என்று பெருமிதத்துடன் மார்பு தட்டிக்கொண்டு தௌஹீத் என்ற உன்னதமான ஏகத்துவக் கொள்கையை நாசம் செய்து வரும் இயக்கங்கள் இன்று பல்வேறு மூலை முடுக்குகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இன்று ஒரு சில ஏகத்துவக் கொள்கை, கொள்கைவெறி பிடித்து அவையும் ஒரு சில உலமாக்களாலும், ஈனர்களாலும் அதன் தூய்மை இழந்து சீரழிந்து சின்னாபின்னம் செய்யப்பட்டு வருவதை வெளிப்படையான உண்மையாக காண முடியுமாக உள்ளது.

இறைவனின் இறைமறையுடனும் இறைத் தூதரின் ஸுன்னாவுடனும் பின்னிப் பிணைந்தது நம் வாழ்வு "உத்தம நபியின் உயரிய ஸுன்னாக்களை உயிர்ப்பிப்போம்." "உயிரிழந்த ரீக் பித்அத் போன்றவற்றுக்கு எதிராய் குரல் கொடுப்போம்" என்பது இவர்களது வெளிப்படையான தோற்றம். இறைமறை வாழ்வுடனும் ஸுன்னாவுடனும் பின்னிப் பிணைந்து நம் வாழ்வு என்று கூறிக்கொள்ளும் இவர்களது உள் தோற்றத்தை அலசி ஆராய்வதன் மூலம் உண்மையை விளங்கி நம் ஈமானைப் பாதுகாக்கலாம் என்ற நோக்கில் சில உண்மைகளை முன்வைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய இயக்கவாதிகளது முக்கியமான ஒரு வாதமே "அல்குர்ஆனை உலமாக்கள் உட்பட எல்லோராலும் விளங்க முடியும்" என்பது இதற்குப் பிரதிவாதமே "அல்குர்ஆன் உலமாக்களால் மாத்திரம் விளங்க முடியும்" என்பது எவர்கள் உலாமாக்களால் மாத்திரம் என்றார் களோ? அவர்கள் பூண்ட கொள்கையில் உறுத்தாய் நிற்கின்றார்கள். எவர்கள் உலமாக்கள் உட்பட எல்லோராலும் என்றார்களோ அவர்கள் வெறுமனே வாய்ச்சொல்லில் வீரர்களாகவும் செயற்றிறன் அற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். இத்தகைய வாதத்தை முன்வைத்தவர்கள் இறை மறையை உண்மையாகவே விளங்கியெடுத்து ஆராய்ந்தார்கள் என்றால் இன்று எத்தனை பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்திருக்கும்? எத்தனை நோய்களுக்கு வைத்தியம் கிடைத்திருக்கும்.? இவர்களில் எத்தனை விஞ்ஞானிகள் உருவாகி இருப்பார்கள்? உண்மையில் இவர்கள் விளங்கி யெடுக்கக் கூடிய ஆற்றல், அறிவு கிடையாதவர்களாய்த் திகழ்கின்றார்கள்.

ஏதோ ஏகத்துவத்தை வளர்க்கும் இயக்கத்தில் இணைந்து விட்டோம் என்ற எண்ணத்திலும், எல்லாம் தெரியும் என்ற ஜாஹிலியப் பண்பிலும் இருக்கின்றார்களே, தவிர ஏகத்துவத்தை வளர்த்து இஸ்லாத்தை எதிர்காலம் பெற வழிசெய்கின்றார்கள் என்றால் இல்லை என்றே கூற வேண்டும் இவ்வாறு செயற்றிறன் அற்ற இவர்கள் "ஏகத்துவத்தின் அறக் காவலர்கள்" என்று மார்புதட்டிக்கொள்ள தகுதியானவர்களா? என்றால் அதுவும் இல்லை என்றே கூறவேண்டும்.

வெறுமனே இவர்களது இயக்கத்தின் ஒரு சில உலமாக்களது போதனைகளை மிம்பர் மேடைகளிலும் CDக்களிலும் கேட்டுவிட்டு இஸ்லாமிய வரலாற்றில் பலவற்றை மறுத்தும் பேசும் இவர்களது பண்பு இஸ்லாத்துடன் நோக்கினால் மிகவும் கீழ்தரமானதே. உதாரணமாக கூறு வதாக இருந்தால் "ஸூபித்துவம்" என்ற சொல்லை அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் காணமுடியாததாக உள்ளதால் ஸூபித்துவம் இஸ்லாத்தில் இல்லை என்று கூறி இஸ்லாமிய வரலாறுகளை மறுக்கும் இவர்களது அறிவீனத்தை பற்றி என்ன நினைக்கின்றார்கள்.?

ஆத்மஞானிகள் என்று சொல்லப்படும் ஸூபிகள் புகழை விரும்பாத பற்றற்ற வாழ்வை மேற்கொண்டாலும், இஸ்லாமிய மறுமலர்ச்சிக்காக அவர்கள் ஆற்றிய பணிகளை இஸ்லாமிய வரலாற்று நூல்களில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்ள முடியுமாக உள்ளது. "ஸூபித்துவம்" என்பதை ஆராய்ச்சி செய்த கலாநிதிகள் எத்தனையோபேர் இருந்தும் அறிவுக் கண்கள் மூடப்பட்டதால் அதனை மறுக்கும் இவர்கள் எவ்வாறுதான் ஏகத்துவப் பணியைச் செய்வார்களோ தெரியவில்லை, சென்ற பல நூற்றாண்டுகளிலும் ஸூபீமகான்கள் தரீக்காக்களுடன் இணைந்தே பெரும்பாலான பணிகளை இஸ்லாத்திற்காக மேற்கொண்டு இஸ்லாத்தை உயிர்பித்தார்கள். தரீக்காக்கள் தடம் புரண்டவை என்று தரீக்காக்களை வேரோடு வெறுக்கின்ற காரணத்தினால் இந்த ஸூபித்துவம் பற்றி இஸ்லாமிய வரலாறுகளை மறுக்கிறார்களோ தெரியவில்லை. வெறுமனே கொள்கை வெறிபிடித்து அலையும் இவர்கள் அல்லாஹ்வைப் பயந்து மறுமையை எண்ணிய வாழ்க்கையை உண்மையில் வாழ்ந்து வருகின்றார்கள் என்றால் இத்தகைய வரலாற்று உண்மைகளை சுய இலாபங்களுக்காக மறுக்கமாட்டார்கள்.

இஸ்லாம் ஸூபி மகான்களால் உயிர்ப்பிக்கப்பட்டு சிறந்த பொற் காலத்தை உலகுக்கு வழங்கியது. இவ்வாறு ஸூபி மகான்களது பணிகளை யும் ஸூபித்துவத்தையும் மறுக்கும் சிந்தனைத்திறன் கற்ற உலமாக்கள் மத்ரஸாக்களில் 7 வருடம் 8 வருடம் என்று பொன்னான காலத்தை எந்தவிதத்தில் கழித்து அறிவீனத்தின் நாயகர்களாக விளங்குகிறார்களோ தெரியவில்லை. வெறுமனே கொள்கை வெறி பிடித்து அலையும் ஒருசில உலமாக்களது CD க்களை கேட்டுவிட்டு அப்படியே எற்றுக்கொள்ளும் பழக்கத்தை விட்டு இஸ்லாமிய வரலாறுகளை கூறும் நூல்களைப் படித்து இஸ்லாமிய வரலாறுகளை அறிந்து தங்களை சீரழிவில் நின்றும் காப்பற்றிக் கொள்வதை அவர்கள் முதற்கடமையாக செய்ய வேண்டும்.

தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகரான இல்யாஸ் (ரஹ்) அவர்களும் ஜமாத்தே இஸ்லாமியின் ஸ்தாபகரான மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களும் பெயர் பொறிக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு ஏகத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்ட இயக்கங்கள் உலகரீதியான ஓர் ஸ்தாபகரை கொண்டுள்ளது. தௌஹீத் ஜமாஅத்தின் உலகரீதியான ஸ்தாபகர் யார் என்று வினவினால் யாருமே இல்லை என்றே கூற வேண்டும். இவ்வாறு ஸ்தாபகரையும் ஆன்மீகத் தலைவரையும் தன்னகத்தே கொண்டிராத இந்த இயக்கம் ஏகத்துவத்தை முறையான வழியில் கொண்டு சென்று வெற்றி பெறுமா என்பது கேள்விக்குரியவிடயம். முறையான தலை மைத்துவம் இல்லாத இத்தகைய இயக்கங்கள் ஏகத்துவப் பிரச்சாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு எதிர்காலத்தில் இஸ்லாத்திற்கு மகுடம் சூட்டிடுமா என்பதும் கேள்விக்குரிய விடயமே.

"மீன்புழுத்தால் உப்புப்போடலாம். உப்புப்புழுத்தால் எங்கு போவது? பொது ஜனங்களை சீரழிவில் நின்றும் காப்பவர்கள் உலமாக்கள்! இந்த உலமாக்களே சீரழியத் தொடங்கினால் ..............?" என்று மர்ஹூம் மௌலவி மஸூத் ஆலிம் அவர்கள் அன்று கூறிய கூற்று தௌஹீதின் அறக்காவலர் கள் என்று மார்பு தட்டிக்கொள்ளும் வெறிபிடித்த ஒரு சில உலமாக்களுக்கு மிகவும் பொருத்தமானதே.

உண்மையில் இத்தகைய ஒரு சில உலமாக்கள் ஏகத்துவப் பிரசாரம் என்ற போர்வைக்குள் சீரழிந்து வருகின்றார்கள். பொது ஜனங் களையும் சீரழிவுக்குக் கொண்டு வருகின்றார்கள் என்பது வெளிப்படையான உண்மை. இவ்வாறான சீரழிந்த ஒரு சில உலமாக்களுக்கு தலைமைத் துவப்பதவிகளை வழங்கலாமா? வழங்கினாலும் சரியான முறையில் ஏகத்து வத்தை வளர்ப்பார்களா? என்றெல்லாம் கேள்விகளை உருவாக்கியது ஒரு சில உலமாக்களின் நடத்தைகளே. கம்பெடுத்தவன் வேட்டைக்காரன் என்பது போல தௌஹீதை வளர்க்கின்றோம் என்று வெறுமனே வாய்ச் சொல்லால் வீரர்களைக் கொண்ட இயக்கத்தில் இணைந்து கொண்டு நேர்வழியில் இருக்கின்றோம் என்று கீழ்த்தரமான உணர்வுகளை கொண் டுள்ள ஒரு சில உலமாக்களும் கொள்கை வெறிபிடித்து அலையும் ஈனர் களும் தங்களை தாமே சுய விசாரணை செய்து சுய இலாபங்களை விட்டு விட்டு உறுதியான ஈமானோடு தீனுக்கு உழைப்பார்கள் என்றால் நிச்சயமாக, சத்தியமாக எதிர்காலம் இஸ்லாத்திற்கே என்பதில் ஐய மில்லை.

மேலும் கந்தூரி, பாத்திஹா என்றெல்லாம் மரபு முறையில் பையை நிறைத்துக்கொண்டு சீரழிந்த உலமாக்கள் இன்று ஏகத்துவப் பிரசாரம் என்ற போர்வைக்குள் நவீன முறையில் பை நிறைக்கிறார்கள். அதுமட்டு மல்ல நவீன ஜாஹிலியத்தின் ஜனனதினத்தையும் கொண்டாடி வாழ்கின்றார் கள் தேவ விசுவாசம் என்று ஒன்றில்லை என்று கூறியவர்களுக்கு 33 கோடி தெய்வங்கள் உண்டு என்பது போல மத்ஹப்கள் தேவை இல்லை என்று கூறும் இவர்களிடம் திட்டங்களும் இல்லாமல் முரட்டுப்பாதையில் முகம் கவிழ்ந்த வண்ணம் பயணிக்கும் இவர்கள் தௌஹீதுக்கு பொற் காலத்தை பெற்றுக் கொடுப்பார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமரம் போன்ற விசாலமான பரந்த இஸ்லாத்தை வேரோடு வெட்டிச் சாய்க்கும் கோடாரிகளாக ஏகத்துவத்தின் பெயரில் நாடகமாடும் இயக்கங்கள் திகழ்கின்றன. கருத்து வேற்றுமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் சமூகத்தின் ஒற்றுமையைக் கருதி நபி (ஸல்) நடந்து கொண்ட சம்பவங்கள் ஏராளம். இத்தகைய நபி (ஸல்) அவர்களின் ஸுன்னாவைப் புறக்கணித்து தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிற்பவர்கள் இறைத்தூதரின் சுன்னாவுடன் பின்னிப் பிணைந்த வாழ்க்கை வாழ்கின்றோம் என்கிறார்களே இதை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? இவர்களது அழைப்புப் பணிகளில் நாம் இணங்காமா? இவர்கள் அண்மைக் காலங்களில் படைத்த மோசமான வரலாறுகளில் இருந்து இவர்களது உள்தோற்றத்தை புரிந்து கொள்ளலாம். இத்தகைய கொள்கைவாதிகளது ஒரு சில உலமாக்களுடன் சிந்தனைப்புரட்சிகளை அலைபாய விடும் போது சிந்தனைகளுக்கு சீல் வைத்திட நினைக்கும் இவர்கள் ஏகத்துவத்தின் காவலர்களா? ஏகத்துவப் பிரசாரம் என்று கூறிக்கொண்டு இயங்கிவரும் இயக்கங்கள் கந்தூரிகளையும், கத்தத்தையும், கப்றுவணக்கத்தையும் பித்அத் என்று புறம் தள்ளுகின்றார்கள். இவைகளே இவர்களுக்கு பித்அத்துக்கள் ஆனால், அவர்கள் நவீன முறையில் பித்அத்துக்களை செய்து வயிறையும் பையையும் நிறைத்து தங்களுக்கான குழியை தாமாகவே வெட்டிக் கொள்கின்றார்கள்.

அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்கள் புரட்சி உள்ளங்களை நோக்கி எழுச்சியூட்டிப் பாடிய பாடல்களது மறுதலையே இன்றைய போலிப்புரட்சி வாதி நோக்கிப் பாடவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஓ: சமுதாய இருட்டே குருட்டு சமூகத்தின்
மகா இருட்டே நீ
நாளைய நொன்டிச் சமூகத்தின்
தினிழற்ற அனாதைச் சமூகத்தின்
தீவிரவாதியே
பாமர சமூகத்தின் பாவியாய்
வலம் வருபவனே!

திடகாத்திரமற்ற தாழ்ந்த உள்ளங்களை நோக்கி இப்படியும் ஒரு பாடல் பாடப்படுமேயானால் நாளைய சமூகத்தின் நிலை கேள்விக்குரியதே. அத்தனையும் போலிப் புரட்சிவாதிகள் ஏகத்துவத்தை நாடக மேடையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நடிக்கும் நாடகங்களே. தௌஹீத் என்ற கயிற்றை போலிப் பிடிப்புடன் பிடித்திருக்கும் தீவிரவாத இயக்கங்கள் நேர் வழியைப் பெற்று ஏகத்துவத்தை உயிர்ப்பிப்பது எப்போதோ தெரியவில்லை.

CDக்களுடன் மாத்திரமே நின்றுவிடாமல் அல்குர்ஆனை விளங்கக் கூடிய அறிவையும் சக்தியையும் பெற்று அல்குர்ஆனையும் விளங்கி அராய்ந்து பல்வேறு நூல்களையும் வாசித்து ஸுன்னாவை முழுமையாக பின்பற்றி ஏகத்துவத்தை வளர்க்கும் இயக்கமாக இத்தீவிரவாத இயக்கம் மாறினால் நிச்சயமாக எதிர்காலம் இஸ்லாத்திற்கே. எனவே எகத்துவக் கொள்கையில் நாம் இருக்கின்றோம் நேர்வழியில் இருக்கின்றோம் என்று பெருமிதத்துடன் மார்புதட்டிக் கொள்ளும் ஒரு சில உலமாக்களும் கொள்கை வெறிபிடித்த ஈனர்களும் தாம் இருக்கும் நிலையை அறிந்து தங்களைத் திருத்திக்கொள்வார்கள் என்றால் நிச்சயமாக சத்தியமாக உறுதியானதும் கூர்மையானதுமான வெற்றி இஸ்லாத்துக்கே.

M.AM. ஆதில்
கபுவத்த
தெனிபிடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர் தபால்

கருத்துக்கண்ணோட்டம் - 3 படித்தேன். வானொலி நிகழ்ச்சியும் கேட்டேன். ஒரே வார்த்தையில் சொல்வதானால், அபாரம்! மிக நன் றாய் செய்கின்றீர்கள். மறையக்கூடாத, மறைக்கக் கூடாத பொக்கிஷங் கள் தான் தமது இஸ்லாமிய கலாச்சாரம் அதன் வேர்கள்! அவற்றை யெல்லாம் தேடிப்பிடித்து வாசகர்களுக்குத் தருவதில் நீங்கள் காட்டும் கரிசனை, ஆர்வம் பிரமிக்கத்தக்கது. மிக நன்றாக செய்கிறீர்கள். கருத்துக்களை எதிர்ப்போரைக் கூட விருப்புக்களோடு அணுகும் மனப்பாங்கு எந்தவொரு எழுத்தாளருக்கும் வராத குணப்பண்பாகும். கருத்தும் செயல்பாடும் ஒன்றாக அமைந்து செயல்படுவோர் அபூர்வம். அந்தவகையில் இரண்டும் ஒன்றிணைந்து செயற்படும் பணியைப் பாராட்டுகின்றேன். மனந்திறந்து வாழ்த்துகின்றேன்.

கீதை, பைபிள், தம்பதம் போன்ற பிற வேதங்களிலிருந்து உதாரணம் காட்டும் உங்கள் துணிவு மெச்சத்தக்கது. பிற மதங்களை யும் மதிக்கின்ற மனப்பாங்கு நம்மில் அருகி வருவதனாலேயே சமாதானத்தை சிதறடித்துத் தவிக்கின்றோம். சிறந்ததோர் பாதைக்கு எம்மை திசைதிருப்பும் உங்கள் எழுத்தின் அழுத்தம் உயிருள்ளது: நிலைத்து வாழும் தன்மை படைத்தது.

உங்கள் சிந்தனைபூர்வமான போக்கைத் தவறாகப் புரிந்து கொண்டு கொக்கரிக்கும் சில்லறைகளின் சலசலப்புக்கு தளரவேண்டாம். யார் கூக்குரலிட்டாலும் ஒட்டகம் தன் பயணத்தை நிறுத்தாது என்ற அறபுப் பழமொழியை ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

நல்லவன் கையில் நாணயமிருந்தால் நானிலம் மலரும்
வல்லவன் கையில் வலிமையிருந்தால் வாழ்வு மலரும்
மிலேனியம் கையில் பேனாவிருந்தால் அறிவு மலரும்,
உங்கள் முயற்ச்சி தொடர எனது வாழ்த்துக்கள்
செழுங்கிளை தாங்கும் இளங்காளைகளே வாழ்க வளர்க

*வாஞ்சையுடன்*
*முஹ்ஸின் மௌலானா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர் தபால்

மிலேனியம் கல்வி ஸ்தாபனம் அரங்கேற்றும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஒரு விசேட தன்மையை உணர்ந்தேன். திறமைகள் தூங்கும் போது அதனைத் தட்டி எழுப்பி ஓங்கி மிளிரச் செய்யும் உன்னத தன்மைதான் அது. அண்மையில் நடந்த மிலேனியம் கல்விஸ்தாபனத்தின் மீலாத்விழா நிகழ்ச்சியின் போது அதனை நேரடியாக அறிந்துகொண்டேன்

எமது முன்னேற்றங்களை மதித்தல், கலாசாரங்களை பேணுதல், பெருமானாரை கௌரவித்தல் போன்ற விடயங்களில் காட்டிய கரிசனை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. உங்கள் ஸ்தாபனம் பற்றிய பொய்ப்பிரசாரங்கள் பிசுபிசுப்பதை நேரடியாக அறிந்து கொண்டேன்.

தூங்கும் வேளைகளில் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு இறைவனின் வல்லமையை, பெருமானாரின் நற்பண்புகளை இயற்றுவது என் பழக்கம். தாளும் பேனாவுமாக தயாராகும் என்னைப் பார்த்து எனது மனையாள், நீங்க என்ன பெரிய கவிருரா பேசாமல் படுங்க என்பாள். என்மனம் வேதனையால் துடிக்கும். எனது திறமைகளை உறவுகளே உதறியெறியும் போது யார்தான் தட்டிக் கொடுப்பார்கள் என்று ஏங்கிப்போவேன்.

இவ்வாறு எனது தைரியம் உடைந்து தூங்க ஆரம்பித்த கட்டத்தில்தான் உங்கள் மிலேனியம் கல்வி ஸ்தாபனம் எனது உள்ளக் கதவை தட்டி எழுப்பியது தூங்கியது போதும் துடித்தெழுங்கள், சந்தர்ப்பம் தர நாங்கள் தயார் என்பது போல அன்றைய மீலாத்தின வி'ட நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சியில் எனது திறமையை நன்கு வெளிக்கொணர ஒத்துழைத்தார்கள். பேட்டிகண்டு ஊக்குவித்தார்கள் பாடல்களை பாடவைத்துப் பாராட்டினார்கள்.

சகலரையும் சமமாய் கணித்து சரிநிகர் காணும் ஸ்தாபனத்தை வேறு எங்கும் காண முடியாது என்பது என் உறுதியான கணிப்பு. புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்: போற்றுவார் போற்றட்டும். நீங்கள் செல்லும் பாதை சரியான பாதையே எனக் கூறி விடைபெறுகின்றேன்.

M.A.M.JAUFAR
26, WELLAWATTA ROAD, WELIPITIYA WELIGAMA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அன்றும் இன்றும் ஒன்றே

இஸ்லாமிய உலகத்தில் தற்போதைய நிலமையை நன்கு நோட்டம் விடுகின்றபோது, உலகத்தில் எல்லாப் பகுதிகளிலிருந்தும், இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக, புலனாகாத ஒரு போராட்டம் இடைவிடாது நடைபெற்று வருகின்றது என்பது தெளிவாகும். பகிரங்கமான அதன் எதிரிகள் நாம் அறியமுடியுமென்றாலும், இஸ்லாத்தின் பெயராலேயே இஸ்லாமிய சமூகத்தில் அரசியல், பொருளாதார, சமூக, மற்றும், கலாச்சார பணிகளிலிருந்து இறைவனின் ஆதிக்கத்தை நீக்கிட, அந்நிய நாட்டுப் பகைவர்களைவிட இஸ்லாமிய ஆட்சிபீடங்களில் அமர்ந்திருக்கும் இந்த சர்வாதிகாரிகளே முன்னணியில் உள்ளனர். இறைபக்தர் வேஷம் போடும் வெறிபிடித்த பிற்போக்கு வகாபிய முல்லாக்களினாலும், அவர்களது கையாட்களினாலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற ஆபத்தை நாம் குறைத்து எடைபோட முடியாது.

அன்று முதல் மூன்று கலீபாக்களினாலும் மலையென நின்ற உரோமர்களும், பாரசீகர்களும் தோற்கடிக்கப்பட்டார்கள். பின் உமையாக்களாலும், அப்பாஸியாக்களாலும், இந்து சமுத்திரம் அத்திலாந்திக் சமுத்திரம் வரை விரிந்து பரந்து கிடந்த நிலப்பரப்பைக் கைப்பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை உலகை வியப்பில் ஆழ்த்தும் அந்த மாபெரும் வெற்றியைத் தந்தது, இஸ்லாமும், அதன் சமத்துவக் கொள்கையுமே. பல சர்வதிகாரிகளிடமும், அடிமைப்பட்டு விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருந்த அந்த மக்களை இஸ்லாமிய சமத்துவக் கொள்கை இலேசாகக் கவர்ந்ததில் வியப்பேதும் இல்லைதான். சர்வாதிகாரிகளை வீழ்த்தி வெற்றிகண்ட இந்த சர்வாதிகார கலீபாக்களிலிருந்துதான் அன்றைய மக்களிடம் இஸ்லாம் போய்ச் சேர்ந்ததா? என்பது தான் கேள்வி.

ஏனெனில், சர்வாதிகாரத்துக்கு எதிரான கொள்கையல்லவா இஸ்லாம் கொண்டுள்ளது.

எந்த நாடுகளிலெல்லாம் இவர்களது ஆட்சி அதிகாரங்கள் பரவியிருந்ததோ, அந்நாடுகளில் புதிதாக இஸ்லாத்தை அறியவரும் மக்கள் தம்மை ஆள்பவர்களான கலீபாக்களுக்கு விசுவாசிகளாக இருந்து வர வேண்டும் என்பது தான் அவர்களுக்கு தேவை.

அந்த வகையில் இஸ்லாமிய பெயர்தாங்கிய (ஒரு சில கலீபாக்களைத் தவிர) இந்த சர்வாதிகாரிகள், அவர்களது ஆட்சி முறையை நியாயப்படுத்த, தம்மை நபிவழி நடக்கும் நேர்மையாளர் களாக காட்டி, தம் வழி நடப்பதிலே ஸுன்னத்துவல் ஜமாத் என்ற குழு சித்தாந்தத்தை இஸ்லாமிய கொள்கைகளை அறியவரும் அந்த நல் முஸ்லீம்களுக்கு அறிவு ஊட்டப்பட்டு வந்ததில் வியப்பேதும் இருக்க முடியாது.

இந்த மிகப்பெரும் குபுரில் இஸ்லாத்தை கேடயமாகக் கொண்டு மறைந்திருக்கும், இந்த சர்வாதிகாரிகளுக்கும், இவர்களது போலி ஏஜன்ட்களுக்கும், தலைவணங்காதவர்கள், முர்ததுகளாக, இஸ்லாமிய கொள்கை, நபி வழி (சுன்னத்)க்கு மாறானவர்களாக சித்தரிக்கப்பட்டு மக்கள் மனங்களில் அன்றில் இருந்து இன்று வரை பரப்பப்பட்டு வருகிறது.

இந்த உலக ஆசைபிடித்த போலி வேஷதாரிகள் தான் இஸ்லாமிய கேடயத்துக்குப் பின்னால் மறைந்திருக்கிறார்கள் என்பதை அறியாத நல் முஸ்லீம்கள், மார்க்க அறிஞர்கள், நபிவழி முறைகளை அறிய வந்தவர்கள் இவர்களுக்கெல்லாம், இந்தக் கலீபாக்களை விசுவாசித்த இவர்களது தோழர்கள், ஆதரவாளர்களால், இந்த ஆட்சியாளர்களை பரிசுத்தவான்களாக மேன்மைப்படுத்தியும், இவர் களுக்கு எதிரானவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலினப்படுத்தியும் ஹதீஸ்கள் உருவாக்கப் பட்டன, தீர்க்கப்பட்டன, இந்த சூழலில் வாழும் மார்க்க அறிஞர்களால் சில திருக்குர்ஆன் வசனங்களுக்கும் இந்த ஹதீஸ்கள் ஆதாரமாகக் கொண்டு விளக்கம் அளிக்கப்பட்டன. இதுவே உண்மையாக்கப்பட்டு காலம், காலமாக அன்றிலிருந்து இன்றுவரை வந்து, துய இஸ்லாமாக பரிணாமம் பெற்றுள்ளது.

இஸ்லாத்தை பள்ளிவாசலுக்கும், வீட்டுக்கும் வரையறுத்து தொழுகை, இறைவனைத் துதிப்பது, இன்னும் பல வணக்க வழிபாடு கள் குர்ஆன் ஓதவும் அதை முத்தமிட்டு வைப்பதால், இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெறமுடியும், என்பன போன்றவைகளுக்கு முக்கியத் துவம் கொடுத்து, அரசியல், பெருளாதார, கலாச்சார சமூகப் பணிக ளில் இஸ்லாமிய கொள்கைகளை இந்த மக்கள் மனங்களில் இருந்து திசைதிருப்பிடவும், அதேநேரத்தில் இஸ்லாமிய முகமூடிதரித்த நயவஞ் சகர்களுக்கு எதிராக நின்றவர்களான நபி பெருமானாரது குடும்பத்தவர் களான அஹ்லுல் பைத்துகளையும் அவர்களது குடும்ப வழிவந்த இமாம்கள் பனூா ஹாஷீம்கள் சாதாத்களையும், கொன்றொழித்தார் கள். அவர்களைப் பின்பற்றியவர்களும், சித்திரவதைகளுக்குள்ளாக்கப் பட்டார்கள், உயிருடன் புதைக்கப்பட்டார்கள்.

நபிகளாரின் குடும்பத்தவர்களான அந்த தியாகிகளின் கல்ல றைகளில் நின்று அவர்கள் நினைவு கூர்வதுவும், கண்ணியப்படுத்து வதுவும், கூட ஷிர்க்காகவும், பித்ஆவாகவும், இவர்களது விசுவாசிக ளான போலி உலமாக்களால் ஏற்கனவே இவர்களால் உருவாக்கப் பட்ட ஹதீஸ்கள், குர்ஆன் விளக்கங்களை கொண்டு பரப்பப்பட்டது.

தௌஹீதின் அசல் மலினப்படுத்தப்பட்டு குபுரும், சிர்க்கும், திசைதிருப்பப்பட்டுள்ளதால்தான் இன்றுவரை இஸ்லாமிய வேஷம் தரித்திருக்கும். அல்லாஹ்வின் விரோதிகளான இந்த சர்வாதிகாரிகள் ஆட்சிபீடங்களில் இருக்கிறார்கள்.

இந்த திசைதிருப்பப்பட்ட இஸ்லாத்தின் காவலர்களை இனம் காணமுடியாமல் பித்ஆவையும், ஷிர்க்கையும் இரு கரங்களில் ஏந்திக் கொண்டு, தௌஹீதை நிலைநாட்டுவது என்ற பெயரில் மிகப்பெரும் குபுருக்கும் அதன் அதிவிசுவாச உலகாசை பிடித்த போலி உலமாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், அவர்களது கவர்ச்சிப் பேச்சுக்கும் எழுத்துக்கும் விலை போய்க் கொண்டிருக்கிறார்கள் எமது வஹாபிய சகோதர சகோதரிகள்.

திருமறை மூலம் நபிமார்களின் வரலாறுகளை இறைவன் எமக்கு எடுத்து இயம்பும்பொழுது, அந்த நபிமார்கள் ஒடுக்கப்பட்டவர்க ளுக்கு ஆதரவாகவும் அவர்களின் காலங்களில் வாழ்ந்த கொடுங் கோன்மை சர்வாதிகாரிகளுக்கு எதிராகவே தௌஹீத் என்ற கொடியின் கீழ் நின்று போராடியதாகத்தான் சொல்கின்றனரே தவிர வெறும் தொழுகை, நோன்பு, இன்னபிற வணக்கங்களுக்காக அல்ல என்பதை அறிகிறோம்.

இந்த தௌஹீதை நிலைநாட்டத்தான் எமது இறுதி நபி (ஸல்) அவர்களும் அவர்களைப் பின்பற்றி நேர்வழி நின்ற அவர்களது உத்தமத்தோழர்களது யுத்தங்களும், போராட்டங்களும், உயிர்த் தியாகங்களும் நடந்தனவே தவிர தொழவில்லை, நோன்பு நோற்க வில்லை, வணக்க வழிப்பாடுகளில் குறை, நிறை என்பதற்காக அல்ல.

எமது இறுதி நபி (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களது குடும்பத்தவர்களான அஹ்லுல் பைத்துகள், அவர்கள் வம்சாவழி வந்த இமாம்கள் ஸாதாத்துக்கள் அவர்களைப் பின்தொடர்ந்த தோழர் கள் அனைவரும் கூட இதைத்தான் இஸ்லாத்தின் தௌஹீதாகக் கொண்டு, இந்த இஸ்லாம் பெயர் தாங்கிய போலி கொடுங்கோன்மை, சர்வாதிகாரிகளுக்கு எதிராகப் போராடினார்கள். எதிர்த்து நின்றார்கள், உயிர்தியாகங்கள் புரிந்தார்கள் மறைக்கமுடியாத வரலாற்று உண்மை கள் இவை.

எப்படி நபி மூஸா (அலை) அவர்கள் துர்ஸினா மலையிலி ருந்து திரும்புவதற்குள், அவர்களது தோழர்கள் மாறிவிட்டிருந்தார்களோ, அப்படித்தான் இறுதி நபி (ஸல்) அவர்களது மறைவுக்குப்பின் அன்றைய பெரும்பாலான அரேபியர்களுக்கும் உலக ஆசைப்பிடித்துக் கொண்டது. கனிந்து வரும் இளம் இஸ்லாத்தை பாதுகாக்கும் பொறுப்பை நபிகளாரின் பரிசுத்தக் குடுப்பத்தவர்கள் ஏற்றுக்கொள்கி றார்கள். விளைவு, அந்தப் புனிதர்கள் நஞ்சூட்டப்பட்டும், வெட்டப்பட் டும், கொல்லப்படுகிறார்கள். நாடோடிகளான இந்த அரபியர்களுக்கு ஒரு சிறப்பு உலக அரங்கில் கிடைத்ததென்றால் அது யாரால் என்றுக் கூடப்பாராமல், எந்த இஸ்லாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கொண்டு ஆட்சிகளில் அமர்ந்திருக்கின்றார்களோ அந்த இஸ்லாத்தின் பாதுகாவலர்களைத் தான், நெஞ்சில் கொஞ்சமும் ஈரமில்லாமல் கொன்றொழித்து உண்மை முஸ்லிம்களாக வேடந்தரித்துக் கொண்டார்கள்.

நபிகளாரின் காலத்திலேயே பனூ ஹாஷீம்களை அழித்து ஒழிப்பதற்கு அபூ சுப்யான் இபுனு முஆவியாவிலிருந்து தொடர்ந்த முயற்சி, அப்பாஸியாக்களாலும் பழிதீர்த்துக் கொள்ளப்பட்டன.

நபிமார்களைக் கொன்றது, கொடுமைப்படுத்தியது, அவர்களை ஏற்க மறுத்தது அவர்கள் கொண்டு வந்த வேதங்களை, மாற்றியது, திருத்தியது என்பதற்காகத்தான், யூதர்களின் ஒரு சாராரை சபிக்கப் பட்டவர்களாக அல்லாஹ் திருமறையிலே இயம்புகிறான். அப்படியெ னின் நபிமார்களின் தலைவரான இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களது வழிவந்த அஹ்லுல் பைத்துகளை நபிகளாரிடமிருந்து அறிவுஞானத்தை நேரடியாகப் பெற்று அவர்களையும் அவர்களின் வாரிசுகளான இமாம்கள், ஸாதாத்துகள், அவர்களைப் பின்பற்றியவர் களுக்கு வரலாற்றில், மறைக்க மறுக்க முடியாத, யூதர்களும் வெட்கித் தலைகுனியும்படி செய்த கொலைகளுக்கும், கொடூரங்களுக்கும் இந்த புண்ணியவான்களின் அந்தஸ்துகளை தாழ்த்தி தங்கள் அந்தஸ்துகளை உயர்த்திக் கொள்வதற்காக பெருமானாரது வாய்மொழிகள் அவர் களுக்கு சார்பாக திசைதிருப்ப போலி ஹதீஸ்களையும் சில குர்ஆன் வசனங்களுக்குக் கூட இவர்களுக்கு சார்பாக விளக்கங்களையும் அளித்து இஸ்லாமிய உம்மத்தை திசைதிருப்பிய இந்த அரேபியர்களை அல்லாஹ் மான்னிப்பானா?அன்றைய வரலாறு முடிந்துவிடவில்லை. அது இன்னும் தொடர்கிறது வஹாபிஸ போர்வையைப் போர்த்திக் கொண்டு.

ஆனால் ஒரு வித்தியாசம், இன்றைய இந்த இஸ்லாமிய வேடதாரிகளுக்குப் பின்னால் இருந்து செயல்படுவது, இறைவனால் சபிக்கப்பட்ட ஸியோனிச யூதர்கள் இந்த ஸியோனிச, வஹாபிகள் இரு கூட்டங்களையும், இஸ்லாத்தை உலக அரங்கிலிருந்து துடைத்து எறிவதற்காக உலக மேடையில் நிறுத்தியது, யஹ்ஜூஜ் , மஹ்ஜூஜ் களான காலனித்துவ வாதிகள். இவர்களது கொள்கையையும், இவர் கள் எப்படி வஹாபிசம் மூலமாக இஸ்லாத்திற்குள் புகுந்து இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதி அரேபிய சுல்தானின் முன்னோடியான கடற்கொள்ளைக்காரன் இபுனு சவூதுடன் கூட்டுச் சேர்ந்து பலவீனப்பட்டிருந்த உதுமானிய பேரரசை வீழ்த்தி இஸ்லாமிய இராச்சியங்கள் கூறுபோட்டுக் கொண்டார் கள் என்பதன் சுருக்கத்தை சென்ற கருத்து சுதந்திர இதழில் அன்றும் இன்றும் ஒன்றே என்றத் தலைப்பில் அறிந்திருப்பீர்கள்.

முஆவியாவினது அரசவையால் அளிக்கப்படும் பதவி, பணம், இவைகளால் கவரப்பட்ட உமையா விசுவாசிகளான ஹதீஸ் உரைப்பவர்களால், புகுத்தப்பட்டு பரப்பப்பட்டு வந்த ஹதீஸ்கள், நபிகளாரால் சபிக்கப்பட்ட மூன்று கோத்திரங்களான பனூ உமைய, சகீம், பனூ ஹனீபா கூட்டங்களில் ஒன்றான பனூ ஹனீபா கோத்திரத் தில் வந்த முஹம்மது பின் அப்துல்லஹ்விடம் வந்ததன் விளைவுதான், உமையா அப்பாஸியாக்களுக்கு நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு மத்திய கிழக்கில் வஹாபிகள் ஆரம்பித்த, பித்ஆ, 'ஷிர்க். இந்தப்பாதகைகளுடன் இஸ்லாத்தை தூய்மைப்படுத்த? செய்த சேவைகளின் ஒரு சில சம்பவங்களை வஹாபிய தோற்றம் இரண்டாம் பாகத்தில் இருந்து எடுத்து தொகுத்துத் தருகிறோம். அதற்கு முன் இறைவனதும், இறுதிநபியினதும் கட்டளைப்படி திருக்குர்ஆனையும், தூய அஹ்லுல் பைத்துகளையும், அவர்களின் மூலமாக திருக்குர் ஆனுக்குரிய விளக்கம் நபி வழி (சுன்னத்) போதித்து பயிற்றுவிக்கப் பட்டு தொடராக வந்த அவர்கள் வாரிசுகளான இமாம்களை பின்பற்றி நடக்கும் கூட்டம் உலகெங்கும் பரந்து விரிந்து இருக்கிறார்கள் அவர்களால் தமது முன்னோர்களான ஸாதாத்துகள் ஞாபகப் படுத்தப்பட்டு அவர்கள் அடக்கஸ்தலங்களுக்குச் சென்று கண்ணியப் படுத்தியும் வருகிறார்கள்.

இஸ்லாத்தின் விரோதிகள் தம் இலக்கை அடைவதற்கு இவைகள் கூட பெரும் தடையாக இருப்பவை என்பதை நாம் ஹம்ரே யின் ரகசிய ரிப்போர்ட்டில் இருந்த ஒரு குறிப்பில் இருந்து துவங்கு கிறோம்.

நமக்கு மிகப்பெரும் கஷ்டமான காரியம் நல்லோர்களின் கப்ருகளை முஸ்லிம்கள் சென்று ஜியாரத் செய்வதாகும் இதற்காக நாம் பல்வேறு ஆதாரங்களைக் காட்டி முஸ்லீம்களிடம் கப்ருகளுக்கு முன்னுரிமை தருவதும், அங்கே செல்வதும் பித்அத்தும் ஷரீஅத்துக்கு மாற்றமான ஒன்றெனவும் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இறந் தோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குவதும், மற்றும் இதுபோன்ற காரியங்களும் வழக் கத்தில் இல்லாதிருந்ததென்றும் கூறி சிறிது சிறிதாக அக்கப்ருகள னைத்தையும் தகர்த்தெறிந்து அவர்களைத் ஜியாரத்து செய்வதை விட்டும் தடுக்கவேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர் தம் குடும்பத்தினர் மற்றும் அனைத்து நல்லோர்களும் இழிவுபடுத்தப்படுகின்றனர் என்று காரணம் கூறியும், இதுபோன்றே ஷிர்க், சிலைவணக்கம் போன்றவற்றை அழித்தொழிக்கிறோம் என்றும் கூறி, மக்கா, மதீனா, மற்றுமுள்ள நகரங்களிலுள்ள முஸ்லீம்களது ஜியாரத்துக்குரிய ஸ்தலங்களையும் மற்றும் கப்ருகளையும் முடிந்தவரை தகர்த்தெறிய வேண்டும்.

பல நூறுவருடங்களாக முஸ்லீம் அறிஞர்கள் கண்களுக்குப் படாத பித்ஆ, ஷிர்க் ஹதீஸ்கள் தான் இவர்களிடம் இருக்கின்றனவே பிறகென்ன, புனிதநகரங்களான மக்கா, மதீனாவில் மட்டும் அன்றைய தமது இஸ்லாமிய விரோதிகளான வஹாபிகள் செய்த அடாவடித் தனத்தைப் (இவர்கள் பாஷையில் இஸ்லாத்தை தூய்மைப்படுத்தல்) பாருங்கள். (முழு இஜாஸ் மாகாணத்தையும் இங்கு நாம் குறிப்பிடவில்லை)

முதலில் இவர்களால் சிதைக்கப்பட்ட கப்ருகளைத் தருகிறோம்,

**நபிகளாரின் இல்லப் பெண்மக்கள்.**

(1) ஹஜ்ரத் பாத்திமா (2) ஹஜ்ரத் ஜைனப் (3) ஹஜ்ரத் உம்மு குல்ஸூம் (4) ஹஜ்ரத் ருகையா பாத்திமா ஸீ∴றா (ரலி)

**நபிகளாரின் பரிசுத்த துணைவியர்கள்.**

(1) உம்முல் மு∴மினீன் ஹஜ்ரத் ஆயிஷா (2) உம்முல் மு∴மினீன் ஹஜ்ரத் ஜைனப் (3) உம்முல் மு∴மினீன் ஹஜ்ரத் ஹப்ஸா (ரலி)

**அஹ்லுல் பைத்தினரின் பிரபலமானவர்களின் கப்ருகள்.**

(1) நபிப் பேரர் இமாம் ஹஸன் (2) நபிப் பேரர் கர்பலாவில் ஷஹீதான இமாம் ஹுஸைனின் புனிதமிகு சியாரம் (3) சையிதினா இமாம் ஜைனுல் ஆபிதீன் (4) நபிகளாரின் மைந்தர் செயிதினா இப்ராஹீம் (5) ஹஜ்ரத் அப்பாஸ் (6) இமாம் ஜ∴பர் ஸாதீக்
(7) இமாம் முஹம்மது பாகீர் (ரலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரபலமான ஸஹாபாக்கள், தாபியீன்கள் கப்ருகள்.**

(1) அமீருல் மு.ஃ.மினீன் ஹஜ்ரத் உஸ்மான்
(2) சையிதினா உஸ்மான் பின் மழ்வூன்
(3) ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்.ஃ.ப்
(4) ஹஜ்ரத் ஸ.ஃ.த் பின் அபீ வக்காஸ்
(5) ஹஜ்ரத் இமாம் மாலிக் (6) ஹஜ்ரத் இமாம் நாபி.ஃ. (ரலி)

நினைவுச்சின்னங்களான மதீனாவிலுள்ள மஸ்ஜிதுகளையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை
(1) மஸ்ஜிதே பாத்திமா. மஸ்ஜிதே குபாவுடன் இணைந்தது. (2) மஸ்ஜிதே ஸனாயா. இது உஹத் மைதானத்தில் நபிகளாரின் புனித பல் ஷஹீதான இடத்தில் கட்டப்பட்டிருந்தது (3) மஸ்ஜீதே மினாரத்தைன் (4) மஸ்ஜிதே மாயிதா இது திருக்குர்ஆனிலுள்ள சூறா மயிதா இறங்கிய இடத்தில் கட்டப்பட்டிருந்தது. (5) மஸ்ஜிதே இஜாபா. இந்த இடத்தில் நபிகளாரின் ஒரு குறிப்பிட்ட துஆ கபூலாயிற்று

இதற்கெல்லாம் சிகரமாக நபிகளாரின் புனித ரவ்ழா ஷரீபின் மேற்கூரையைத் தகர்த்தெறிந்து நபிகளாரின் புனித மிகு கப்ரு 'ரீபின் மீது போர்த்தியிருந்த போர்வையை எடுத்தெரிந்துள்ளனர். ஒரு குறிப்பின்படி ஸவூத் இபுனு அப்துல் அஸீஸ் ஹிஜ்ரி 13ம் நூற்றாண்டில் மக்கா, மதீனாவைக் கைப்பற்றிய பின் நபிகளாரின் ரவ்ளாவிலிருந்த குப்பாவுக்கு மேல் இருந்த தங்கக் கவசத்தை எடுத்துக்கொண்டதாகவும் அதன்பின் சவூதின் படை ரவ்ழா ஷரீபின் குப்பாவை இடிக்க எண்ணி அதன்மீது ஏறிய போது அதில் இருவர் கீழே விழுந்து இறந்ததைக் கண்டதும் இடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டதாகவும், இன்னும் நபிகளாரின் ரவ்ழா 'ரீபின் மீது கட்டப்பட்டிருந்த குப்பாவையும் இந்த இஸ்லாத்தின் முகமூடிக்குள் இருந்த வகாபிகள் துப்பாக்கிகளால் சுட்டும் உள்ளனர்.

பனூ ஹாஷிம்களைப் பழிதீர்த்துக்கொள்ள உமையாக் கோத்திரத் தலைவர் அபூசுப்யானால் ஆரம்பித்துவைக்கப்பட்ட அராஜகமும், கொலைவெறியும், நம்பிக்கை துரோகமும், கொண்ட இந்த இஸ்லாமிய வேடதாரிகளின் வெறியாட்டங்கள். வரலாறு முழுக்க பரந்து விரிந்ததிலிருந்து ஒன்றிரண்டையே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேடதாரிகளின் முகமூடிகள் கிழிபடாமல் தம் ஆட்சியதிகாரங்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்றால், உண்மைகள் மலினப்படுத்தப்படவோ, திரிக்கப்படவோ, மறைக்கப்படவோ வேண்டும். பொய் உண்மையாக உலா வரவேண்டும் இது வெற்றிகரமாக மக்கள் மனங்களில் ஆழப்பதிந்து தொடரவும் வேண்டும்.

இதை இன்று சியோனிஸ, அமெரிக்க ஷைத்தான்களின் ஆசீர்வாதத்துடனும், பெட்ரோலிய பணபலம் மூலமும், மிக நுணுக்கமாக வகாபிகள் அவர்களது சர்வகலாசாலைகள், முஸ்லிம் உலகெங்கும் தௌஹீதைப் பரப்பும் தோரணையில் கட்டப்பட்டிருக்கும் மத்ரசாக்கள், அவைகளில் இருந்து உற்பத்தியாகும், உலமா வேஷதாரிகள், அவர்களது கவர்ச்சிகரமான பேச்சுக்கள், எழுத்துக்கள் மூலமாக எடுத்துச்செல்லப் படுகிறது. மதரஸாக்களில் பயிலும் இளம் பிஞ்சு மனதில் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனெனில் பொய் அழியும். உண்மை வென்றேத்தீரும். இதுவே வரலாறு நமக்கு கற்றுத் தந்த பாடமும், இறை நீதியுமாகும்.

***முஹம்மத் உஸ்பர்***
***வெலிபிடிய, வெலிகமை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறியப்படாத அரேபியா
### - நூல் குறித்து சில கருத்துக்கள்

அன்பின் ஆசிரியர் ஹுஸைன் மௌலானா அவர்களே!

ஒரு பெரியார் சொன்னார். மனிதனே! நீ பிறந்ததிலிருந்து இறக்கின்ற வரை கிடைக்கக்கூடிய நேரத்தை தவிர்த்து வேறு எதனை வாழ்வு என்று சொல்வாய்? பொன்னும் மணியும் கைவிட்டுப் போகலாம். ஆனால் அதை பன்மடங்கு சம்பாதித்துவிட முடியும். ஆனால் நீ இழந்த நேரத்தை, கடந்துவிட்ட காலத்தை எத்தனை விலை கொடுத்தாலும் மீட்க முடியாது. விலை மதிப்பு மிக்கது. நேரத்தின் மறுபெயர்தான் வாழ்க்கை. மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து உருவாக்கிய திட்டங்களால் மட்டுமே வெற்றியை ஈட்ட முடியும். இந்த வகையில் உங்கள் கைவண்ணத்தில் வெளிவந்த அறியப்படாத அரேபியா இந்த உண்மையை உணர்த்தி வெற்றிப்படியை எட்டி விட்டது என்று கூறினால் அது மிகையாகாது. உங்கள் வெற்றிக்காக பிரார்த்திக்கிறேன்.

ஆம்! அறியப்படாத அரேபியா என்ற தலைப்பே நூலின் உள்ளடக் கத்தை உணர்த்துவதோடு, அதன் அட்டைப்படம் கூட பல உண்மைகளை படம் பிடித்துக் காட்டுகிறது. உண்மையில் தலைப்புக்கு பொருத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் கருத்துக்கள், இலகு நடை, நகைச்சுவை வசன நடை என்பன இப்புத்தகத்தின் சிறப்பம்சஙகள் என்பதுடன் என்னை மிகவும் கவர்ந்தது. பாராட்டுக்கள் ஆசிரியரே!

SIR! உங்களது சிந்தனை, செயல்பாடு, புதிய கருத்துக்களை முன்வைக்கும் விதம், மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் தன்மை, நீங்கள் முன்வைத்துள்ள ஆதாரங்கள், சம்பவங்கள் என்பன உங்கள் அறிவின் வெளிப்பாடு என்பதை பறை சாற்றுகின்றன. இன்னும் சமுதாயத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பு, பற்றின் வெளிப்பாடு என்று கூறினால் கூட தவறில்லை என்று நினைக்கிறேன்.

என்னுரையில் நீங்கள் குறிப்பிட்ட "எழுத்தறிவு மட்டுமே கல்வியல்ல. பண்பை உருவாக்குவதே கல்வி" என்ற வாசகம் என்னை மிகவும் கவர்ந்த வாசகமாக குறிப்பிட ஆசைப்படுகிறேன். உண்மையில் இக்கருத்து உண்மையும் கூட. வாசிப்பவர்கள் இதை உணர்ந்து கொள்வார்கள் என்பது என் நம்பிக்கையாகும்.

SIR! "கூடாது என்று குழந்தைகளை வளர்க்கவே கூடாது" என்ற உங்கள் கருத்தை வாசித்தறிந்தேன்... ஆனால் என் கருத்தையும் சொல்ல எண்ணுகிறேன். SIR! கூடாததை கூடாது என்று கூறுவதில் எந்த தப்பும் இல்லை என்று நான் கூறுகிறேன். சிறு குழந்தைகள் அறியாமையால் பல விடயங்களை செய்வார்கள் அதில் நன்யையும் இருக்கலாம், தீமையும் இருக்கலாம். ஆனால் சிறுவர்களால் இவற்றை சரியாக உணர்ந்து கொள்ள முடியாது. எனவே பெற்றோர்கள் கூடாததை கூடாது என்ற கூறி தடுத்து அதற்கு பொருத்தமாக என்ன செய்யலாம் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சிறுவர்களும் சிந்திப்பார்கள். ஏன் கூடாது என்பதை புரிந்து நல்லவற்றை செய்வார்கள். இதற்கு ஓர் சம்பவத்தை கூறுகிறேன்.

ஆம்! தந்தை கூடத்தில் அமர்ந்த எதையோ ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தார். அருகிலே அவரது இரண்டு குழந்தைகள் மகனும், மகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரென்று குழந்தைகள் கூச்சல் போட்டு துள்ளி விளையாட ஆரம்பித்தனர். அந்த தந்தை குழந்தைகளை அடிக்கவில்லை. அன்போடு அழைத்தார். "இங்கே பாருங்கள். நான் படித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றேன். சப்தம் போடக்கூடாது. சமத்தா இருக்கணும் சரியா!" குழந்தைகள் மௌனமாக தலையசைத்தன. அறையில் மீண்டும் அமைதி... கொஞ்ச நேரம்தான் குழந்தைகளால் இருக்க முடியவில்லை மீண்டும் கூச்சல் போட ஆரம்பித்தனர். அவர் ஒரு கணம் யோசித்தார். எழுந்து சென்று அன்றைய நாளிதழின் ஒரு தாளை தனியாக எடுத்துக் கொண்டார். அதில் உலக நாடுகளின் வரைபடம் இருந்தது. குழந்தைகள் முன்னால் தாறுமாறாகக் கிழித்தார். கிழித்த காகிதத் துண்டுகளைத் தமது குழந்தைகளிடம் கொடுத்தார். இந்தக் காகிதத் துண்டுகளை வைத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் சரியாகப் பொருத்தி உலக நாடுகளின் வரை படத்தை மீண்டும் சரிப்படுத்திக் கொண்டு வர வேண்டும் புரிந்ததா? குழந்தை கள் இருவரும் ஆர்வத்துடன் தலையாட்டினர். காகிதத் துண்டுகளை எடுத்துக் கொண்டு அறையின் மூலையில் சென்று அமர்ந்தனர். அந்த தந்தை ஆயாசப் பெருமூச்சு விட்டார். இனி நிம்மதியாகப் படிக்கலாம் என்று அமர்ந்தார்.

சில நிமிடங்கள்தான். சில பக்கங்களைத்தான் புரட்டியிருப்பார். அதற்குள் குழந்தைகள் இருவரும் குதூகலத்துடன் வந்து சேர்ந்தனர். அந்த தந்தைக்கு வியப்பு தாளவில்லை. வரைபடத்தை பார்த்தார். எல்லைக் கோடுகள், மலைத்தொடர்கள், நதியோட்டங்கள் எல்லாமே கச்சிதமாகப் பொருந்தியிருந்தன. 'இதெப்படி?' வியப்பால் புருவங்கள் வில்லாய் வளைந் தன. 'உங்களால் எப்படி கச்சிதமாகப் பொருத்த முடிந்தது?' எனக் கேட்டார். குழந்தைகள் சிரித்தன. அது ஒண்ணும் க்'டமில்லை அப்பா! நீங்கள் வரைபடத்தை எடுத்து கிழிக்க ஆரம்பித்த போதே அந்த தாளின் மறுபக்கத்தில் மனிதனின் உருவப்படம் பெரிய அளவில் இருந்தது. அதைப் பார்த்தோம். நாங்கள் அந்த மனிதனின் படத்தை கை, கால், கண் என கிழிந்த பகுதிகளைப் பொருத்தத் துவங்கினோம் தாளின் மறுபக்கத்தில் உலகின் வரைபடம் தானாக சரியாகப் பொருந்திவிட்டது' என்றார்கள். பார்த்தீர்களா ஆசிரியரே சிறுவர்களும் சிந்திக்க துவங்கி விட்டார்கள், நிச்சயமாக சிந்திப்பார்கள், ஆராய்வார்கள் அல்லவா? பொதுவாக கூடாததை கூடாது என்று கூறத்தான் வேண்டும். அப்போது சிறுவர்கள், குழந்தைகள் சிந்திப்பார்கள். இது கூடாது என்றால் எது கூடும் என்று. ஆனால் பெரியோர் கள், பெற்றோர்கள் அவர்களை அன்பால் வழிநடத்த வேண்டும். அப்போது சிறுவர்கள் தீமையின் பக்கம் செல்ல மாட்டார்கள் என்பது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIR! உங்கள் புத்தகத்தில் பக்கம் (ஏழில்) 07-ல் "மதங்களின் பல்வேறு பக்கங்களையும் இணைத்துப் பார்க்கும் பொழுதுதான் உண்மையை உணர முடியும். ஒவ்வொரு மதமும் உண்மையின் ஒரு பக்கத்தை பிரதிபலிக் கின்றது. எல்லாவற்றின் மொத்தத்தையும் அறியும் போதுதான் உண்மையை முழுமையாக அறிந்தவர்கள் ஆவோம்." என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இதில் ஒவ்வொரு மதமும் உண்மையின் ஒரு பக்கத்தை பிரதிபலிக்கின்றது என்ற உங்ள் கருத்துக்கு உடன்படுகிறேன். மாறாக மதங்களின் பல்வேறு பக்கங்களையும் இணைத்துப் பார்க்கும் பொழுதுதான் உண்மையை உணரமுடியும், எல்லாவற்றின் மொத்தத்தையும் அறியும் போதுதான் உண்மையை முழுமையாக அறிந்தவர்கள் ஆவோம் என்ற கருத்துக்கு நான் உடன்படவில்லை. மாறாக புனித இஸ்லாமிய மார்க்கமானது உண்மையானது, பரிபூரணமானது, எக்காலத்திற்கும் எச்சமுதாயத்திட்கும் பொருத்தமானது. உலகம் அழியும் வரை எல்லோருக்கும் பொதுவான மார்க்கமாகும். ஆகவே உண்மையை அறிய எமது சமயத்தை மட்டும் ஆராய்ந்தாலே போதுமானது என கருதுகிறேன். எதையும் திட்டமிட்டு நுணுக்கமாக செய்தால் அதில் வெற்றியை பெறுவது கடினமானதல்ல என்று எண்ணுகின்றேன். இதில் நீங்களும் என்னுடன் உடன்படுவீர்கள் என்பதில் ஐயமில்லை என்ற நம்புகிறேன்.

SIR! 9-ம் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறீர்கள். "ஓர் இனத்தை சேர்ந்த உயிர், தேவையை முன்னிட்டு, சூழ்நிலையின் தாக்கத்தாலும், இன்னோர் உயர்நிலை உயிராகப் பரிணமிக்கிறது" (டார்வினின் கொள்கை) நிச்சயமாக இக்கருத்தில் எனக்கும் உடன்பாடு உண்டு. இது காலத்தின் தேவையாகும். பொதுவாக உலகின் நாலா பக்கங்களிலும் முஸ்லிம்கள் அவமானப்படுத்தப்பட்டு, அடக்கியாளப்பட்டுக் கொண்டுள்ளார்கள். இந்நிலை மாற வேண்டுமானால், தமது கலாசாரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டுமானால், எதிரிகளை விரட்டியடிக்க வேண்டுமானால் ஓர் இனமாக முஸ்லிம்கள் அணி திரள வேண்டும், ஓர் இனமாக ஓர் சமுதாயமாக தம்மை இணைத்து கொள்ள வேண்டும். அப்போதுதான் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக இருந்து செயல்படும் வகாபிசத்தையும் சியோனிசத்தை யும் வெற்றி கொள்ளலாம். உண்மையில் ஈரான் இதை நிருபித்து வருகின்றது. இந்த உண்மையை கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIR! உண்மையில் தேசிய உணர்வு பற்றிய உங்கள் கருத்துக்களுக்கு என் பாராட்டுக்கள். அவை வரவேற்கப்பட வேண்டியவையும் கூட. பொதுவாக எம் முஸ்லிம் தலைவர்கள், ஆட்சிபீடங்களில் உள்ளவர்கள், எம்மை எம் சமூகத்தை வழி நடத்தக்கூடியவர்கள் இந்த உண்மையை உணர வேண்டும். உணர்ந்து செயல்பட வேண்டும். இதை உணராது நடந்தால் நிச்சயம் கைசேதப்படுவார்கள் ஒரு நாள், என்பதை உணர்ந்து நடந்தால் சரி. இன்னும் உங்கள் நூலில் சவூதி அரேபியா கொடி சம்பந்தமான உங்கள் கருத்துக்கள் என்னைப் பொருத்தவரை எனக்கு தெரியாத ஒரு புதுமையான கருத்தாகவே இருந்தன. இன்னும் நீங்கள் நகைச்சுவையாக கூறும் விதம் சிறப்பாக உள்ளது. எம்பெருமானாரைப் பற்றி நீங்கள் கூறிய கருத்துக்கள் சிறப்பானது.

SIR! விரல் நுனி விவகாரம் என்கது சிரிப்பை உண்டாக்குகிறது. வகாபியர்கள் உங்களை 7 cdகளில் திட்டித் தீர்த்ததாக குறிப்பிட்டிருக்கின்றீர்கள்... வகாபியர்களின் அறியாமையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்று அவர்களிடமே கேள்வி கேட்க வேண்டும் போல் உள்ளது. அவர்கள் வேறு வேலை இல்லாதவர்கள் இதையாவது செய்து பிழைத்துக் கொள்ளட்டுமே? இவ்வாறு cd-களை விற்று சரி 1kg அரிசி, 1 kg பருப்பு, 1 kg இறைச்சி (3 kg இயக்கம்) மானியமாக வழங்கலாம் அல்லவா? சமூகத்தை வழி நடத்த தெரியாதவர்களுக்கு வேறு என்னதான் தெரியும்? இதையாவது சரியாகச் செய்கிறார்களா? அதுவும் சந்தேகம்தான்! இவர்களின் அறியாமையை என்னவென்று சொல்வது? இருப்பினும் நீங்கள் கொடுத்த பதிலடிக்கு பாராட்டுக்கள்! வகாபியர்களின் 3 kg மானியம் பெரும் அச்சத்தையும் உண்டுபண்ணுகிறது, காரணம் எதிர்கால பிச்சைக்கார கும்பல்கள் அதிகரித்து விடும் என்பதுதான். இன்னுமொன்று என்ன 3 kg மானியம் வகாபியர்களால் வழங்கப்பட்டாலும் எல்லோரையும் இவர்களால் ஏமாற்ற முடியாது. அல்லாஹ் முஸ்லிம் சமூகத்தை வகாபியர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும், காப்பாற்றுவான்.

SIR! "அரிசி தானத்தை விட அறிவு தானம் மிகச் சிறந்தது" என்ற கருத்துக்கு ஒரு சபா'! உண்மையில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் விதமாக நகைச்சுவையாக உங்கள் கருத்துக்களை கூறியிருக்கிறீர்கள். "கரங்களால் உழைத்து உண்ணும் உணவே சிறப்பானது" என்ற உங்கள் கருத்து சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வினாசகாலே விபரித புத்தி, அழியும் காலத்தில் அறிவீன மான யோசனைகள் என்ற பழிமொழிக்கொப்ப தன் அழிவை நோக்கி அடியெடுத்து நடப்பதால் அறிவும் வகாபியர்களுக்கு இப்படி கீழ்த்தரமாகத் தான் வேலை செய்யும் என்பதை வகாபியர்களதும் சியோனிஸ்களதும் செயல்களை வைத்தே உணர்ந்து கொள்ளலாம்.

நிச்சயமாக நவீன நாகரீகம் என்ற தீமை இன்று இல்லாமியர்க ளிடையே திணிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்ற உண்மையை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள். ஆம்! அறியாமையிலும் மந்த புத்தியிலும் ஊறிக்கிடக்கும் இப்படிப்பட்ட தௌஹீது முல்லாக்களை திருத்துவது க்'டம்தான்... கழுதை அறியுமா கற்பூர வாசனை...?

SIR! இஸ்லாம், இஸ்லாமிய உணர்வு, ஈரான், இமாம் ஆயத்துல்லா கொமைனி என்பன தொடர்பாக உங்களது கருத்துக்கள் உணர்ச்சி பூர்வமானதாக உள்ளது. இக்கருத்துக்களை வரவேற்கின்றேன்.

இன்றை காலகட்டத்தில் வகாபிய சிந்தனைகள் சியோனிசத்துடன் இணைந்துதான் செயல்படுகின்றது. இவ்வுண்மை கசப்பாக இருந்தாலும் உண்மைதான். வகாபியர்கள் அழிவின் பாதையை நோக்கி சென்று கொண்டுள்ளார்கள். இவர்களை அல்லாஹ் தான் பாதுகாக்க வேண்டும். வேறு யாராலும் முடியாது என்ற உண்மையை இவர்கள் உணர வேண்டும், உணரும் காலம் வெகு தூரத்தில். உணர்வார்களா? இவர்களது உள்ளம் நன்மையின் பக்கம் திரும்பாது மாறாக கொடிய பாவத்தின் பக்கமே செல்லும். இதனால்தான் இவர்கள் இருண்டு, கருண்டு முகத்தின் அழகும் மாறி அழிவின் பக்கம் திரிகின்றார்கள். இவர்கள் பணத்துக்காக இன்று உண்மையையே மாற்றி பொய்யான வேத சட்டங்களை மக்கள் பால் திணித்து அவர்களை வழிகெடுத்து வருகின்றனர். தாம் செய்வது தவறு என்று உணர்ந்தும் பணத்துக்காக இன்று உண்மையையே மாற்றி மக்களை அழிவுப்பாதையில் இழுத்துச் செல்கின்றார்கள்.

SIR! பிரார்த்தனையை பற்றி சிறிது கூறுகிறேன். அதாவது யார் வேண்டுமானாலும் பிரார்த்தனை புரியலாம். ஆனால் முதலில் தான் தூய்மை யாக, தன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். தன் செயல்கள், எண்ணம் என்பன நன்மையானதாக இருக்க வேண்டும். அதற்கு மாற்றமாக பிற்போக்குவாத இயக்கங்கள் கூறும் நல்லெண்ணம் நற்செயல் இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையால் எந்த பயனும் இல்லை, இதை அவர்கள் உணர வேண்டும் என அன்புக்கட்டளை இடுகிறேன். இதற்கு மாறாக பல மாதங்கள் அல்ல வருடங்கள் தொடர் பிரார்த்தனையில் ஈடுபட்டாலும் பலன் கிடைக்காது என்ற உண்மையை பிற்போக்குவாத இயக்கங்கள் உணர வேண்டும்.

ஆம்! நிச்சயமாக "உண்மையும் நேர்மையும் காணப்படுமிடத்தில் நிச்சயமாக புத்திக்கூர்மை காணப்படும். புத்திக்கூர்மை காணப்படுமிடத்தில் நேர்மையைக் காணலாம்" என்ற உங்கள் வாசகங்கள் அனுபவ ரீதியாக உண்மையானது. பாராட்டுக்கள் ஆசிரியரே!

உண்மையில் அரேபியனின் அழிவு அமெரிக்கனின் வெற்றி, அவனது வாழ்விற்கு அவசியமானது என்று அவன் எண்ணுகிறான். தமது சொந்த நாட்டில் மாற்றான் தன்னை தடிமைப்போல் நடத்துகிறான், தன் கருத்துக்களை வெளியிட கூட உரிமை இல்லாத நிலை... இதற்கெல்லாம் காரணம் சியோனிசம் வகுத்த திட்டங்களின் அடிப்படையிலேயே வகாபிசம் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகும். இவ்வுண்மையை அரேபியன் இன்று ஏற்றுக்கொண்டு சாதித்துக் காட்டினால் அதுதான் சாதனை என்று நினைக்கின்றேன். அழகிய ஆத்மா உடையவன் அழகிய விடயங்களைப் பற்றித்தான் பேசுவான் என்ற வார்த்தை மிகவும் சரியானது.

SIR! "மகான் என்ற வரிசையிலே மாமனிதர்ள் இடம்றெும் இடத்திற்கு தகுதியற்றவர் பெருமானார் (ஸல்) அவர்கள் என்பது வகாபிய வாதம்"... என்ற வாசகத்தை பார்க்கப் பார்க்க எனக்கு கோபம் வரவில்லை மாறாக வகாபியர்களின் அறியாமையை எண்ணி அனுதாபம் தான் ஏற்படுகின்றது. நபிகளார் சிறப்புக்கள் இல்லாத சாதாரண மனிதரல்ல. அவர்கள் மனிதர்களில் புனிதர், எம் தலைவர். மறுமையில் முதன் முதலில் கப்ரிலிருந்து வெளிவரக்கூடியவர்கள். அவர்கள் உலகத்திற்கே கருணை, ஏனைய நபிமார்களை விட அல்லாஹ் எம் பெருமானை மேம்படுத்தியுள்ளான். மறுமையில் முதலாவதாக சிபாரிசு செய்யக் கூடியவர்கள், அவர்களுடைய வணக்க வழிபாடுகளையும் நற்குணங்களையும் யாரும் அடைய முடியாது. பெருமானாரின் சிறப்பை வேறு எந்த மனிதனும் அடைய முடியாது. ஏன் வானவர்களால் கூட பெற முடியாது... இதையெல்லாம் அறியாத வகாபியர்களின் அறியாமையை என்னவென்று உரைப்பது?

எவ்வாறாயினும் குரைக்கும் நாய்கள் குரைத்துக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கட்டுமே... அதற்கு வேறென்ன வேலை இருக்கிறது? பாவம். ஆம்! அவைகள் பாவம் குரைப்பதை தவிர வேறொன்றும் அவைகளுக்கு தெரியாது. இருந்தாலும் இந்நாய்களின் குரைப்பு எம்மை தொந்ததரவு செய்தால் கல்லைத் தூக்கி அவற்றை அடித்தே விரட்டி விட வேண்டும். அடிப்பதை தவிர நல்ல வழி கிடையாது, இவற்றை உதாரணத்துக்காக கூறுகின்றேன்.

நான், கூற விரும்புவது அறியாமையின் உச்ச வரம்பில் நடைபோடும் வகாபியர்கள் எப்படிப்பட்ட சீர்திருத்தத்தை செய்ய விரும்பினாலும் முதலில் சுய சீர்திருத்தம் செய்வதில்தான் கவனம் செலுத்த வேண்டும். தமது ஆளுமையை தமது நடத்தையை மறுகட்டமைப்பு செய்ய வேண்டும். இன்று தமது வீடுகள், தமது சமூகங்கள், தமது அலுவலகங்கள், தமது முஹல்லாக்கள், வாழ்வின் அனைத்து துறைகள் ஆக எல்லாவற்றின் வரைபடமும் தாறுமாறாக சீர்குலைந்திருக்கிறது. இவற்றை சரி செய்ய வேண்டுமானால் முதலில் நாம் சீர்திருந்த வேண்டும் என்ற உள்ளுணர்வு ஒவ்வொரு வகாபிய சகோதரர்களிடமும் இருக்க வேண்டும். மாறாக கற்றவரைக் கண்டால் பொறாமை கொள்வதும், தப்பேதுமின்றி பலரிடமும் கண்டபடி திட்டித்திரிவதும், ஊனு-க்களில் அதை வெளியிடும் தம் பொழுதுபோக்கையும் கைவிட வேண்டும் சகோதரர்களே!

போதை மருந்துக்கு அடிமையானவன் சமுதாயத்தை விட்டு ஒதுங்கி விடுகிறான். போதை மருந்துகளால் விளையும் தீங்குகள் அவனோடு முடிந்து விடுகின்றன. ஆனால் இந்த மோசமான எதிரிகளால் (வகாபிய, சியோனிச) பாதிக்கப்பட்டவர்கள் சமுதாயத்திலேயே ஒன்றிணைந்து இருப்பதனால் ஒட்டு மொத்த சமூகமே பாதிக்கப்படுகிறது. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்", தினை விதைத்தவன் தினை அறுப்பான் "எவ்வெவ்வழியில் எவரெவர் சென்றாரோ அவரவருக்கே அவ்வழிகள் புலப்படும்" என்ற தத்துவ மொழிகளை அறியாத அறிவிலிகள் முட்டாள்கள் என்றும் இவர்களை குறிப்பிட்டால் அது தவறில்லை. இன்னும் இதுதான் இவர்களுக்கு பொருத்தமான பெயராகவும் இருக்கும் என்ற நான் கூறுகின் றேன். இவர்கள் குறை கண்டு குற்றம் பிடிப்பதையே தொழிலாக கொண்டுள் ளனர். தனக்குப் பிடிக்காத மற்றவனை துயரத்தில் ஆழ்த்துவதும் அதைக் கண்டு சந்தோசப்படுவதும் இவர்களது தொழில்களாகும். இன்று இவ்வாறாக வகாபிகள் சுயநலத்திற்காக செயல்படுகின்றார்கள் என்பதை அறியும்போது கவலையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹஸ்ரத் ஸைய்யிதுனா இப்னு மஸ்ஊத் (ரழி) அறிவிக்கிறார்கள் "நிச்சயமாக நீ நாட்களின் சுழட்சியில் சிக்குண்டுள்ளாய். திடீரென உன்னை மரணம் வந்தடைந்துவிடும், எவனொருவன் நன்மையின் விதையை விதைத் தானோ வெகுவிரைவில் அவன் 'வெகுமதி' எனும் பயிரை அறுவடை செய்து கொள்வான். மேலும் எவரொருவன் தீமையின் விதையை விதைத் தானோ விரைவில் அவன் 'கைசேதம்' எனும் பயிரையே அறுவடை செய்து கொள்வான். விதைக்கின்ற ஒவ்வொருவருக்கும் அவர் விதைக்கின்ற பொருளே கிடைக்கும்" (ஸம்முல் ஹவா - 50 பக்கம்)

Sir! நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

மிஃராஜின் இரவில் நான் சில மனிதர்களைப் பார்த்தேன். அவர்களின் உதடுகள் நெருப்புக் கத்தரியினால் வெட்டப்பட்டுக் கொண்டிருந்தன. (எனவே) நான் ஜிப்ரில் (அலை) அவர்களிடம் இவர்கள் யார்? என்று கேட்டேன். உங்களின் உம்மத்திலுள்ள பிரசங்கிகள் அவர்கள். ஜனங்களை நன்மையைக்கொண்டு ஏவிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களை மறந்திருந்தார்கள் என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.

இதிலிருந்து என்ன விளங்கிக் கொள்கின்றோம் என்று தெரியுமா? நம்மில் அநேக பிரசங்கிகள் உள்ளனர், மணிக்கணக்கில் பேசுவார்கள். (CD-க்களையும் வெளியிடுவார்கள்) ஆனால் அவர்கள் எதைப் பேசுகின் றாரோ அதில் சிறிதளவு கூட அவரின் வாழ்க்கையில் இல்லை. மேற்கண்ட ஹதீஸின் மூலம் நாம் பெரிய படிப்பினை பெற வேண்டும். நெருப்புக் கத் தரியினால் நாவு துண்டிக்கப்படுவதென்றால் சாதாரண விசயமா? பிரசங்கங் கள் மற்றவர்களை கவர வைத்து தம் பக்கம் அவர்களை வசப்படுத்தும் நோக்கத்துடனோ அல்லது பிரசங்கம் செய்து மக்களிடமிருந்து பாராட்டுதலை யும் புகழ்ச்சியையும் பெறும் நோக்கத்துடனோ பேசக்கூடாது. நாம் எந்த விடயங்களை சொல்கிறோமோ அவை நம்முடைய வாழ்க்கையிலும் வந்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் சொல்ல வேண்டும்.

ஆனால் நம்மையறியாமல் இடையிடையே நம்மால் அதை செய்ய முடியாமலாகி விட்டால் அதைக் குறித்து அல்லாஹ்வும் மன்னிப்புக் கோரலாம். ஆனால் ஒரு மனிதன் தம்முடைய வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்கு ஏடுத்துக் சொல்லக்கூடிய எதையுமே செய்யாமலிருந்தால் எப்படி அவரை உண்மையான பிரசங்கி என்று சொல்ல முடியும்? பிரசங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் நோக்கமே பிரசங்கம் செய்யக்கூடிய விடயங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் அம்சமாக மாற வேண்டுமென்பதுதான். நாம் எதை மற்றவர்களுக்குக் கூறுகின்றோமோ அவற்றை நாம் அமல் செய்ய எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிய வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடிய எம் அனைத்து முல்லாக்களும், வகாபியச் சகோதரர்களும் இதைச் சீர்த்தூக்கிப் பார்க்க வேண்டும் என தாழ்மையாக வேண்டுகிறேன்.

எனவே இவற்றை வகாபியர்கள் வாசித்தறிந்து நற்செயல்களில் ஈடுபடுவார்களா என்று சரி பார்ப்போம். "வழிகேடருடன் (சடத்துவ, சியோனிசவாதிகள்) நீ தர்க்கிக்காதே உன்னிடமே படித்துக் கொண்டு உனக்கு விரோதியாக இருப்பான். எவ்வளவு ஆதாரம் காட்டினாலும் பிடிவாதத்தை விட மாட்டான், என்னிடம் ஆதாரம் உண்டு எனக் கற்பனை செய்து கொள்வான்" என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார் கள். இது உண்மைதான். நபி (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அறிஞர்களின் எழுதுகோலின் மை ஸுஹதாக்களான உயிர்த்தியாகிகளின் இரத்தத்தை விட மேலானது" என்று. ஆனால் அறிஞர்கள் பயன்படுத்தும் அந்த மை அறிவிலிகளின் கைகளில் அகப்பட்டு மெய்யை எழுதுவதற்குப் பதிலாக பொய்யை எழுதித் தள்ளுகிறார்கள். பொய்யை பிரசாரங்களாக, மேடைப்பேச்சுக்களாக பேசித்திரிகிறார்கள் அது மட்டுமா Cd-யும் வெளியிடுகிறார்கள்! இவர்களது அறிவை என்னவென்று சொல்வது?

இவ்வாறு CD-க்களை வெளியிடும் குழுவினருக்கு என் அன்பு அறிவுரை இதோ! நேரத்தை வீணடிக்காதீர்கள். அது இறைவன் நமக்கு அளித்த மகத்தான அருட்கொடையாகும். நபிகளார் நவின்றார்கள் காலைப்பொழுது புலர்ந்ததும் அந்த நாள் உரக்க அறிவிக்கிறது, ஆதத்தின் மகனே! நான் ஒரு புதிய படைப்பினம். நான் உன்னுடைய செயல்களின் சாட்சியமாக இருக்கிறேன். என்னை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள். ஏனெனில் நான் உலக இறுதிநாள் வரை திரும்பப் போவதில்லை, ன்னறு. இதை உணர்ந்து செயற்படுங்கள்.

நபிகளார் இன்னொரு நபிமொழியில் அறிவித்துள்ளார்கள். ஓர் இறை நம்பிக்கையாளனுக்கு 2 விடயங்கள் குறித்து கவலை இருக்க வேண்டும். முதலாவதாக கடந்த காலத்தில் அவன் செய்த பணிகளுக்கு இறைவன் எந்த வடிவத்தில் பதில் தருவான் என்பது அவனுக்குத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக எதிர்காலத்தில் அவன் என்ன செய்வான் என்பதை இறைவன் எவ்வாறு நிர்ணயித்திருக்கிறான் என்பதும் அவனுக்குத் தெரியாது. எனவே உலகை மறுமைக்காகவும், முதுமையடைவதற்கு முன்பு இளமையையும் மரணம் வருவதற்கு முன் வாழ்வையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புரிகிறதா சகோதரர்களே!

அன்பர்களே! ஒவ்வொரு நொடிப்பொழுதையும் இதே உணர்வோடு, துடிப்போடு கழிக்க வேண்டும். இமாம் இப்னு ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் சொன்னார்கள். “ஆயுள் முழுவதும் நீங்கள் விடுகின்ற மூச்சு ஒவ்வொன்றுமே விலைமதிப்பற்ற முத்துகள் ஆகும். அதற்கு மாற்று எதுவும் கிடையாது” புகழ்பெற்ற இஸ்லாமியக் கவிஞர் ஆமிர் உஸ்மானி கூறினார். “விடுகின்ற மூச்சு ஒவ்வொன்றும் சவமாக மாறிச் செல்கின்றது.”

அன்பர்களே! தனது கரத்தால் உழைத்து உண்ணும் உணவை விடச் சிறந்த உணவை எவரும் உண்பதில்லை. நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் தாவூத் (அலை) அவர்கள் தனது கரத்தால் உழைத்தே சாப்பிட்டார்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் - மிக்தாம் (ரழி) நூல் - புகாரி)

உலகத்தில் நல்ல முறையில் வாழ வேண்டுமென்றால் நன்றாக உழைக்க வேண்டும். சோம்பேறியாக இருக்கக்கூடாது. ஆனால் சிலர் அடுத்தவரிடம் கையேந்தி, குழைந்து, வளைந்து, அடிமையாகி வாழ்வதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட இழிநிலைமையை யாரும் உருவாக்கக் கூடாது. இப்படிப்பட்ட இழிநிலையை இஸ்லாமியன் ஒருபோதும் சந்திக்கக்கூடாது. அவன் தன் உழைப்பால் சம்பாதித்து அதன் மூலம் வாழ்க்கை நடத்த வேண்டும். எப்படி நபிமார்கள் அனைவரும் உழைத்து வாழ்க்கையை நடத்தினார்களோ அவ்வாறே நமது வாழ்வும் அமைய வேண்டும்.

இன்னம் தனது முஸ்லிம் சகோதரனை ஏசுவது, பழிப்பது ஒரு முஃமினுக்கு தகுந்த பண்பாக இருக்காது. இப்படி ஏசுவதன் மூலம் நாம் பாவத்தையே சம்பாதிக்கிறோம் என்பதை திட்டித் தீர்க்கம் ஊனு-க்கள் வெளியிடும் குழுவினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முஸ்லிமை ஏசுவது பாவமாகும். கொல்வது குப்ராகும் என நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் இப்னு மஸ்வூத் (ரழி), நூற்கள் - புகாரி, முஸ்லிம்) எனவே சகோதரர்களே நாம் தமது சுயலாபத்திற்காக செயற்படக்கூடாது. அத்துடன் பிறரை தன் சகோதரனை தாறுமாறாகத் திட்டக்கூடாது. நாம் அனைவரும் முஸ்லிம்கள், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் அல்லவா இன்றைய காலகட்டத்தில் நாம் ஒற்றுமையாக இயங்க வேண்டும். மாறாக சண்டை பிடித்துக் கொண்டு ஏசித்திரிந்து கொண்டிருக்கக்கூடாது. இதனால் சமுதாயத்திற்கே பெரும்கேடும் நிகழ்ந்து விடும். எப்போதும் ஒற்றுமையுடன் நண்பர்களாக இருப்பதே இஸ்லாம் விரும்பும் மனித நேயமாகும்.

இன்று நம் சமூகம் மோசமான முறையில் விமர்சிக்கப்படுகின்றது. இது மட்டுமா? எல்லாத்துறைகளிலும் வீழ்ச்சியடைந்தும் வருகின்றது. சிந்தனைப் புரட்சிக்குரிய அனைத்து தன்மைகளையும் இழந்து, ஒரு சரியான தலைமைத்துவத்தை கண்டுபிடிக்கும் தன்மையும் அற்று இருக்கின்றோம். எனவே எழுத்தாளர்ள், பேச்சாளர்கள், பரந்தளவில் சிந்தித்து செயல்பட வேண்டும். மாறாக சமூகத்தின் அற்ப சொற்பங்களை விரசப்படுத்தி சமூகத் தின் பெறுமானங்களை உடைப்பவர்களாக இருக்கக்கூடாது. மேற்கின் விபச்சார சடத்துவவாதிகளுடன் சேர்ந்து எம்மை, எம் சமூகத்தை, எமது பண்பாடு, கலாச்சார விழுமியங்களை அழிக்கக்கூடாது. அற்பத்தனமான விடயங்களுக்காக சண்டை பிடித்துக் கொண்டு, திட்டித்தீர்த்துக்கொண்டு திரியக்கூடாது. நாம் இன்று எம் சமூகத்தைப் பற்றிய சிந்தனை யுகத்தில் வாழ வேண்டிய ஒரு காலமாகும்.

எமது சமூகம் இயக்க ரீதியாகப் பிளவுபட்டு ஒருவரையொருவர் எதிரிகளாக நோக்குகின்றனர். இது எமது சமூகம் எதிர்நோக்கக்கூடிய பாரிய ஆபத்தாகும். இஸ்லாமிய மார்க்கமே உலகிலுள்ள மனித சமுதாயத்தை ஒரு கொடியின் கீழ் கொண்டு வரக்காரணமாக இருந்தது. இன்று அதே மார்க்கும் பகைக்கும், கலகத்திற்கும் உரிய ஒரு மார்க்கமாக உலகளவில் சுட்டிக் காட்டப்பட்டுக் கொண்டுள்ளது. இதற்கு காரணம் காலனித்துவ வாதிகள்தான். இவர்கள் இஸ்லாத்தை உடைத்து இஸ்லாத் திற்குள் இருந்தே பற்பல இஸ்லாம்களை தோற்றுவித்து விட்டார்கள். இவை பல இஸ்லாமிய நாடுகளையும் ஆக்கிரமித்து விட்டன. எனவே முஸ்லிம்களாகிய நாம் விழித்துக் கொள்ள வேண்டும். சமூகத்தற்காக சிந்தனை செய்ய வேண்டும். சுயநல நோக்கமற்ற, எத்தகைய உலகாயத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களுமற்ற முற்றிலும் ஒரு கொள்கைக்காக போராடும், தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தியாகிகளை போன்ற ஒரு குழுவினை உருவாக்க வேண்டும். இதில் தான் முஸ்லிம் உலகின் நோய்களுக்கான பரிகாரம் இருக்கின்றது. இவ்வாறான புரட்சிதான் ஈரானிலும் ஏற்பட்டது, இதுதான் எல்லா இஸ்ாமிய நாடுகளிலும் ஏற்பட வேண்டும்.

அன்பர்களே! இஸ்லாம் பேணிக்காத்துவரும் அருட்புதையல்களான எல்லா ஒழுக்கக் கோட்பாடுகளும் பாதுகாக்கப்பட வேண்டும். நபிகளார் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து பரம்பரை பரம்பரையாகக் கமைாறி அதனைப் பாதுகாப்பதற்காக இஸ்லாத்தின் வீரர்கள் பயங்கரமான சோதனைகளைக் கண்டு அஞ்சவில்லை. இவ்வாறாக நாம் பெற்ற இவ்வருட் புதையல்களை இழந்தால் இஸ்லாமிய உலகமும் தொடர்ந்திருக்காது.

இப்பயங்கரப் பேராபத்துக்கு எதிராகப் போராட விழித்தெழ வேண்டும். அணி திரண்டு எம்மையே இஸ்லாத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். சத்திய சன்மார்க்க இஸ்ாம் என்ற விருட்சத்தை பெருமானார் அவர்கள் நம்மிடம் விட்டுச் சென்றுள்ளார்கள். அவ்விருட்சத்தை நாம் பாதுகாத்து விருத்தியடையச் செய்ய வேண்டும், வளம் பெறச் செய்ய வேண்டும். மாறாக ரியால் பணத்திற்காக ஏமாறக் கூடாது.

இன்னும் படித்த இளைஞர்களை காலத்தின் சதியினால் அவர்கள் அடிமையாகி இருக்கும் வகாபிச, சியோனிச, மேற்கத்தேய தத்துவங்களின் பிடியிலிருந்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்களுக்கு இஸ்லாம், இஸ்லாமிய பண்பாடு, கலாச்சார விழுமியங்களை அவர்களது அறிவுக்கு எட்டும் வகையில் சமர்ப்பித்து அவர்களது உள்ளத்தில் இஸ்லாத்தின் பேரொளிச் சுடரை ஏற்றி அவர்களை மீண்டும் இஸ்லாமிய இலட்சியவாதத்தோடு பிணைக்கும் வகையில் நீங்கள் நல்ல நூற்களை தர வேண்டும் என்று ஹுஸைன் மௌலானா ஆசிரியரான உங்களுக்கு அன்புக்கட்டளை இடுகிறேன். இந்த அறிவுப் போராட்டத்தில் துளைக்காது ஈடுபட்டுழைக்க உங்களை வேண்டுகின்றேன். ஆம்! இது காலத்தின் தேவையாகும்.

SIR! சத்தியமே பேசு, சத்தியத்திற்கே உழை, சத்தியத்திற்கே கட்டுப்படு, உலகமெல்லாம் சேர்ந்து எதிர்த்தாலும் உண்மைக்கு முரணாக ஒருபோதும் நடவாதே என்று கூறுகிறது இஸ்லாம். எனவே உண்மையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. இந்த வகையில் உங்களை கௌரவப்படுத்துகிறேன். போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்... என்ற வாசகங்களுக்கேற்ப நீங்கள் வீர நடை போட வேண்டும். உங்கள் பணி தொடர வேண்டும். இது காலத்தின் தேவையும் (நாளைய) சமூகத்தின் தேவையும் கூட.

உண்மையில் "அறியப்படாத அரேபியா" எனும் நூலை அனைவரும் வாசிக்க வேண்டும். அதற்கு வழிவகை செய்தல் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கூற விரும்புகின்றேன். அத்துடன் எனது மனம் கனிந்த பாராட்டுக்களையும் ஹுஸைன் மௌலானா ஆசிரியருக்கு கூற கடமைப் பட்டுள்ளேன்.

SIR! யாரேனும் ஒரு நன்மையை பிறருக்குச் சொன்னால் அதை(க் கேட்டு)ச் செயல்படுத்துபவருக்கான கூலி போல் அவருக்கும் உண்டு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் அபூ மஸ்ஊத் (ரழி) - நூல் : முஸ்லிம்)

இதிலிருந்து நான் என்ன கூற வருகிறேன் என்றால், சிலர் எவர் எக்கேடு கெட்டுப்போனால் என்ன? நாம் ஒழுங்காக இருக்கிறோமா? என்று மட்டும் பார்க்கிறார்கள். மாறாக அடுத்தவருக்கு நன்மையை எடுத்துச் சொன்னால் நமது சகோதரர் திருந்துவதுடன் அதற்குரிய கூலி நமக்கும் கிடைத்து விடுகிறது. இப்படி இரட்டிப்பு நன்மை கிடைப்பதை விட வேண்டுமா SIR? வேண்டாம். உங்கள் சேவை தொடர வேண்டும் என்று கூறி எனது ஆக்கத்தில் ஏதாவது பிழைகள், கருத்து தெளிவின்மை இருந்தால் அதை மன்னிக்கும் படி மிகத் தாழ்மையாக கேட்டு விடை பெறுகிறேன்.

**வஸ்ஸலாம்**
**இப்படிக்கு உண்மையான**
**அஸ்மியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஸ்.எச். மௌலானாவின் அறியப்படாத அரேபியா

### *- ஒரு விமர்சனப் பார்வை*

சிந்தனையாளரும், சமூகவியலாளரும் புதிய கருத்துக்களைத் துணிச்சலுடன் முன்வைப்பவருமான, மிலேனியம் கல்வி ஸ்தாபனத்தின் தலைவர் எஸ்.எச். மௌலானா எழுதிய "அறியப்படாத அரேபியா" (Anknown Arabia) என்ற சர்ச்சைக்குரிய நூல் கிடைக்கப் பெற்றது. நூல் கைக்கடக்கமாக அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

"சர்ச்சைக்குரிய" என்ற சொற்பிரயோகத்தின் மூலமே, இந்நூலில் ஏதோ பிரச்சினைகளும் தர்க்கங்களும் இருக்கின்றன என்று வாசகர்களுக்குப் புரிந்துவிடும். ஆனால் அதே "சர்ச்சை" யின் எதிர்வினையும், அதற்காக விடையை அல்லது முடிவைக் கண்டுபிடிப்பதிலும்தான் நூலின் வெற்றி அடங்கியிருக்கிறது.

உண்மையில் மௌலானாவுக்கு இது சர்ச்சைக்குரிய நூலல்ல. ஏனெனில் அவருடைய எண்ணம், இயக்கம், எழுத்து ஏக்கம் அனைத்துமே இந்நூலில் புதைந்து கிடக்கிறது. அவரது அடிப்படைக் கொள்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான். எனவே, "சர்ச்சை" க்குட்படப் போகிறவர்கள் பல்வேறுபட்ட வாசகர்கள் தாம்.

நூலாசிரியர் எஸ்.எச். மௌலானா "கருத்துச் சுதந்திரம்" என்ற மகுடத்தில் காத்திரமான பல தொடர் நூல்களை வெளியிட்டு வந்திருக்கிறார். இதில் தனது சுதந்திரமான கருத்துக்களையும் தனது கருத்துக்களுக் கெதிரான (கொள்கைக்கெதிரான) கருத்துக்களையும் பதித்திருக்கிறார். விசேடமாக மாற்றுக் கருத்தாளர்களுக்கு இத்தொகுதித்தொடர்களில் அதிக பங்களிப்பை வழங்கியிருக்கிறார். அவ்வாறே ஏனைய தொகுதிகளிலும் இஸ்லாம், 'ரீஆ பற்றிய வாதப்பிரதிவாதங்களுக்கு இடம் வழங்கினார்.

எஸ்.எச். மௌலானா, பிரபலமான ஒரு வர்த்தகர். ஆயினும் மாணவ சமுதாயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பங்களிப்பை வழங்குவதிலும் புதிய சிந்தனைகளை வானொலி, தொலைக்காட்சி மற்றும் பொது மேடைகள் மூலம் வெளியிடுவதிலும் அவற்றை நூல் வடிவாக்குவதிலும் அலுப்பின்றி, சலிப்பின்றி ஈடுபட்டு வருகிறார்.

தூய இஸ்லாமிய வெளிப்பாடு, அல்லது பின்பற்றல் என்ற கொள்கையே மௌலானாவுடையது. அராபிய, யூத, அமெரிக்க கூட்டுச் சதியின் பரம வைரியாக விளங்குகிறார் மௌலானா. அகண்ட இஸ்ரேல் (Greater Isreal) என்ற ............ திட்டத்தின் எதிரி அவர். அதன் பொருட்டு, தனது பேனாவினாலும் ஏனைய பிரச்சார வழிமுறைகளினாலும் சிந்தனைப் போராட்டம் நடாத்தி வருகிறார். சவூதி அரேபிய அரசும் சவூதி மன்னர் பரம்பரையும் அவர்ளது அடிவருடிகளும் எவ்வாறு இஸ்லாத்தைத் திரிபுபடுத்தி புராதனப் பெருமைகளைச் சிதறடித்து சின்னாபின்னப்படுத்தி இஸ்லாத்தின் மகோன்னத நினைவடையாளங்களை ஒரு சிறு துணிக்கை கூட இல்லாமல் துடைத்தெரிந்து வருகிறார்கள். அதி தீவிர வஹ்ஹாபியக் கருத்துக்கள் எவ்வாறு விதைக்கப்பட்டு வருகிறது - அந்த விதை பெரு வி' விருட்சமாக வியாபித்து முஸ்லிம் சமுதாயத்தைக் கூறுபோட்டு, அவர்களது உடம்பிலோடும் குருதியூடே வஹ்ஹாபிய வி'ம் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுருவி, கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றொழிக்கப் போகிறது என்பதை தனது எழுத்துக்கள் மூலம் நிரூபித்து வருகிறார்.

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் சியோனிஸ்டுகளுக்கும் சவூதி அரேபியாவும் அதன் நேச நாடுகளும் எப்படி உற்ற துணையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்று கோலாய் பற்றுக் கோடாய் என்பதைத் தோலுரித்துக் காட்டுவதோடு இஸ்லாத்தைத் தூய்மையுடன் நிலைநிறுத்தும் அமெரிக்க, யூத, அரேபிய கூட்டுச் சதியை முறியடிப்பதிலும் ஆக்ரோ'க் குரல் எழுப்பி வரும் ஒரேயொரு அரேபிய நாடான ஈரானையும் அதன் கொள்கைகளையும் பகிரங்கமாக ஆதரித்துவரும் மௌலானா, அதன் பொருட்டு தனக்கு "காபிர்" பட்டம் வழங்கப்படுவதையிட்டும் கவலை கொள்ளவில்லை. ஈரானின் அடிவருடிகள் என்ற அவச் சொல்லையும் துச்சயமாக மதித்து தனது தர்க்க ரீதியான கருத்துக்களை முன்வைத்து வருகிறார் மௌலானா. முக்கியமாக சவூதியின் வி'க் கிருமியாகிய வஹ்ஹாபிசத்துக்கு எதிராக வும் கடும் கண்டனக் கணைகளைத் தொடுத்து வருகிறார்.

அறிவைத்தவிர பலமான ஆயுதம் வேறொன்றுமில்லை. நமக்கென்று ஒரு வழியை வகுத்துக் கொள்ள ஆழமான அறிவும் அதீத தேடலும் அவசியமாகிறது.

"வாள் முனையை விட பேனாவின் முனை கூர்மையானது" என்பர். "தியாகி சிந்தும் இரத்தத் துளியை விட பேனா சிந்தும் மசி புனிதமானது" என நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருக்கிறார்கள்.

"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகிறது" என்ற அறிவுப் போர் பற்றி நாமக்கப் கவிஞர் பாடியிருக்கிறார். அறிவைப் பெறுவதற்கு வாசிப்பு மிக முக்கியமானது. வாசிப்புத்திறன் குன்றியவனை மனிதன் எனக் கொள்ள முடியாது. இதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ள மௌலானா, வாசிப்புத்திறனை மேம்படுத்துவதும் ஊக்குவிப்பதுமே தனது பணியென்கிறார். அதன் பொருட்டே மிலேனியம் கல்வி ஸ்தாபனத்தை நிறுவினார்.

"புத்தகங்களை நேசியுங்கள்
அதனை வாசியுங்கள்
பின்னர் யோசியுங்கள்"

என்று அடிக்கடி அறிவு விதைகளைத் தூவுவார் மௌலானா. மேடையிலும் முழங்குவார்.

"வாசிப்புத்தான் சிநத்னை மாற்றத்தின் திறவுகோள்" என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் மௌலானா. இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பாழ் பட்டுப் போகும் வேலைகளி லெல்லாம் இரத்தக் கொடுத்த - எழுத்துப்போர் தொடுத்த ஒரு சமூக சிந்தனாவாதிதான் மௌலானா என்பதில் ஐயமே இல்லை. அவரது உரைகளைச் செவிமடுப்போருக்கும் அவரது நூல்களை ஊன்றிப் படிப்போருக்கும் இது நன்கு புரியும்.

மௌலானாவிடமிருந்து அறிவுபூர்வமான - ஆக்கபூர்வமான சிந்தனைக் கருவூலங்கள் வெடித்துச் சிதறுவதைச் சீரணித்துக் கொள்ள இயலாத ஏகாதிபத்திய அடிவருடிகளும் சியோனிஸ்டுகளும் சவூதிப் பணத்தில் சன்மார்க்கப் பிரசங்கம் புரிவோரும் போலி முல்லாக்களும் வஹ்ஹாபிசத்தை இமயத்தின் உச்சியில் ஏற்ற முயற்சிப்போரும் மேலும் சில பிற்போக்குவாதிகளும் மௌலானாவுக்குச் சூட்டியுள்ள பட்டம் "காபிர்" மிக இலகுவான முறையில் எவ்வித விசாரணையுமனிறி வழங்கப்படக்கூடிய பட்டம் இது ஒன்றுதான் போலும்.

"அறியப்படாத அரேபியா" என்ற இந்த நூல் மூலம் பலரும் அறியாத அல்லது அறிந்தும் அறியாதது போல் நடிக்கின்ற அரேபியாவைப் பற்றிக் கூறுகிறார் மௌலானா. சவூத் மன்னர்கள் எவ்வாறு அரேபியாவைக் கபளீகரம் செய்து சவூதி அரேபியாவாக மாற்றி அமைத்துள்ளனர் என்பது பலரும் அறியாத ஒன்றாகும். மேற்குலகவாதிகளின் எடுபிடிகளாக அரேபியா இருக்கும்வரை புனித கஃபாவுக்கும் அல்ல அக்ஸாவுக்கும் விடுதலையில்ல என்று வலியுறுத்துகிறார் நூலாசிரியர். இந்நூல் மூலம் மூன்று விடயங்களை முதன்மைப்படுத்துகிறார் அவர்.

(அ) சவூதி மன்னர் பரம்பரையின் அந்தரங்கங்களை
அம்பலப்படுத்துதல்
(ஆ) வஹ்ஹாபிசத்தின் அதிநவீன திரிபுவாதத்தை விமர்சித்தல்
(இ) அமெரிக்க மற்றும் சியோனிஸ முகமூடிகளைக் கிழித்தெறிதல்

எழுபத்தி நான்கு பக்கங்களைக் கொண்ட கையடக்கமான இந்நூலில் எஸ்.எச். மௌலானா முன்வைத்திருக்கும் கருத்துக்கள் சிந்திக் கத் தூண்டுவன. கிலாகிக்கத்தக்கன!

ஒரு சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். "அறிவியல் வளர்ச்சி, அரசியல் தூர நோக்கு, ஒன்றிப்புள்ள சமூக அமைப்பு இவை மூன்றும்தான் இன்றைய காலத்தின் தீமைகளை வெல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மூன்று தேவைகளுமாகும்'' என்று தனதுரையில் குறிப்பிடும் நூலாசிரியர் தொடர்ந்து கூறுகிறார்.

“பிளவு” என்பது ஓர இனத்தின் அழிவின் வித்தாக இருக்கிறது. மத்திய கிழக்கிலே ஷியா-சுன்னிப் பிளவுதான் யூதனின் “அகன்ற இஸ்ரேல்'' சித்தாந்தத்திற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

ஒரு சிறிய எறும்பைக் கொல்ல முயன்று பாருங்கள். அது கூட தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடும். எங்கே போராட்டம் இருக்கிறதோ எங்கே எதிர்ப்பு இருக்கிறதோ அங்கே உயிரின் அடையாள மும் இருக்கிறது. அங்கே உணர்வு வெளிப்படுகிறது. ஆனால் உணர்வு களை வெளிப்படுத்த முடியாதவாறு அராபியர்கள் வஹ்ஹாபிய மன்னர்க ளால் ஒடுக்கப்பட்டுள்ளார்கள்.

கலை கலாசாரத்திற்கு எதிராக செயல்படுகின்ற வஹ்ஹாபிய வெற்றுச் சிந்தனைகள் உண்மையிலேயே யூதனின் சிந்தனையிலிருந்துதான் ஊற்றெடுக்கின்றது. வஹ்ஹாபியர்கள் உயிருள்ள தலைமைத்துவத்தை நிராகரிக்கிறார்கள். பண்பாட்டை அழிக்கிறார்கள். பண்பாடுதான் அதிர்ச்சி களைத் தாங்கிக் கொள்ளக்கூடியது. இவைதான் அராபியனின் வீழ்ச்சிக்கு முழுமையான காரணமாகும்.

சரித்திரம் வருங்காலத்துக்கு எடுத்துச் சொல்லும் நற்செய்தி தெரியாத, உங்களது கண்களுக்குக் கடந்த காலம் ஓர் அழிந்த சித்திரம் போலத் தெரிகின்றது. அகன்ற இஸ்ரேலின் உருவாக்கத்தின் பின் சுமார் 100 வருடங்கள் கழிந்து அராபிய வரலாற்றை எழுதுங்கள் என்று உங்களிடம் கேட்கப்பட்டால், நீங்கள் எதை எழுதுவீகள்? அங்கே கடந்த காலத்தைச் சிதைத்துவிட்டு வரலாற்றின் ஏடுகளைப் பின்னோக்கிப் பார்க்க உங்களுக்கு என்ன இருக்கிறது? அங்கிருந்து நாம் அறியக்கூடியது என்ன? எமது முன்னோர்களின் அடையாளங்கள், அடக்கஸ்தலங்கள், நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருள் அடையாளங்கள் (Archological Proofs) புலமையின் நினைவுச் சின்னங்களான நூல்கள் கிதாபுகள் அனைத்தும் “ஷிர்க்” காகக் சிதைக்கப்படுகின்றன. வஹ்ஹாபிகளும் சியோனிஸ்டுகளும் இதைத்தான் அங்கு செய்து கொண்டிருக்கின்றன. இங்கும் எமது வரலாறை நாம் எழுத ஆரம்பிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அது எமது வருங்காலப் பெருமையையும் வலிமையையும் உணர்த்த வேண்டும். "மக்களின் சமுதாய முன்னேற்றத்தில் நாகரீக வளர்ச்சியில், வரலாற்றுப் பதிவுகள் மட்டுமே தனியிடம் வகிக்கின்றன" இதை ஸியோனிஸ்டுகள் நன்குணர்ந்து செயல்படுகிறது. யூதனின் பழைய ஏற்பாட்டின்படி (Old Testment) அவனது பெருமையை கைபர் கோட்டை (Kyber Font) எடுத்துக் காட்டுவதாகவும் அல்-அக்ஸாவை ஸொலமன் கோவிலாக மாற்றுவதால் எமது வரலாற்றை மீண்டும் நாம் ஊன்றி எழுத முடியுமென யூதன் கூறும் அதேவேளை, வஹ்ஹாபியர்கள் எமது வரலாறு களைத் தேடி அழித்துக் கொண்டிருக்கிறார்கள். வஹ்ஹாபியர்ளின் உரத்த குரல் எமக்குத் தலைமைத்துவம் தேவையில்லை, அடையாளம் என்பது ஷிர்க்கானது. இறைவனின் சீற்றத்தைத் தணிப்பதற்காகவே நாம் அடையாளங்களை அழிக்கின்றோம் என, கோபங் கொண்ட இறைவனின் பூலோகப் பிரதிநிதிகள் போலச் செயற்படுகின்றார்கள். அறியாமையிலும் மந்த புத்தியிலும் அழுந்திக் கிடக்கும் இந்த தெனது முல்லாக்கள் காலத்தின் தேவையை உணர இன்னும் பல தசாப்தங்களாகும்.

இன்று மத்திய கிழக்கின் நிஜமான எதிரி வஹ்ஹாபிய மன்னர்களா அல்லது ஈரானிய ஆட்சியாளர்களா? என்று கேட்கவே தோன்றுகின்றது. இமாம் ஆயத்துல்லா குமைனி அவர்களின் அரசியல் அறிவியல் ஆன்மீகச் சிந்தனைகள் ஈரானியர்களை ஒரு பரிணாமச் சமுதாயமாக மாற்றியுள்ளது. வஹ்ஹாபியர்கள் எம்முன்னோர்களை இகழும் பொழுது ஈரானியர்கள் எம் முன்னோர்களைப் புகழுகிறார்கள். வஹ்ஹாபியர்கள் எமது முன்னோர் களின் அடையாளங்களை ஷிர்க்கு, பித்ஆ வென அழிக்கும் பொழுது ஈரானியர்கள் பாதுகாக்கிறார்கள். வஹ்ஹாபியர்கள் எமது வரலாறுகளுக்கு எதிராகச் செயல்படும் பொழுது அவர்கள் எமது வரலாறுகளை ஊன்றி எழுதுகிறார்கள். பெருமானாரின் மனைவி கதீஜா நாயகி அவர்கள் வாழ்ந்த வீடுகளை வஹ்ஹாபிய மன்னர்கள் மலசலகூடங்களாக மாற்றியுள்ளனர்.

அன்றைய காலகட்டத்திலும் மௌலூது போன்ற காவியங்கள் தௌஹீதுக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. எப்போதாவது எங்காவது மௌலூது போன்ற காவியங்கள் ஓரிறைவனை இரண்டென்றோ நாஸ்திக மதச் சிந்தனைகளை வலியுறுத்தி இருப்பதாகவே வஹ்ஹாபிகளுக்கு நிரூபிக்க முடியாது... கிதாபுகளை எரிப்பது, கபுறுகளை இடிப்பது இறந்த உடல் மீது வன்முறை புரிவது, முன்னோர்களின் அடையாளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பது... மைவாடியைக் கூறுபோடுவது, மசூதிக்குப் பக்கத்தில் நபிவழி மசூதி கட்டுவது, விரல் ஆட்டுவது, அடித்துக் கொள்வது இதற்காகக் காவல் நிலையம் சென்று அந்நியர் இடத்தில் நியாயம் கேட்பது இவைதான் இன்றைய நவீன காலத்தின் தௌஹீதாகும்.

அமெரிக்காவில் அறபு மன்னர்கள் குடித்துக் கும்மாளமிட்டு சல்லாபமிடும் மிகக் கேவலமான லவகாஸ் (டுயளநபயள) நகரத்தைப் போல் புனித மக்காவையும் மாற்றுவதற்காக யெஹூதிகள் வஹ்ஹாபியக் குண்டர்களைப் பயன்படுத்தி கஃபாவுக்கு எதிரே இருந்த உம்மாதுல் முஃமீனின் கதீஜா நாயகி அவர்களின் வீட, இறைதூதர் சிறு பராயத்தில் வாழ்ந்த வீடு, சஹாபாத் தோழர்களின் குடியிருப்புக்கள், பனூ ஹாரிம் களின் குடியிருப்புக்கள் ஆன்மீக உள்ளுணர்வுகளைத் தூண்டும் இறைத் தூதர் காலத்து பழைய கட்டிடங்கள், தொல்பொருள் அடையாளங்கள் அனைத்தையும் பித்ஆ என்ற பெயரில் தரை மட்டமாக்கிவிட்டு, யூதனின் மெக்டொனால்ட் (Mecdonald) சிற்றுண்டிச்சாலைகள் Pepsi, Fanda விளம்பரங்கள் என்பவற்றை நிர்மாணிக்கிறார்கள்.

“நாகரீகமற்ற காட்டுமிராண்டி போன்றவர்கள் அராபியர்கள்” என்ற கோல்டா மேயர் கூறிய காலகட்டத்திலும் விழித்துக் கொள்ளாதவன் அராபியன் விழித்துக் கொள்ளாததற்கான காரணம் அடையாளங்களையும் வரலாறுகளையும் இழந்தவர்கள் தாம் என்பதை அவன் அறிந்திருந்தான்.

வெளிநாடுகளிலிருந்து மத்திய கிழக்கிற்குள் நுழையும் காட்டு மிராண்டிகளின் தாக்குதலை முறியடிக்கும் “வீர பூமி ஈரான்தான்” எத்தனை துன்பங்களுக்குப் பிறகும் தன் பெருமைகளையும் வலிமைகளையும் இழந்து விடாமல் இருக்கும் பூமி ஈரான்தான். இங்கேதான் இமாம் ஆயத்துல்லா கொமைனி அவர்கள் உலகம் தழுவிய தீமைகளை எதிர்கொள்கின்ற தியறிவை (அறிவை) முன் வைத்தார்கள். இங்குதான் அவர்களின் விசால மான இதயம் திறந்தது. உலகம் தழுவிய இஸ்லாமியர்களின் மானம் காக்கப் புறப்பட்ட வீரன் இவர்தான். மனதுக்குள் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிய நான் வரவில்லை. நாம் எங்கு ஒன்றுபடுகின்றோம் என்பதைக் காணவே நான் இங்கு வந்துள்ளேன் என்ற இவரது சிந்தனையை நாம் இங்கு வளர்த்துக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற, சிந்தனைக் கருவூலங்கள் நூலின் எல்லாப் பக்கங்களிலும் விரவிக் கிடக்கின்றன. மௌலானாவின் பன்முகப்பட்ட நூலறிவும் ஆழந்த புலமையும் அதிதீவிரச் சிந்தனையும் அதீத துணிச்சலும் இச்சிறு நூலில் புதைந்து கிடக்கின்றன எனில் அது மிகைப்பட்ட கூற்றல்ல. இவை எல்லாவற்றையும் விட ஒர சாதாரண வாசகனும் புரிந்து கொள்ளத் தக்க எளிய வசன நடை நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. சில ஆங்கிலக் கடின பதங்களின் தமிழ் வடிவம் சிறப்பாயுள்ளது.

அனைவரும் படித்து, சிந்திக்க வேண்டிய நூல் "அறியப்படாத அரேபியா" வாகும்.

**- கலைவாதி கலீல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் எதிர்வினை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறியவனாக ஆரம்பிக்கிறேன். அஸ்ஸலாமு அலைக்கும்.

கருத்துக் கண்ணோட்டம் பாகம் 3 என்னால் எழுதப்பட்ட வாதம் (1) தலைப்பிலான கட்டுரையை எந்தவிதமான மாற்றங்களுமின்றி பிரசுரித்தமைக்கு பதிப்பாசிரியர் திக்குவல்லை ஸப்வான் அவர்களுக்கு நன்றி. துலாக்கோலாக நின்று நாம் எழுதும் மறுப்புரைகளைப் பிரசுரிப்பதாக அவர் அறிவித்தமை, எம் கருத்துக்களை சுதந்திரமாகத் தரத் தூண்டுகோலாயமைகிறது. அந்த உத்தரவாதம் பேணப்படும் என்ற நம்பிக்கையில் பேனாவைத் தூக்குகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

சோதரர் மர்சூம் மௌலானா அவர்கள் தன் பிரதிவாதம் தொடக்கத்திலேயே கச்சையைக் கட்டிக்கொண்டு சர்ச்சையைக் கிளப்பிவிட்டார். ஆமாம். அல்லாஹ் ரசூலை, சஹாபாக்களைப் பண்பாகப் புகழும்போது உண்மையான சஹாபாக்கள் என்று தடித்த எழுத்தில் எடுத்துக் காட்டி எம்மை எல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டார். உண்மையான சஹாபாக்கள் என்றால்...........? சிந்தனையைத் தூண்டுகிறது அல்லவா? அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதத்தில் ஏதோ மர்மம் உண்டு என்று தோன்றுகிறதா? பொறுங்கள்! என் கட்டுரையைப் படித்தால் விளக்கம் தானாக வரும்.

"பட்டுக்கோட்டைக்கு வழிகேட்டானாம் ஒரு பட்டிக்காடு, துட்டுக் கிரண்டு கொட்டைப்பாக்கென்றானாம் ஒரு மொட்டைப் பையன்" அதே போல் இருக்கிறது அவர் எனக்களித்துள்ள பதில்கள். ஒரு சில சட்டத் தரணிகள் சரக்கில்லை என்றால் பெஞ்ஜில் அடித்து சத்தம்போட்டு சத்தத் தரணிகளாய் மாறி மறுதரப்பாரைப் பயமுறுத்த முயல்வதுண்டு. திசைதிருப்ப முயலும் பாங்கு அது. அண்மைக்கு திரைபோடும் பாங்கும் அதுவே. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா? என்ன!

கருத்துக்களை, எதுகை மோனைகளை முறையாகக் கையாண்டு இலக்கிய நையாண்டித் தனத்தோடு வழங்கியமையைப் பார்த்துவிட்டு இந்தப் பாகம் 3 இற்கு "இடக்கரடக்கல்" என்று பெயரிட்டிருக்கலாம் என்று அங்கலாய்க்கிறார் கட்டுரையாளர். எதுகை மோனையுடன் சுவையாக கலைப்பாக எழுதுவதென்பது வாசகரை விருப்புடன் வாசிக்கத் தூண்டும் ஒரு கலையாம். உப்புச் சப்பற்ற வாதம் புரிந்து வெல்ல நினைப்பது இலக்கியவாதிகளின் கலையுமல்ல நிலையான அழகுமல்ல.

குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டாமல் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தான் விளக்கியுள்ளதாக மார் தட்டும் மர்சூம் மௌலானா அவர்கள் பொறுமையாக இருந்து வாசித்தால் அகம்பாவ எண்ணங்கள் அகன்று முகம் பார்க்கும் கண்ணாடியாகத் தெரியலாம். தற்பெருமை மிக்க கருத்துக்கள் அவரின் கட்டுரையில் நிழலாடுகின்றன. இவையெல்லாம் வித்துவச் செருக்கா அல்லது தத்துவச் செருக்கா என்று புரியவில்லை.

"பத்ர், உஹத் யுத்தம் என்று பேசி அபூஜஹ்லையும் அபூ சுப்யானையும் ஏன் இன்னும் வரலாறு தூசித்துக்கொண்டிருக்கிறது?" என்று பக்கம் 29 இல் முரண்படுகிறார். ஒரு முஸ்லிமான. அன்பு நபியின் அருமை ஸஹாபி அபூசுபியானையும் பரமவிரோதி அபுஜஹ்லையும் இணைத்துப்பார்க்க முயல்வது வரலாற்றின் அரிவரியே தெரியாத பாங் காகும். அன்பு நபியை கொல்லவென்று வாளெடுத்து சூளுரைத்த உமர் (ரலி) நபிகளின் கரம் பற்றியபின் உண்மை முஸ்லிமாக இணைந்து இஸ்லாத்தின் 2ம் கலீபாவாக உயர்ந்ததையும் மௌலானா அவர்கள் அபூஜஹ்லுடன் சுட்டிக்காட்டச் சொல்கிறாரா? (நஊதுபில்லாஹ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இஸ்லாத்தில் இணைந்த பின் அவரின் முன் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன என்ற கருத்துள்ள ஹதீஸை அபூசுபியானை அபூஜஹ்லுடன் இணைத்து வசைபாடும் நண்பருக்கு இதோ ஆதாரம் ஒன்று.

நபித்தோழர் ஒருவர் இஸ்லாத்தை ஏற்க முன்வந்தவராக நபிகளாரிடம் வந்து. "நபியவர்களே, உங்கள் கரம்பற்றி இஸ்லாத்தில் இணைகிறேன். கரத்தை நீட்டுங்கள்" என்றார். நபிகளார் தம் கரத்தை நீட்டினார்கள். ஆனால் அந்தத் தோழரோ தாம் நீட்டிய கரத்தை மடக்கிக் கொண்டார். உடனே நபிகளார் அந்தத் தோழரிடம் ஏன் நீட்டிய கரத்தை மடக்கிக்கொண்டீர்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் "நான் இஸ்லாத்தில் இணைந்தால் எனது கடந்த கால குற்றங்கள் அனைத்தும் மன்னிக்கப் படுமா?"என்று கேட்டார். உடனே நபிகளார் "ஒரு மனிதர் ஹஜ் வணக்கம் புரிந்தால் அவரது கடந்தகால குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஒருவர் மார்க்கத்திற்காக நாடு துறந்து செல்லும் ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டால் அப்போதும் அவரது கடந்தகால குற்றங்கள் மன்னிக்கப்படுகின்றது. அதுபோன்று ஒருவர் இஸ்லாத்தில் இணைந்தால் அதற்கு முன்னர் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன" என்று கூறினார்கள். (அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) (நூல் முஸ்லிம் 192)

கட்டுரையாளரின் இறுமாப்பான, மார்க்கத்துக்கு முரணான பல்வேறு சொற்பிரயோகங்கள் பானைச் சோற்றுக்கு பதமாக தருகிறேன். இதோ அவரின் எழுத்துக்கள் சில-

1. முஆவியாவின் முதலைக் கண்ணீர் (பக்கம் 25)

2. முஆவியா பாணியிலான தந்திரம் (பக்கம் 27)

3. அபூஸுஃப்யானுக்கும் உஹதில் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஈரலைப் புசித்த ஹிந்தா
   இருவருக்கும் மகன் முஆவியா (பக்கம் 27)

4. முஆவியாவை ஸஹாபி என்ற போர்வைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அபூஸுஃப்யானையும் அபூஜஹ்லையும் வரலாறு தூசித்துக் கொண்டிருக்கிறது (இங்கு அபூஜஹ்லுடன் இனைக்கிறார்)
6. ஆஇஷாவுக்கும் அலி (ரலி) க்கும் இடையில் நடந்த யுத்தம் (இங்கு அன்பு நபியின் அருமை மனைவியை (ரழி) என்று கண்ணியமாகக் குறிப்பிடாமல் முகவரி தெரியாத வெறும் ஆஇஷாவாக மரியாதைக் குறைவாகக் காட்டுகிறார்)

மேற்படி 6 விசயங்களையும் வாசித்தால் கட்டுரையாளரின் விஷம்தோய்ந்த விசர்க்கருத்துக்கள் வெளியாகும். மேற்படி 1, 2, 3, 4 இலக்கங்களில் அவரின் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட, "முஆவியா (ரலி) அன்னார் ஒரு ஸஹாபி" என்பதற்கு ஆதாரமாக (முஆவியா (ரழி) அவர்களின் பெருமை பற்றி திர்மிதி (3842). புஹாரி (3764) ஆகிய இரு ஹதீஸ்களை கருத்துக் கண்ணோட்டம் 3 இல் ஏற்கனவே எழுதியுள்ளேன்) இதோ கட்டுரையாளரின் கண்களை அகலவே திறக்க இன்னும சில ஹதீஸ்கள்

I. முஆவியா (ரழி) ரிவாயத் செய்த ஹதீஸ் (புஹாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ளது)
எவரைக்கொண்டு அல்லாஹ் நல்லவற்றை எதிர்பார்க்கிறானோ அவருக்கு மார்க்க விளக்கத்தை அளிப்பான். (அதாவது அவரைக் கொண்டு மார்க்க சட்டத்திட்டங்களில் விளக்கம் உள்ளவனாக ஆக்குவான்)

II. இப்னு அபீ முஸைக் (ரஹ்) கூறியதாவது இப்னு அவர்களிடம் "நீங்கள் நம்பிக்கையாளரின் தலைவர் முஆவியா (ரழி) அவர்கள் விஷயமாக ஏதும் கூற விரும்புகிறீர்களா? ஏனெனில் அவர் வித்ரை ஒரே ஒரு ரக்அத்தாகத் தான் தொழுகிறார்" என்று கூறப்பட்டது அதற்கு இப்னு அப்பாஸ் (ரழி) "முஆவியா (மார்க்க) சட்ட நிபுணர் ஆவார்" என்று பதிலலித்தார்கள்.

முஆவியா (ரழி) அவர்கள் பற்றி இவ்வளவும் போதுமல்லவா? வாதத்திற்கு மருந்து கட்டலாம் பிடிவாதத்திற்கு

முஆவியா (ரழி) அவர்களை அறிமுகப்படுத்த அன்னாரின் சுருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு இங்கு. அவர்கள் முஆவியா பின் அபூசுப்யான் (ரழி) அவர்கள் குறைசிக் குலத்தில் உமையாக் குடும்பத்தைச் சேர்ந்தவர். (முஆவியா பின் அபூசுப்யான் பின் ஹரப் பின் உமையா பின் அப்திசம்ஸ் என்பது அன்னார் வம்ச பரம்பரை) தாயார் பெயர் ஹிந்த் பின்த் உத்பா பின் ரபீஃ. மக்கா வெற்றியின்போது முஆவியா (ரழி) அவர்களும் பெற்றோரும் சகோதரர் யஸீத் பின் அபூசுப்யானும் இஸ்லாத்தில் இணைந்தனர். நபி (ஸல்) அவர்களின் எழுத்தாளராகப் பணிபுரிந்த முஆவியா (ரழி) கலீபாக்கள் உமர் (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோரின் ஆட்சியில் தொடர்ந்து 20 ஆண்டுகள் சாம் தேசத்தின் ஆளுநராக இருந்தார். ஹஜ்ரி 40 இல் முதலாவது உமையா கலீபாவாக பொறுப்பேற்றார். ஹிஜ்ரி 60 இல் தமது 82 ஆம் வயதில் டமஸ்கஸில் மரணமானார். (மிப்தா ஹுஃப்பான் இர்ஷா துஸ்ஸாரி) ஆதாரம் ஸஹீஹ் புஹாரி 4ம் பாகம் பக்கம் 393 ரஹ்மத் அறக்கட்டளை வெளியீடு)

ஹிந்த் பின்த உத்பா (ரலி) (ஹிந்தா (ரலி) வை நிந்தித்தவர்க்கு இந்த பதில்)...................

ஆஇஷா (ரலி) கூறுகிறார்கள். ஹிந்த் பின்த் உத்பா (நபிகள் (ஸல்) அவர்களிடம் வந்து) "அல்லாஹ்வின் தூதரே, நான் இஸ்லாத்தை எதிர்த்து வந்தபோது பூமியின் முதுகிலுள்ள வேறெந்த வீட்டார் இழிவடைவதை விட உங்கள் வீட்டார் இழிவடைவதே எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின் இன்று பூமியின் முதுகிலுள்ள வேறெந்த வீட்டார் கண்ணியம் பெறுவதை விட உங்கள் வீட்டார் கண்ணியம் பெறுவதே எனக்கு அதிகம் விருப்பமானதாக மாறி விட்டது." என்று சொன்னார்கள். இதைக் கேட்ட நாயகம் (ஸல்) அவர்கள் என் உயிரைத் தன் வசம் வைத்திருப்பவன் மீது சத்தியமாக (இந்த உனது விருப்பம்) இன்னும் (அதிகமாகும்) என்று பதிலளித்தார்கள். அப்போது ஹிந்த் பின்த் உத்பா, அல்லாஹ்வின் தூதரே (என் கணவர்) அபூஸுஃப்யான் மிகவும் கருமியான ஒரு மனிதர். ஆகவே. அவருக்குரிய பணத்திலிருந்து (அவருக்குத் தெரியாமல் எடுத்து) எங்கள் பிள்ளைகளுக்கு நான் உண்ணக் கொடுத்தால் என் மீது குற்றமாகுமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "நியாயமான அளவிற்கு எடுத்து உண்ணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால் குற்றமில்லை" என்று பதிலளித்தார்கள்.

*அபூஸுஃப்யான் (ரலி)*

இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள். முஸ்லிம்கள் அபூஸுஃப்யானைப் பார்ப்பதுமில்லை. அவரைத் தம் பக்கம் பொருட்படுத்துவதுமில்லை. ஆனால், அவர் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். மூன்று விடயம் என்னிடத்தில் இருக்கின்றன. அவற்றை நான் உங்களுக்குத் தருகிறேன்.

1. அரபியரில் மிகவும் அழகான உம்மு ஹபீபாவை உங்களுக்கு திருமணம் முடித்து தருகிறேன்.
2. என்னிடம் முஆவியா இருக்கிறார். நீங்கள் உங்களிடத்தில் எழுத்தாளராக வைத்துக் கொள்ளுங்கள். (குர்ஆனை எழுதிய முஆவியா (ரலி) யைத் தான் கட்டுரையாளர் தூற்றுகிறார்)
3. நீங்கள் எனக்குக் கட்டளையிடுங்கள், நான் எப்படி முஸ்லிம்களுடன் ஆரம்பத்தில் யுத்தம் செய்தேனோ அதேபோல் காபிர்களுடன் யுத்தம் செய்வேன். (முஸ்லிம்)

உம்முஹாதுல் மு:.மினீன் மு:.மின்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள்

அன்னாரைப் பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. நபியவர்களின் அருமை மனைவி என்ற அந்தஸ்து ஒன்றே போதுமே! ஒரேயொரு கன்னிப் பெண்ணாக மணம் முடிக்கப்பட்டவர். நபியவர்களின் சுக துக்கங்களில் இரண்டறக் கலந்தவர். நபியவர்களால் வெகுவாகப் பாராட்டப்பட்டவர். பன்னூற்றுக் கணக்கான ஹதீஸ்களை உலகுக்குத் தந்தவர். நபியவர்களின் சொல், செயல், நடையுடை, பாவனை அனைத்தும் அறிந்தவர். நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகும் வாழ்ந்தவர். நபித்தோழர்கள் தம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆதாரமாகக் கண்டவர். இஸ்லாமிய சட்ட திட்டங்களை நன்குணர்ந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக உம்முஹாதுல் மு:.மினீன். இத்தகு உயர் சிறப்பு மிக்கவரைத் தான் கட்டுரையாளர் வெறும் ஆஇஷா என்று குறிப்பிடுகிறார். (நஊதுபில்லாஹ்) முஸ்லிம் அறிஞர்களால் ஆஇஷா (ரலி) அவர்களைப் பற்றி எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கட்டுரையாளர் தன் அறியாமையை அகற்றி அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையேனும் எடுத்து வாசிக்க ஆலோசனை கூறுகிறேன்.

நபி (ஸல்) அவர்கள் ஆஇஷா (ரழி) அவர்களைப் பற்றி கூறிய பொன்மொழி

I. நான் ஆயிஷாவின் முன் கையின் மென்மையை சுவர்க்கத்தில் பார்த்தேன். (அறிவிப்பவர் ஆயிஷா (ரழி) அஹ்மத் 23925)

II. ஆண்களில் நிறையப் பேர் முழுமையடைந்திருக்கிறார்கள். பெண்க ளில் பிர்அவ்னின் துணைவியர் அப்ஸாவையும் இம்ரானின் மகள் மர்யமையும் தவிர வேறெவரும் முழுமையடையவில்லை. மற்றப் பெண்களைவிட ஆயிஷாவுக்குள்ள சிறப்பு எல்லாவகை உணவு களைவிடவும் 'ஸரீத்' என்ற உணவுக்குள்ள சிறப்பைப் போன்றதா கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அபூ மூஸா (ரழி) புஹாரி 3417. முஸ்லிம் 4459)

III. அன்னை ஆயிஷா (ரழி) தொடர்பாக நபி (ஸல்) அவர்களின் மற்ற மனைவியர் குறை கூறியபோது நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவின் விஷயத்தில் எனக்குத் துன்பம்தராதீர்கள். ஏனெனில் ஆயிஷாவின் படுக்கையிலிருக்கும்போதே தவிர வேறெந்த மனைவியின் படுக்கையிலும் வஹி எனக்கு வருவதில்லை எனக் கூறினார்கள்.
(ஆயிஷா (ரழி) புஹாரி 2581. முஸ்லிம் 3888)

IV. ஆயிஷா (ரழி) அவர்களைப் போன்று தெளிவாகப் பேசக்கூடிய எவரையும் நான் கண்டதில்லை
(மூஸா பின் தல்ஹா (ரழி) திர்மி 3819)

V. நபித் தோழர்களான எங்களுக்கு ஹதீஸில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்போம் அப்போது (அவ்வி'யத்தல்) புதியதொரு ஞானத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஒருபோதும் இருந்ததில்லை. (அபுமூஸா (ரலி) திர்மிதி 3818)

VI. வணக்கத்துக்குரியவன் மீது சத்தியமாக, மூத்த நபித்தோழர்கள் வாரிசுரிமைச் சட்டம் தொடர்பான அறிவை அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம் பெற்றதை நான் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மஸ்ருக். நூல் தாரமி)

நபிகளின் நேசர்களைப் பற்றி அல்லாஹ் என்ன கூறுகிறான் தெரியுமா? "அல்லாஹ் அவர்களைப்பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள்." அது, எவர் தன் இரட்சகனுக்குப் பயப்படுகிறாரோ அவருக்குரியதாகும்.

(அல் மாயிதா 98 : 18)

அல்ஹதீஸ் அந்த ஸஹாபாக்களைப் பற்றி இப்படிக் கூறுகிறது. என் ஸஹாபாக்களுக்கு ஏசாதீர்கள். ஏனெனில் உங்களில் ஒருவர் உஹது மலையளவு தங்கத்தை அல்லாஹ்வுக்காகச் செலவளித்தாலும் அந்த ஸஹாபாக்களுடைய ஒரு "முத்து" க்குச் சமமாகமாட்டாது.

(முஸ்லிம் 2540)

ஒரு தடவை உபைதில்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் மிக்தாத் இப்னு அஸ்வத் (ரலி) என்ற ஸஹாபியை ஏசினார். இதைக் கேள்விப்பட்ட தந்தை உமர் (ரலி) அவருடைய நாவை வெட்டுவதாக முடிவுசெய்தார். நபிகளாரின் தோழர்கள் இது சம்பந்தமாக சிபார்சு செய்தபோது எனது மகனுடைய நாவை வெட்டுவதற்கு என்னை விட்டு விடுங்கள். ஏனெனில் எனக்குப் பின்னால் நபிகளாரின் தோழர்களை யாரும் ஏசுவதற்குத் துணிவு பெறக் கூடாது என்பதற்காக

உமரிப்னு அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கலீபாவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் முஆவியா (ரலி) அவர்களைச் சாடக்கூடியவர்களுக்கு பல சவுக்கடிகளை வழங்கியிருக்கிறார்கள்.

இமாம் அஹமதிப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் மகன் அறிவிப்பதாவது : நான் எனது தந்தையிடம் ஸஹாபாக்களில் ஒருவரை ஏசுவது பற்றிக் கேட்டபோது. "யார் ஏசுகின்றாரோ அவருடைய கழுத்தை வெட்டிக் கொலைசெய்ய வேண்டும் என நான் அபிப்பிராயப்படுகின்றேன்" எனக் கூறினார்கள். அப்போது நான் இத்தண்டனையை விட வேறு தண்டனைகள் இல்லையா என வினவிய போது "கழுத்தை வெட்டுவதுதான் தண்டனை. அவரை நான் ஒரு முஸ்லிமாகக் கருதவில்லை" என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொலைக்குப் பழிவாங்க வேண்டும் என்ற குற்றவியல் சட்டத்தில், சட்டத்துறையைச் சார்ந்த எனக்கு (பக்கம் 26)" என்ற தன்னைப் பற்றி தம்பட்டமடித்து வாசகருக்கு தன்னை இனங்காட்ட முயல்வது சட்டத்துறை சார்ந்தவருக்கு அழகாகுமா? கட்டுரையில் தனது ஆணவத்தை அடக்கி வாசிப்பது நல்லது. அடக்கம் தான் அறிவுக்கு அடைக்கலம் அணிகலன்.

'அல்லாஹ் அ.்.லம்' என்று மௌனமாக இருக்க முடியாது. (பக்கம் 27) என்றெழுதும் கட்டுரையாளர் எல்லாம் தெரிந்தவராகத் தன்னை இனங்காட்ட முயல்வது வேடிக்கையல்லவா? தவறானமுடிவுகளை எடுப்பதை விட அல்லாஹ்விடம் பரம் சாட்டுவது பண்பாகும். "மீண்டும், எல்லாவற்றையும் இறைவன் நன்கு அறிவான் என்று கூறிவிட்டு இருக்கலாமா? (பக்கம் 28)" என்றும் கட்டுரையாளர் கேட்பது ஈமானுக்கு பழுதில்லையா? அல்லாஹ் தன் திருக்குர்ஆனில்

"ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு உதாரணங்களைக் கூறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ்தான்
யாவற்றையும் நன்கு அறிபவன். ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள்."
(அல்குர்ஆன் 16:74)

சிலை, கப்று, கத்தம், நேர்ச்சை போன்ற ஆடைகளை அணிந்து கொண்டு ஏகத்துவத்துக்கு வேட்டு வைத்து சிலைகளுக்கு சிந்துபாடிக் கொண்டிருக்கும் கட்டுரையாளரால் அல்லாஹ் அ.்.லம் என்பதைப் புரிய திராணியிருக்காது.

சிர்க் என்றால் சிலை உடைப்பது தான் உங்களுக்குப் பெரிதாகப்படுகிறது. (பக்கம் 28) என்று எனக்கெதிராக அவரின் குற்றச்சாட்டு. இந்த இடத்தில் கட்டுரையாளர் சிலை உடைக்கும் செயலை சின்னதாகக் காட்ட முயல்வதை வாசகர் கவனிக்க வேண்டும். உங்களுக்கு ஒரு ஹதீஸ் சொல்லட்டுமா? நானும் நீங்களும் மதிக்கிறோமே 4ம் கலீபா அலி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள், நபி (ஸல்) அவர்கள் எப்பணிக்காக என்னை அனுப்பி வைத்தார்களோ அப்பணிக்காக உன்னை நான் அனுப்பி வைக்கட்டுமா? எந்தச் சிலையையும் அழிக்காமல் விட்டுவிடாதே. மேலும் தரைக்கு மேல் உயர்த்தப்பட்ட எந்த கப்ரையும் தரைமட்டமாக்காமல் விட்டுவிடாதே என்று அலி (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அறிவிப்பவர் அல் ஹய்யாத் (ரலி) (நூல் முஸ்லிம், அஹமத்)

இப்றாஹீம் நபி (அலை) சிலைகளை உடைத்த வரலாறு நீங்கள் படிக்காதிருக்க நியாயமில்லை. ஏன் தெரியுமா? நாம் அனைவரும் அன்னாரின் மார்க்க வழி வந்தவர்கள் அல்லவா? அன்னாரின் தந்தை சிலை செய்து சீவித்தவராச்சே அவரோடு முரண்பட்டு கோயிலிலிருந்து அனைத்து சிலைகளையும் உடைத்துவிட்டு கோடாரியை பெரிய சிலையின் கழுத்தில் போட்டு விட்டுப் போனது கதையல்ல மௌலானா. அழிக்க முடியாத வரலாறு. நீங்கள் என்னடாவென்றால் சிலை வணக்கம் சிலை உடைப்பது எல்லாம் சிறிய வி'யமாகத் தெரிகிறது என்கிறீர்கள்! அல்லாஹ் கண்டித்த பெரும் பாவம் எமக்குப் பெரிதாகத் தெரிகிறது. உங்களுக்குச் சிறிதாகத் தெரிகிறது, புரிகிறதா? இது தான் எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள வித்தியாசம் திகழ்கின்றது.?

அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கிறான் என்று தான் நான் எழுதியதை ஆன்மீக சமாச்சாரம் என்று (பக்கம் 30) ஒரு வகையாக ஒதுக்கி என்னைச் சீண்டுகிறீர்கள். நிச்சயம் அல்லாஹ் நாடியவர்க்கே தவிர நீங்கள் வேண்டியவர்க்கல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

வஹ்ஹாபி ஹதீஸ் குட்டையில் நான் பிடிப்பதாக வேறு (பக்கம் 30இல்) குறிப்பிட்டீர்கள். ஹதீஸ்களிலும் பிரிவினையா? இப்படி முஸ்லிம் உம்மாவைப் பிரித்து வாதம் புரிவதில் உங்களுக்கேன் அவ்வளவு அக்கறை? அல்லாஹ்வின் ஆட்சியையும் அல்லாஹ் அ.்.லம் என்பதையும் மலினப்படுத்தும் நீங்கள் திருநபியின் (ஸல்) திருவாக்கைக் கொச்சைப்படுத்துவதில் இச்சை காட்டுவது பச்சைத் துரோகமில்லையா? வஹ்ஹாபி ஹதீஸ் என்பது மௌலானாவின் மிகப்புதிய அண்மைக்கால கண்டுபிடிப்பு போலும்! காமாலைக் கண்ணுக்கு காண்பதெல்லாம் காவி நிறமாம்.

கப்றுகளின் மீது பார்வையைத் திருப்புவதை விடுத்தால் நானும் அவரும் ஒரே அணியில் இணையலாம் (பக்கம் 31) என்று தடித்த எழுத்தில் எழுதி என்னைத் தாலாட்ட வருகிறார். ஐயையோ! வேண்டாமே. கப்றுகளைக் கோவிலாக்கி அதில் கடவுளைத் தேடாதீர் என்று தான் நாங்கள் உரத்த சத்தத்தில் சொல்கிறோம். ஏன் தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கூற்று சிர்க்குத் தனம் மட்டுமல்ல, படுபயங்கரமான கிறுக்குத் தனமுமாகும். அதை முளையிலேயே நறுக்கிவிட வேண்டும்.

ஆன்மீக சக்தியை அதிகரிக்கின்ற பயிற்சி நெறி வழங்கப்படாத ஒரு சமூகத்தின் பாசறையில் வளர்ந்த நீங்கள் (பக்கம் 32) என்று அல்லாஹ்வின் மீது நம்பிக்கையுள்ள என்னை வம்புக்கிழுத்து இனங்காட்ட முயலும் நீங்கள் ஆன்மீகம் என்றால் என்னவென்பதைப் புரிந்துகொண்டால் என்னையும் சரியாக அறிந்துகொண்டிருப்பீர்கள். புனித ஹதீஸ்களுக்கு வஹ்ஹாபி லேபல் ஒட்டியும் அல்லாஹ் அ∴லம் என்பதைக் கொச்சைப்படு த்தியும் எழுதும் ஒருவருக்கு ஆன்மீகப் பாடம் கற்பிக்க வேண்டிய கட்டாயம் உண்டு. சமூகத்தின் பாசறை எனும்போது என்னை மட்டுமல்ல வாசகப் பெருமக்களையும் சேர்த்துத் தான் வம்புக்கிழுத்து அம்பு தொடுக்கிறீர்கள்.

வேதாளம் முருங்கை மரம் ஏறுவதைப் போல கர்பலா கர்பலா என்று 33,34,35 இப்படிப் பக்கம் பக்கமாக கிளறிக்கொண்டு அலறியடித்துக் கொள்வதேன்? கர்பலாவைச் சாட்டாக வைத்து ஆன்மீக புராணம் பாடுவதோ, எனது கட்டுரையில் ஆழமான பின்னணியைத் தேடி ஆழம் தெரியாமல் காலைவிடுவதோ கர்பலாவைக் களமாக்கி குத்துக்கரணம் அடிப்பதோ கட்டுரைக்கு அழகல்ல.

கர்பலாவை ஹஜ் கிரியைகளுடன் சம்பந்தப்படுத்தி அதற்கு ஆன்மீக சாயமடித்து அல்லாஹ்வின் கட்டளைகளாகக் காட்ட நினைப்பது மாபெரும் அறியாமை மட்டுமல்ல விஷயம் புரியாமையையும் காட்டு கிறது. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதை நிரூபிக்க கர்பலா நிகழ்ச்சியை ஹஜ் கிரியைகளுடன் முடிச்சுப் போடும் கட்டுரையாளர் சரியான வழியில் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. அதனால் ஹஜ் கிரியை என்றால் என்ன கர்பலாவுடன் அதை இணைக்க முடியுமா என்று தெளிவுபடுத்தும் கடமை எனக்கிருக்கிறது

நண்பரே ஹஜ் அல்லாஹ்வின் கட்டளை. அது இஸ்லாத்தின் இறுதிக் கடமை. கர்பலா.........................

5000 ஆண்டுகளுக்கு முன் ஹாஜர் அம்மையாரின் தியாகத்தில் முகிழ்ந்த தொங்கோட்டம் ஹஜ்ஜின் அங்கம். கர்பலாவில் ............. என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமோ?

இப்றாஹீம் (அலை) தன் அருந்தவப் புதல்வரை அறுத்துப் பலியிட கனவுகண்டு நினைவாக்க முயன்று ஆடு பலிகொடுத்தது ஆண்டவன் கட்டளை, கர்பலாவில் என்ன அறுப்போ? நீங்கள் தானே அல்லாஹ்வுக்காக பலியிடுதலை கொச்சைப்படுத்தி சர்ச்சையைக் கிளப்புபவராச்சே. (5000 ஆண்டுகளுக்கு முன் நரபலியைத் தடுப்பதற்கு மாற்றீடாகத் தானே ஆடு பலியிடுவது வலியுறுத்தப்பட்டது என்பது உங்கள் கட்சி, அத்துடன் விட்டீர்களா? குர்பானுக்குப் பதிலாக அதற்குச் செலவிடும் பணம் கல்வித் தேவைக்கு, பண்ணை வளர்ப்புக்கு இப்படி இப்படி நீளுகிறது உங்கள் கட்சி .....................)

ஹஜ்ஜில் குர்பான் என்றால் கர்பலாவில் ................?

நான் கர்பலாவைக் பற்றி அதிகம் பேசுவதற்கு பல்வேறு காரணிகள் இருக்கிறன (பக்கம் 36) என்கிறீர்கள். கர்பலாவுக்கும் ஹஜ்ஜுக்கும் தொடர்பே இல்லை என்ற காரணத்தைப் பூரணமாகவே புரிந்துவிட்டீர்களா? அது மட்டுமல்ல ஹஜ்ஜுக்கும் தொடர்பே இல்லை என்ற காரணத்தைப் பூரணமாகவே புரிந்துவிட்டீர்களா? அது மட்டுமல்ல ஹஜ்ஜில் பல பர்ளுகள் உண்டு. ஆண்டவன் கட்டளை அவை கர்பலாவிலோ......

நபிகளாரின் வம்சத்தில் வந்த இமாம்களைப் புறக்கணித்துவிட்டு சட்டக் கலை வல்லுனரான ஜ.்.பர் ஸாதிக் போன்ற இமாம்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டாது, முஸ்லிம் அல்லாத கல்விமான்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களை நியாயப்படுத்த முயல்வதாக 34 ம் பக்கத்தில் அவரின் குற்றச்சாட்டு (நாம் அப்படி எழுதியதில்லை. குர்ஆனிலும், ஹதீஸிலும் மட்டுமே ஆதாரம் காட்டினோம்) 34 ம் பக்கத்தில் அப்படி அவர் கூறிவிட்டு 37ம் பக்கத்தில் அவரே தன் கூற்றுக்கு மாறாக பெரியதொரு பல்டி அடிக்கிறார் இப்படி, அரசியல் அறிஞர் **GETTEL** என்பவரின் அரசியல் கோட்பாடு என்று மூன்று விசயங்களை எழுதுகிறார் (பக்கம் 37) (**GENTTEL** என்பவர் முஸ்லிமாக அவருக்குத் தோன்றுகிறது) வாசகரை ஏமாற்றுவது கைவந்த கலை இவர்களுக்கு.

கட்டுரையின் பக்கம் 27ல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சிக்குப்பிறகு பனூதைம் கோத்திரத்தைச் சேர்ந்த முதலாம் கலீபாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனூா அதீ கோத்திரத்தைச் சேர்ந்த 2ம் கலீபாவும் ஆட்சிபீடமேறினார். உமையா கோத்திரத்தைச் சேர்ந்த மூன்றாம் கலீபா............இங்ஙனம் கட்டுறையாளர் 4ம் கலீபா அலி (ரலி)க்கு முன் ஆட்சிபீடமேறிய மூவரையும் முகவரியில்லாதவர்ளாக ரலியல்லாஹுஃ அன்ஹுஃ என்று அடைமொழி யேதும் இல்லாத கண்ணியக் குறைவாக அறிமுகப்படுத்தியுள்ளார். இங்கு ஒன்றை கட்டுறையாலருக்கு............. அலி (ரலி) அவர்களுக்கு மட்டுமே (ரலி) என்ற அடைமொழி கொடுத்து எல்லா இடங்களிலும் அழைக்கும் நீங்கள் நபிகள் (ஸல்) அவர்களின் மாமன் மார்களையும் மருமகன் உஸ்மான் (ரலி) அவர்களையும் ஏன் அடைமொழி கூறி கண்ணியமாக அழைக்க மறுக்கிறீர்கள். சந்தேகத்தை நிவர்த்தி செய்வீர்களா? நபிகளார் (ஸல்) மற்ற மூன்று கலிபாக்களையும் உயிருக்குயிராய் நேசித்தார்கள் என்பதை மறுக்க முடியுமா உங்களால்?

கட்டுரையாளர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு இடத்திலும் பரிசுத்த குர்ஆனையோ பரிசுத்த ஹதீஸையோ ஆதாரமாக எடுத்துக் காட்டியதில்லை. அவருக்கு அவற்றோடு தொடர்பில்லையோ அல்லது தன் கட்டுரைக்கு ஆதாரம் தேட தகுதியோ வலுவோ இல்லையோ தெரியாது.

குர்ஆனுக்கு அப்பாலிருந்து குரல் கொடுக்கும் கட்டுரையாளரின் செயல் கண்ணியத்துக்குரியதல்ல.

<u>பின் குறிப்பு</u>

சங்கிலித் தொடராக வரவேண்டிய சில விஷயங்கள் சில சமயம் தொடர் முறிந்து இடம் பெற்றிருப்பதை வாசகர்கள் அவதானித்திருபீர்கள் பல்வேறு இடங்களில் ஒரே விதமான கருத்துக்கள் சிதறியிருந்ததால் விடை எழுதும்போது இப்படியான இடர்பாடுகளை தவிர்க்க முடியாது போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக் கண்ணோட்டம்
# - ஒரு கொள்கை விளக்கம்

கருத்துக் கண்ணோட்டம் என்ற இந்த சிறுநூலை அல்லது சஞ்சிகையை வெளியிடுகின்ற மிலேனியம் கல்வி ஸ்தாபனம் ஏன் இதனை வெளியிடுகின்றது. இதன் மூலம் வாசகர்களுக்கும் இதர சமூக அங்கத்தவர் களும் எதனை உணர்த்த வேண்டும் என்பதால் பற்றி மிலேனியம் கல்வி ஸ்தாபனத்தின் கொள்கை விளக்கம் சார்ந்த விடயங்களை இந்த இதழில் நாங்கள் அலச விரும்புகின்றோம்.

எமது சஞ்சிகையின் கடந்த 3 பாகங்களிலும் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களையும் வாசகர்கள் நன்கு ஆய்ந்து விளக்கியிருப்பார்கள். பொதுவாக கருத்து என்ற சொற்பிரயோகமே ஒரு சிந்தனையின் சொல் வடிவம் என்பதனை அனைவரும் அறிவர். எல்லா மனிதர்களும் ஒரே விதமாகவே சிந்திப்பார்கள் என்று ஒரு கூற்று இருக்குமாக இருந்தால் அது மானுட இயற்கைத் தன்மைக்கே விரோதமானதாகும். எனவே, ஒவ்வொரு மனிதனுடைய சிந்தனையாற்றல் வேறுபடும்போது வித்தியாச மான கருத்துக்கள் தோற்றம்பெறுவதும் அத்தகைய கருத்துக்களை ஏற்போர் கூட்டமாக குழுக்களாக மாறி கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் தோற்றம் பெறுவதும் மனிதப் பிறவியின் வரலாறு நெடுகிலும் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்ற ஒரு அம்சமேயாகும். காலத்தின் தேவைக்கேற்ப கருத்தியலின் ஆழமும் அகலமும் மாற்றம் பெற்றேயாக வேண்டும் என்பதே கூர்ப்புக் கொள்கையின் அல்லது கருத்தியலின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படைத் தத்துவம்.

எவ்வாறாயினும் இத்தகைய இயல்பு நிலையின் யதார்த்தங்களை கொஞ்சமும் உணராமல் காலநீரோட்டத்தில் வாழ்க்கைப் படகினை ஓட்டு கின்ற கலையினை அறியாமல் கருத்துத் திணிப்பினை எவ்விதத்திலேனும் சாதித்துவிடத் துணிகின்ற குறுங்குழுவாத அறிஞர்களும் எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் இன்று பரவிக்கொண்டே வருகின்றார்கள். இது ஏன்? இதற்கான பின்னணி என்ன? என்றெல்லாம் ஆய்வு செய்யவேண்டிய முக்கிய காலப்பகுதியிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றபோது ஆரோக்கியமான கணைவீச்சுக்கள் நிகழ்வது உண்மையானதே. ஆனால் "கருத்துக் கண்ணோட்டம்" போன்ற ஒரு காத்திரமான சமூக அரசியல் மற்றும் ஆன்மீகப் பார்வைகளை உள்ளடக்குகின்ற ஒரு கருத்துக் களத்தில் நின்றுகொண்டு கணைவிடுக்கின்ற போது சமூக உணர்வுடனும் பொறுப் புணர்ச்சி என்ற கூட்டுப்பொறுப்பினையும் உணர்ந்து தமது கருத்துக்களை வெளியிடுவதே தர்மமாகும். அதைவிடுத்து வரம்புமீறி அறிவியலை மறுதலித்து உணர்ச்சிகளுக்கு அடிமையாகி சமூகக் கடமையை மறந்து கருத்துக்களைத் திணிப்பது அறிவியல் நாகரீகத்திற்கு முற்றிலும் முரணானதாகும்.

இன்றைய மனிதகுலம் முழுவதற்குமே ஒட்டுமொத்த எதிரியாகத் திகழ்கின்ற "ஸியோனிஸத்தின்" முகத்திரையைக் கிழித்து அதன் சுயரூபத்தை அம்பலமாக்கி அதன் அடிவருடிகளை இனங்காட்டுவதே நிகழ்கால அறிஞர்களதும் படைப்பாளிகளினதும் கடமையாகும். இதனை யார் செய்தாலும் வரவேற்புக்குரியதே. ஸியோனிஸம் என்ற கட்புலனாகாக நாசகார சக்தி சர்வதேச ரீதியில் வியாபித்திருக்கின்றது என்ற உண்மையை முஸ்லிம் முஸ்லிமல்லாத சமூகத்தினர் யாவரும் ஏற்றுக்கொண்டிருந்தாலும் ஸியோனிஸத்தினுடைய அன்றாட வாழ்வியல் வெளிப்பாடு என்ன என்று எம்மில் அனேகர் ஆராய்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலும் வெள்ளைமாளிகையும் ஸியோனிஸத்தின் தலைமைப் பீடங்கள் என்று அறிந்திருந்தால் மட்டும் போதாது. விரல் ஆட்டுவதா? இல்லையா? கப்றுகளை இடிப்பதா? கண்ணியம் செய்வதா? என்று தினமும் எமது சமூகத்தார்கள் புரிகின்ற வீண் சச்சரவுகளின் பின்னணியிலும் ஸியோனிஸம் திகழ்கின்றது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்

கருத்துக்கண்ணோட்டம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் உன்னதமான ஒரு நோக்கிலேயே எமது ஸ்தாபனத்தால் வெளியிடப் படுகின்றது. ஆனால் இதில் இடம்பெற்ற ஆக்கங்களில் சில எவ்விதமான முற்போக்கான சேதிகளையும் முன்வைக்காமல் ஏதோ ஒரு சில வரலாற்றுத் தவறிழைத்தவர்களை பாதுகாப்பதற்காகவும் மத்திய கிழக்கு மன்னராட் சியை சூயென்று மறைமுகமாக ஆதரிப்பதற்காகவுமே இடம்பெற்றுள்ளன. இத்தகையவர்களின் ஆழமற்ற ஆனால் மௌட்டீகத்தனமாக உணர்ச்சி யைத் தூண்டுகின்ற கருத்துக்களின் பூர்வீகம் பின்னணி என்ன? இவர்கள் எம்மோடு முரண்படுகின்ற விடயங்கள் எவ்வித்தில் நன்மைகளைத் தரப்போகின்றன? என்று கேள்விகள் தொடுத்தால் பதில்களை வாசகர்களே அறிந்துகொள்வார்கள்.

தடி எடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரனாக முடியுமா? அறிவிய லும் சமூகவியலும் உணராதவன் சீர்திருத்தம் கொண்டுவர முடியுமா? மன்னராட்சியை மௌனமாக சம்மதிப்பவர்கள் இஸ்லாமிய கருத்தியலை உணர்ந்தவர்களா? என்றெல்லாம் ஆராய்ந்தால் இவர்களின் அறிவியல் வரட்சி புரியும். ஆனால் இவர்கள் இல்லரும் இஸ்லாம் பேச வேண்டும் என்ற உந்துதலில் எதை எதையோவெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறார் கள். இதுதான் இன்றைய முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடு.

ஆன்மீகம் நேர்மையற்றதாகவோ வரலாற்று உண்மைகளிலிருந்தும் அறிவியலிலிருந்தும் தூரமானதாகவோ இருக்க முடியாது. வரலாறு புரியாமல் வஹி அருளப்பெற்ற சூழல் தெரியாமல் அறிவியலோ ஆன்மி கமோ பேசலாமா? மனித இயற்கைத்தன்மைக்கு எதிராக விண்ணிலிருந்து திடுமென்று திணிக்கப்பட்ட மார்க்கம் என்று இஸ்லாத்தைப்பற்றிய தவறான வியாக்கியானங்கள் இடம்பெறுவதற்கு இத்தகைய எழுத்தாளர்கள் பதில் கூறியாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக் கண்ணோட்டம் பாகம் 2இல் இடம்பெற்ற சகோதரி சித்தீகா, பாகம் - 3 இல் இடம்பெற்ற யூஸுப் மாஸ்டரின் கட்டுரை, றிஸ்கா ரிப்கானின் ஆக்கம் போன்றவை அவர்களுடைய கிணற்றுத் தவளையின் புத்தி கொண்ட குறுகிய ஆய்வுகளையே பிரதிபலிக்கின்றன.

அறிவியலும் அரசியலும் வரலாறும் இஸ்லாத்திலிருந்து அப்பாலானவை என்ற பிரம்மையை இவர்கள் போன்ற எழுத்தாளர்கள் இன்று உருவாக்கிக் கொண்டு வருகின்றனர். கருத்துக் கண்ணோட்டம் போன்ற ஒரு சஞ்சிகைக்கு ஆக்கம் எழுதுபவர்களுடைய கல்வி மற்றும் அறிவியல் ஆளுமைகளைக் கருத்திற்கொண்டே இவர்களுடைய ஆக்கங் களை பிரசுரிப்பதா இல்லையா என்ற முடிவுக்கு வரவேண்டும் என்று இத்தால் மிலேனியம் கல்வி ஸ்தாபன தலைமைத்துவத்திற்கும் உறுப்பினர் களுக்கும் அன்புக் கட்டளை விடுக்கின்றேன். அப்போதுதான் கருத்துக் கண்ணோட்டத்தின் தரம் வாசகர்களால் நிர்ணயிக்கப்படமுடியும்.

**நன்றி**

**சட்டத்தரணி S.M.N.மர்சூம் மௌலானா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீஆக்கள் வழிதவறியவர்களல்லர்

இன்று முஸ்லிம் உம்மத்தை மார்க்க விழுமியங்களிலிருந்து தூரமாக்கி அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்தியத்திற்கும், ஸியோனிஸ சக்திகளுக்கும் முஸ்லிம் உம்மத்தையும், வளங்களையும் அடகு வைத்துள்ள இப்னு சவூத் களின் தலைமையிலான வஹ்ஹாபிகளின் சூழ்ச்சி பற்றிய உங்கள் கருத்துக் கண்ணோட்டம் காலத்தின் தேவையாகும். பசுத் தோல் போத்திய வஹ்ஹாபிகள் முஸ்லிம் உம்மத்தின் ஈடேற்றத்திற்கோ; விடுதலைக்கோ உருப்படியாக சாதித்ததொன்றுமில்லை என்பதை தெட்டத் தெளிவாக உங்கள் விவாதங்களில் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் முயற்சி மேலும் வலுப்பெற்று விரிவடைய எல்லாம் வல்ல நாயனை பிரார்த்திக்கின்றேன்.

இன்று வஹ்ஹாபிகளின் ஊடுருவல் புற்று நோய் போல் முஸ்லிம் உம்மத்தின் அனைத்து மட்டங்களிலும், துறைகளிலும் பரவியுள்ளது. எந்தளவுக்கு இவர்கள் சக்தி வாய்ந்தவர்களென்றால் தினசரி பத்திரிகை களில் இவர்களது ஆக்கங்களை மறுதலித்து அனுப்பப்படும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுவதுமில்லை. ஈரான் இஸ்லாமிய புரட்சியை முதலாம் எதிரியாக ஸியோனிசம் கருதுவது போல் வஹ்ஹாபிகளும் இப்புரட்சியை எதிரியாகவே நோக்குகின்றனர். இப்புரட்சியை கொச்சைப்படுத்துமுகமாக ீஆக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகேடர்கள், வழி தவறியவர்கள், காபிர்கள்,......... என்றெல்லாம் நாளாந்தம் வசைபாடிக்கொண்டே இருக்கின்றார்கள். நம் நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கும் மாதாந்தப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் கூட ஆங்காங்கே ஆக்களை கொச்சைப்படுத்தப்படுகின்றன.

மீள்பார்வை இதழ் 7 (ஆகஸ்ட் 1996) யில் பிரசுரமாகியிருந்த ஆக்கள் பற்றிய தவறான பிரச்சாரத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட மறுதலிப்பு பிரசுரிக்கப்படவில்லை. இவ்வாறு எனது நண்பர்களினால் அனுப்பப்பட்ட மறுதலிப்பு ஆக்கங்கள் கூட பிரசுரிக்கப்படவுமில்லை.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையில் கூட வஹ்ஹாபிகளின் ஊடுருவலே செறிந்து காணப்படுகின்றது. இதற்கு சிறந்ததோர் உதாரணம் ஜுன் மாதம் 2005 இல் மடவளையில் நடைபெற்ற ஆலிம்களுக் கான தேசிய ஒன்று கூடலில் அகீதாவுக்கு முரணாக செயல்படுவோர் சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் கொள்ளலாம். இத்தீர்மானங்கள் 26-07-2005 இன் தினகரன் பத்திரிகையிலும், மீள்பார்வை இதழ் 108 (ஆகஸ்ட் 2005) யிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. பிரசுரிக்கப்பட்டிருந்த 5 தீர்மானங்களில் தீர்மானம் 1 பின்வருமாறு கூறுகின்றது.

"அஹ்மதியாக்கள் காபிர்கள், ஆ (இஸ்னா அஸரியா), அத்வைதம் போன்ற கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தை சார்ந்தவர்கள் அல்லர் எனவும், அவர்களுடன் திருமணங்கள், பொருளாதார நடவடிக்கைகள் உட்பட எவ்வித தொடர்புகளையும் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தார் வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் ஏகமன தாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தோடு கொள்கை ரீதியாக எவ்விதத்திலும் நேர்படாத மேற்குறித்த சாராரின் எந்தவொரு செயற்பாட்டையும், அச்சாராரின் ஸ்தாபனங்களையும் அங்கீகரிக்கலாகாது எனவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தைக் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

இத்தீர்மானம் சம்பந்தமாக எனது நண்பர்கள் இருவரினால் பதிவுத்தபாலில் அனுப்பப்பட்ட மறுதலிப்புக் கடிதங்கள் இவ்விரு பத்திரிகை களிலுமே பிரசுரிக்ககப்படவில்லை. இவ்விரு பத்திரிகைகளினது ஆசிரியர் களை தொலைபேசி மூலம் தொடர்புபட்டும் பயனளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீர்மானம் பற்றிய நன்மை, தீமைகளை பல கோணங்களில் ஆராயலாமென்றாலும் சாதாரண மனிதர்களுக்கு தெரிந்தவைகள் கூட நமது ஆலிம்களுக்கு தெரியவில்லையே என்பதை நினைக்கும் போது வருத்தமாகவுள்ளது.

1. பிரித்தானிய ஏகாதிபத்தியம் எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த போது அல்-அஸ்ஹர் பல்கலைக்கழக உலமாக்கள் "காக்கை இறைச்சி சாப்பிடுவது ஹறாமா, ஹலாலா" என்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருநதார்களாம். அதே போல அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்தியம் முஸ்லிம் உம்மத்துடன் - இஸ்லாத்துடன் போர் தொடுத்திருக்கும் இக்கால கட்டத்தில் "ஷீஆக்கள் காபிர்களா அல்லது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரா" என்பது பற்றி அ.இ.ஜ.உ. சபை ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.!!!

இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனத்தின் ஜமாஅத்தினரைச் சேர்ந்த முஸ்லிம்களை ஒவ்வொரு நாளுமே கொன்று குவித்துக் கொண்டிருக்கின் றார்கள். அதே போல லெபனானிலே ஷீஆ முஸ்லிம்களைக் கொல்கின்றனர். அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஆக்கிரமிப்பாளர்களினால் ஆப்கானிஸ்தானிலே, ஈராக்கிலே, பாகிஸ்தானிலே ஷீஆ, ஸுன்னி, வஹாபி என்ற பேதம் பாராமல் முஸ்லிம்களின் ரத்தம் ஒவ்வொரு நாளுமே சிந்தப் படுகின்றன. உடைமைகள் நிர்மூலமாக்கப்படுகின்றன. பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகின்றார்கள், விதவையாக்கப்படுகின்றார்கள். சிறுவர்கள் அநாதை யாக்கப்படுகின்றார்கள். சிறையில் கூட நிம்மதியில்லாமல் முஸ்லிம்கள் சொல்லொண்ணாத் துயரங்களுக்குள்ளாக்கப்படுகின்றார்கள். இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான நிகழ்வுகளை உணரும் சக்தியை அ.இ.ஜ.உ.சபை இழந்துவிட்டது போல் தோன்றுகின்றது.!!!

2. இன்று உலக முஸ்லிம்களின் மொத்த சனத்தொகையில் 25% க்கும் மேலானோர் ஷீஆக்களாகும். ஈரான், ஈராக், பஹ்ரைன், லெபனான், யெமன், அஸர்பஜான் போன்ற முஸ்லிம் நாடுகளில் சராசரி 75% க்கும் மேலானோர் ஷீஆக்களாகும். 100% முஸ்லிம்கள் வாழும் சவூதி அரேபியா வில் 20% க்கும் மேலானோர் ஷீஆக்களாகும். குவைத், ஐக்கிய அரபு ராச்சியம் (UAE), சிரியா, துருக்கி, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட சராசரி 30%க்கும் மேலாக ஷீஆக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள்.

கிறிஸ்தவர்கள், யூதர்கள், பௌத்தர்கள், இந்துக்கள்,............ ஆகி யோருடன் முஸ்லிம்கள் வியாபார சமூகத் தொடர்புகளை வைத்துக் கொள்ளலாம். யூத, கிறிஸ்தவ பெண்களைக் கூட முஸ்லிம்கள் திருமணம் செய்துகொள்ளலாம். ஆனால் எங்கள் சகோதர முஸ்லிம்களோடு அவ்வா றான ஒரு தொடர்பையும் வைத்துக் கொள்ளக்கூடாது. இந்நிலைப் பாட்டிற்கான ஆதாரங்களை அ.இ.ஜ.உ.சபை எங்கிருந்து பெற்றுக்கொண்டது என்பது பற்றி விளக்கவும் கடமைப்பட்டுள்ளது. ஈராக்கிலே பதிவாகியுள்ள 60 இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் திருமணங்களில் 15 இலட்சத்துக் கும் அதிகமான திருமணங்கள் ஷீஆக்களுக்கும் ஸுன்னத்ஜமாஅத்தினருக்கு மிடையில் நடைபெற்றுள்ளன என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

3. சர்வதேச இஸ்லாமிய மகாநாட்டு அமைப்பு என்று அழைக்கப் படுகின்ற அனைத்து முஸ்லிம் நாடுகளையும் ஒன்றினைத்து பிரதிநிதிப் படுத்தும் OIC (Organisation of Islamic Conference) யில் ஷீஆ முஸ்லிம் கள் அதிகமாக வாழும் மேலே கூறப்பட்ட நாடுகள் அங்கத்தவர்களாகும். OIC யின் தலைமைப்பதவியை ஈரான் 1997 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை வகித்தது. இந்நாட்டு மக்களை OIC முஸ்லிம்களாக கருதுகின்ற போது ஜ.உ.சபை ஒதுக்கிவைப்பதற்கான காரணங்களையும் கூறவேண்டிய பொறுப்பு அ.இ.ஜ.உ. சபைக்குள்ளது.

4. மேலே கூறப்பட்ட ஷீஆக்கள் செறிந்து வாழும் நாடுகளுடன் நம் நாட்டு அரசாங்கம் கல்வி, கலாச்சாரம், பாதுகாப்பு, வர்த்தகம், தொழி நுட்பம்........ என்று பல தொடர்புகளை வைத்துக் கொண்டுள்ளது. நம்நாட்டின் எரிபொருள் தேவையின் 70% ஐ ஈரான் பூர்த்தி செய்துகொண்டிருக்கின்றது. நாம் (ஜ.உ.சபை உறுப்பினர்கள் உட்பட) தற்போது உண்ணும் உணவு, பாவிக்கும் உற்பத்திப் பொருட்கள், ஓடும் வாகனங்கள் எல்லாமே அனேக மாக ஈரானின் எண்ணெய்யிலிருந்தே சாத்தியமாகின்றது. ஜ.உ.சபை தீர்மானத்திற்கமைவாக இத்தொடர்புகளை இந்நாட்டு முஸ்லிம்கள் எவ்வாறு துண்டித்துக் கொள்ளலாம் என்பது பற்றி ஜ.உ.சபையே விளக்கவும் கடமைப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இன்று நம்நாட்டில் "போறா முஸ்லிம் சமூகம்" என்றழைக்கப்படும் ஆ முஸ்லிம்கள் (அக்பர் சகோதரர்கள், மூஸாஜீ, ஜாபர்ஜீ உட்பட) பலர் பலவகையான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இக்கம்பனிகளில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் (முஸ்லிம்கள், ஆலிம்கள் உட்பட) தொழில் புரிகின்றார்கள். ஜ.உ.சபையின் தீர்மானப்படி இவ்வூழியர்கள் அனைவரும் விலகிக் கொள்ள வேண்டும். இது சாத்தியமா?

6. அஹ்மதியாக்கள் காபிர்கள் என்றும், சில வருடங்களுக்கு முன் ஜ.உ.சபையினால் "முர்தத்" என்று பத்வாக் கொடுக்கப்பட்ட அத்வைதிகள் தற்போது ஸு.ஜமாஅத்தார் அல்லர் என்றும் தீர்மானிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு பதவி உயர்வும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அஹ்மதியாக்கள் போல் ஒரே சம காலத்தில் அறிமுக மான வஹ்ஹாபிகள் பற்றி ஒரு தீர்மானமும் எடுக்கப்படாமை அ.இ.ஜ.உ.சபை மீது சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

ஸுன்னத் ஜமாஅத்தினருக்கான முக்கிய கொள்கைகளில் 4 மத்அப் (ஹனபி, மாலிகி, 'ாபி, ஹன்பலி) களில் ஒன்றைப் பின்பற்றுவதும் ஒன்றாகும். ஆனால் வஹ்ஹாபிகள் மத்அப்களை நிராகரிக்கின்றனர். அகிலத் துக்கே அருட்கொடையாக வந்துதித்த முஹம்மது (ஸல்) அவர்களை ஒரு சாதாரண மனிதனின் அளவுக்கு தரமிறக்கி சிறுமைப்படுத்துகின்றனர். ரஸுல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுமாறு அல்லாஹ் கட்டளையிடு கின்றான். ஆனால் வஹ்ஹாபிகள் கூறத்தேவையில்லை என்கின்றனர். மரித்தவர் கள் மண்ணோடு மண்ணாகிவிடுகின்றார்கள், அவர்களுக்காக நாம் வழங்கும் தானதர்மம், சங்கைப்படுத்துதல், ஞாபகப்படுத்துதல் ........... போன்ற கிரிகை களில் ஒரு பிரயோசனமுமில்லை என்கின்றனர் வஹ்ஹாபிகள்.

சுவனத்து வாலிபர்களின் தலைவர் இமாம் ஹுஸைனும், 72 தோழர்களும் கர்பலாக்களத்திலே சண்டாளன் யசீதினால் கொலையுண்ட சம்பவத்தை கொச்சைப்படுத்துகின்றனர் வஹ்ஹாபிகள். தொழுகையில் அஹ்லுல்பைத்கள் மீது ஸலவாத் சொல்லவில்லையென்றால் அத் தொழுகையே "பாதில்" ஆகிவிடும் என்று இமாம் ஸாபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். இம்மகா கண்ணியத்துக்குரிய அஹ்லுல்பைத்களில் ஒருவரான இமாம் ஹுஸைனை யசீதுக்கு சமப்படுத்துகின்றார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹ்ஹாபிகள். ஹுசைனுக்காக கண்ணீர் விட்டு கதறி அழ வேண்டிய முஹர்ரம் மாதத்தில் புதுவருட விழா கொண்டாடுகின்றார்கள். கிறிஸ்த வர்கள், இந்துக்கள், பௌத்தர்கள்............ புதுவருட விழாக்கள் கொண்டாடும் போது ஏன் முஸ்லிம்கள் கொண்டாடக்கூடாது என்கின்றனர் வஹ்ஹாபிகள். ஆனால் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மீலாதுன்நபி விழாவிற்கெதிராக போர் தொடுக்கின்றார்கள் வஹ்ஹாபிகள்.

தொழுகையில் கூட சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். தக்பீர் கட்டும் போது சிலர் ஒன்றுக்கு மேல் ஒன்றுவைத்த உள்ளங்கைகளை நெஞ்சில் அமர்த்திக்கொள்கின்றார்கள். சிலர் உள்ளங்கை ஒன்றை கமுக் கட்டில் செருகிக் கொள்கின்றனர். அத்தஹிய்யாத் இருக்கையில் நாய் தன் எஜமானனைக் கண்டு வாலை ஆட்டுவது போல் சுட்டு விரலை ஆட்டுகின்றார்கள்.

இரவாகும் வரை நோன்பிருக்குமாறு அல்லாஹ் கட்டளையிடுகின் றான். ஆனால் வளிமண்டல ஆராய்ச்சி நிலையம் வழங்கியுள்ள சூரிய அஸ்தமன நேரத்தில் நோன்பை முடித்துக் கொள்ளும்படி வேண்டுகின்றார் கள் வஹ்ஹாபிகள்.

பெண்களின் உரிமைகளை மறுக்கின்றார்கள். கல்வி, சமூக நடவடிக்கைகளில் பங்கேற்றல், உத்தியோகம் பார்த்தல்.......... போன்ற நடவடிக்கைகளுக்கு வஹ்ஹாபிகள் பெண்களுக்கு அனுமதி வழங்குவ தில்லை. பெண்கள் "பிள்ளைகள் பெறும் இயந்திரம்" என்றே கருதுகின்றார் கள். ஆப்கானிஸ்தானில் நடந்தேறிய தலிபான்களின் ஆட்சி இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இவ்வாறான கொள்கைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களை கொலையும் செய்கின்றார்கள் வஹ்ஹாபிகள். காத்தான்குடியில் நடந்தேறிய கொலைகள், சம்பவங்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். பள்ளிவாயல் களிலும், மதக்கிரிகைகளிலும், ஒன்று கூடல்களிலும் வெடிகுண்டு வைத்து கொலைசெய்கின்றார்கள். இவ்வாறான கொலைகள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் சாதாரணமாகவே நடாத்து கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வஹ்ஹாபிகள், அவர்களின் கொள்கைகளுக்கெதிரான எந்தத் தீர்ப்பையும் ஆதாரங்களையும் ஏற்பதில்லை. ஒரே வெட்டில் அவைகள் லயீப் (பொய்) யானவைகள் என்பார்கள். கர்வம், இறுமாப்பு, பணிவின்மை........ என்று பல கெட்ட குணங்கள் உடையவர்களாக வஹ்ஹாபி கள் உள்ளார்கள். "வஹ்ஹாபிகளை விட சிறந்த அறிஞர்கள் எவருமில்லை" என்ற மனோநிலை வஹ்ஹாபிகளிடம் செறிந்து காணப்படுகின்றது.

இவ்வாறாக வஹ்ஹாபிகள் ஸு.ஜமாஅத்தினரின் கொள்கைகளில், அகீதாவில் பரவலாக வேறுபடுகின்றார்கள். இவர்கள் பற்றி ஜ.உ.சபையின் தீர்மானம் என்ன?

19ம் நூற்றாண்டிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் முஸ்லிம் சாம்ராஜ்யத்தை வீழ்த்த இங்கிலாந்தின் தலைமையிலான ஐரோப்பாவும், மேற்குலகமும் முஸ்லிம்கள் மத்தியில் பல வகையான சிந்தனைப்பிரிவுகளை அவர்களின் ஏஜெண்டுகள் மூலமாக தோற்றுவித்தனர். அரேபிய உலகில் அன்று வழிப்பறிக் கொள்ளையர்களாக இருந்த இப்னு சவூத் களின் தலைமையில் வஹ்ஹாபிசத்தையும், அரபு தேசியவாதத்தையும், பாரசீகத்தில் பஹாயிசத்தையும், துணைக்கண்டங்கள், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காதியானிசத்தையும், இந்தோனேசியாவில் பஞ்சாசீலத்தையும், துருக்கியில் கமால் அத்தாதுர்க்கின் தலைமையில் துருக்கிய தேசிய வாதத்தையும் அறிமுகம் செய்து முஸ்லிம் உம்மத்தைக் குழப்பி, பலம் குன்றச் செய்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை சின்னாபின்னமாக்கி தமக்கு ஒத்துழைத்த ஏஜெண்டுகளினூடாக தன்வசப்படுத்திக் கொண்டார்கள். இப்போது அதே ஏஜெண்டுகளின் வாரிசுகள் எஜமான்களின் கட்டளைக்கு முழுமையாக அடிபணிந்து அநேகமான முஸ்லிம் நாடுகளை ஆட்சிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகவே "வஹ்ஹாபிசம்" ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் ஒரு அங்கம் என்பதில் சந்தேகமில்லை. யூதர்களுக்கு ஸியோனிசம் எப்படியோ அது போல் முஸ்லிம்களுக்கு வஹ்ஹாபிசம் என்றால் கூட மிகையாகாது. இக் கொள்கை சவூதி அரேபியாவின் நஜ்த் பிரதேசத்தின் தயாரிப்பென்றாலும், அதற்கு உரமூட்டியவர்கள் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாகக் கூறினால் : வஹ்ஹாபிசமும், ஸியோனிசமும் ஒரு காசிக்குத்தியின் இரு முகங்களாகும். யூத இனம் மனித சமூகத்தை ஆழ்வதற்கு இறைவனால் படைக்கப்பட்ட இனம் என்று ஸியோனிசம் கூறுகின்றது. மாறாக அகிலத்துக்கே அருட்கொடையாக வந்துதித்த முஹம்மது (ஸல்) அவர்களையும், அவர்களது தூய குடும்பத்தினரை யும் சாதாரண மனிதனின் அளவுக்கு தரமிறக்கி கொச்சைப்படுத்து கின்றது வஹ்ஹாபிசம்.

ரஸூல் (ஸல்) அவர்களையும், அவரது அஹ்லுல் பைத் எனும் தூய குடும்பத்தினரையும் சிறுமைப்படுத்துவது இஸ்லாத்தை சிறுமைப்படுத்துவதாகும். இஸ்லாத்தை சிறுமைப்படுத்துவது முஸ் லிம் உம்மத்தை சிறுமைப்படுத்துவதாகும். ஆகவே முஸ்லிம்களை ஸியோனிசம் ஆட்கொள்வதற்கு வஹ்ஹாபிசம் துணைபுரிகின்றது. அதனாலேயே இவ்விரண்டினதும் தலைமைக் காரியாலயங்கள் இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் தலைமையகத்திலே (கஹ்பா, அல்-அக்ஸா) சதிகாரர்களினால் அமைக்கப்பட்டுள்ளது.

வல்லரசுகளின் ஆதரவு பெற்ற "ஸியோனிசம்" யூதர்களின் மத்தியில் பரவலாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் யூதர்கள் சிலரே. அதே போல "வஹ்ஹாபிசம்" ஸுன்னத்வல் ஜமாஅத்தார் மீது பரவலாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இக்கொள்கையை ஏற்றுக்கொள்பவர்கள் கை விரலிட்டு எண்ணக்கூடிய சிலரே. சவூதி அரசாங்கத்திடமிருந்து மாதாந்த சம்பளம் பெறும் பல உலமாக்கள் கூட பூரணமாக இக்கொள்கையை ஏற்றுக்கொள்வதில்லை என்பது பரகசியமாகும். சம்பளம், உதவிகள் நிறுத்தப்படுமென்ற அச்சத்தினால் போலி ரிப்போட்டுக்களை தயாரித்து அனுப்பிவிட்டு ஒதுங்கியிருப்பவர்கள் பலரை கண்டிருக்கின்றேன். இவ்வுல மாக்களைப் பார்த்து "நீங்களும் ஒரு வஹ்ஹாபி" என்று கூறினால் அதை மறுத்துரைப்பார்கள்.

ஸியோனிச இஸ்ரேல் மத்திய கிழக்கில் வலுப்பெற்றிருப்பதற்கான காரணம் வல்லரசுகளின் பல்வகை துறை உதவியும், பண உதவியுமாகும். முதலாம், இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் 60 இலட்சத்துக்கும் அதிகமான யூதர்களை ஐரோப்பியர்கள் கொலைசெய்தார்கள் (Holo-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

caust) என்ற மாயையை உருவாக்கி ஐரோப்பிய நாடுகளிடமிருந்து நஷ்டஈடு பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள் இஸ்ரேலயர்கள். அமெரிக்கா மூலமாக மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளும் இஸ்ரேலுக்கு மறைமுகமாக உதவி செய்வதும் பரகசியமாகும்.

இதே போல அகீதாவுக்கு முரணான வஹாபிசம் வலுப் பெற்றிருப்பதற்கான காரணம் மத்திய கிழக்கின் பொக்கிஷமான கறுப்புத் தங்கம் - எண்ணை வளமாகும். எண்ணை வளத்தைக் கொண்டு இஸ்லாத் துக்கு முரணான டாம்பீக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மத்திய கிழக்கு வஹாபிகள் ஏனைய முஸ்லிம்களையும் தன்வசம் வைத்திருக்க அதே வளத்தையே பயன்படுத்துகின்றனர். பணத்துக்கும், பதவிக்கும் இலேசாக அடிபணியும் மனித இயல்பு வஹாபிகளின் வலையில் சிக்கிக்கொள்கின்றது.

நம்நாட்டிலுள்ள அநேகமான இஸ்லாமிய கல்வி நிறுவனங்கள், அமைப்புக்கள் வஹாபிகளின் தலைமையகங்களின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. பாடத்திட்டங்கள், வாசிகசாலைகள், பணஉதவிகள், விரிவுரை களுக்கான வேதனங்கள், செயல் திட்டங்களுக்கான உதவிகள்......... என்று பல உதவிகள் வஹாபிக்கோட்டைகளிலிருந்தே கிடைத்துக்கொண்டி ருக்கின்றன. அதனாலேயே சுதந்திரமாக சிந்திப்பதற்கும், செயல்படுத்துவதற் கும் எம்மைச் சுற்றியுள்ள இஸ்லாமியக் கல்விமான்கள், ஆலிம்கள் தயங்குகின்றார்கள். இவ்வறிஞர்களுக்கு நிச்சயமாக உண்மை புரியும். ஆனால் மேலிடம் தங்களைக் கண்காணித்துக் கொண்ருப்பதால் சுதந்திரமாக இயங்க முடிவதில்லை. தப்பித்தவறி வரம்புகளை மீறி செயல் பட்டால் தனிமைப்படுத்தப்படுதல், பொருளாதார நஷ்டங்கள், பயமுறுத்தல்கள் ஏற்படுவதால் "ஏன் வீண் வம்பு" என்று ஒதுங்கியிருப்பவர்களே எம்மில் பலர் உள்ளனர். ஆகவே வஹாபிசத்தை மனதார ஏற்றுக் கொள்பவர்கள் அல்லர் இவர்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான நிலைமைகளே இன்று முஸ்லிம் நாடுகள் எங்கும் காணக்கூடியதாகவுள்ளது.

இக்கருத்தை வலுவூட்டுமுகமாக சில உதாரணங்களைக் கூற விரும்புகின்றேன்.

சல்மான் ருஸ்தி ரஸுல் (ஸல்) அவர்களையும் அவர்களது மனைவிமாரையும் கொச்சைப்படுத்தி வசைபாடி எழுதிய (Satanic verses)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்துக்கு எதிராக சவூதியின் மாபுதீன்கள் (Overseas instructors) தலைமையில் பிரச்சாரம் செய்யப்பட்டன. நம் நாட்டிலும் சில முக்கிய இஸ்லாமிய இயக்கங்கள் கூட பல எதிர்ப்பு கட்டுரைகளை நாளாந்தம் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். இவ்வாறிக்கையில் இமாம் கொமைனி (ரஹ்) அவர்கள் சல்மான் ருஸ்தி கொலை செய்யப்படல் வேண்டும் என்று கட்டளை பிறப்பித்ததும் இவர்கள் எல்லோரும் சல்மான் ருஸ்திக்கு சார்பாக மாறிவிட்டார்கள்.

அடுத்தது ஈரான் - ஈராக் யுத்தத்தைக் குறிப்பிடலாம். ஈரான் இஸ்லாமியப் புரட்சிக்கு (1979 க்கு) முதல் ஈராக்குடன் நெருக்கமான உறவை அமெரிக்காவோ, சவூதி அரேபியாவோ கொண்டிருக்கவில்லை. "பாத் சோசலிச" இடது சாரி கொள்கையை ஈராக் பின்பற்றியதே இதற்கான முதற் காரணமாகும்.

ஈரான் இஸ்லாமியப் புரட்சியை முளையுடன் கிள்ளி வீசிவிட ஈராக் முன்வந்த போது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும், சவூதி அரேபியா தலைமையிலான மத்திய கிழக்கு நாடுகளும் சத்தாமுடன் உற்ற நண்பர்களாகிக் கொண்டார்கள். அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் (ரஷ்யா உட்பட) ஆயுதங்களை வாரி வழங்கியது. இரசாயன ஆயுதங்கள், கனரக ஆயுதங்கள், ஏவுகணைகள், யுத்த தாங்கிகள், விமானங்கள்,........... என்று பல்வகையான ஆயுதங்களை சத்தாமுக்கு வாரி வழங்கினார்கள். இதற்கான கொடுப்பனவுகளை சவூதி அரேபியாவின் தலைமையிலான வளைகுடா ஒத்துழைப்புச்சபை (Gulf Corporation Council) ஏற்றுக்கொண்டது. வளைகுடா ஒத்துழைப்புச்சபை சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், ஓமான் ஆகிய நாடுகளைக் கொண்டதாகும். இந்தச்சபை 1981ம் ஆண்டு ஈரானுக்கு எதிராக ஈராக்கிற்கு யுத்த உதவிகள் செய்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வழங்கப்பட்ட ஏவுகணைளை சத்தாம் ஈரானின் நகரங்கள் மீதும், ஜும்மாத் தொழுகைக்காக ஒன்றுகூடிய மக்கள் மீதும் செலுத்தி பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்டான். இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் மூலமாக தன் சொந்த நாட்டு மக்களையும், ஈரானின் போராளிக ளையும் அழித்தான். சத்தாமைக் கண்டித்த ஈராக் நாட்டு உலமாக்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களையும் கழுமரமேற்றினான். இவ்வாறு சத்தாமால் கழுமரமேற்றப் பட்ட உலமாக்களுள் இஸ்லாமிய பொருளாதாரம்-வங்கிமுறை நிபுணர் அயாதுல்லாஹ் பாகிர் அஸ்-ஸத்ர் அவர்களும், அவர்களது சகோதரியும் அடங்குகிறார்கள். ஈற்றில் "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற நிலைமைக்கு ஈரான் போராளிகளினால் சத்தாம் ஆக்கப்பட்டான். ஐ.நா.சபை யின் ஊடுருவலினால் 8 வருடப் போர் 1988ம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இப்போது சத்தாம் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத் தினதும் சவூதி அரேபியா தலைமையிலான வஹ்ஹாபிகளினதும் செல்லக் குழந்தைகளாக மாறிவிட்டான்.

இவ்வாறிருக்கையில், சத்தாம் 1990ம் ஆண்டு குவைத்தின் மீது படையெடுத்தான். அப்போது மேலே கூறப்பட்ட அனைத்து நாடுகளும் சத்தாமுக்கு எதிரியானார்கள். அமெரிக்கா தலைமையிலான 6 இலட்சத்துக் கும் அதிகமான கூட்டுப்படை சத்தாமின் படையை குவைத்திலிருந்து வெளியேற்றுமுகமாக ஈராக்குடன் 1991ம் ஆண்டு ஜனவரி 17ம் திகதி காலை 5.30 மணியளவில் போரை ஆரம்பித்தது. ஈராக்கின் முக்கிய நகரங்கள் அனைத்துமே விமானக் குண்டுவீச்சினால் அழிக்கப்பட்டன. இரண்டு வாரமே நீடித்த இப்போரில் 4 இலட்சம் தொன்னுக்கும் அதிகமான நவீன குண்டுகள் ஈராக் நகரங்கள் மீது வீசப்பட்டிருந்தன. 1 1/2 இலட்சத்துக் கும் அதிகமான ஈராக் படையினர் கொல்லப்பட்டனர். 1 3/4 இலட்சததிற்கும் அதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டனர். 4500க்கும் அதிகமான யுத்த தாங்கிகள் அழிக்கப்பட்டன. 5 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மாண்டு மடிந்தனர். கூட்டுப்படையின் யுத்த செலவில் 75% க்கும் மேலானவற்றை சவூதி அரேபியா, குவைத் வஹ்ஹாபிகளே ஏற்றுக்கொண்டனர்.

இன்று ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டு சத்தாம் சிறைப்பிடிக்கப்பட்டார். இதே வஹ்ஹாபி கும்பல்கள் சத்தாமுக்காக கண்ணீர் வடிக்க ஆரம்பித்தனர். இன்றுள்ள ஈராக் அரசாங்கத்தினால் சத்தாம் தூக்கிலிடப்பட்டதை கண்டித்தது மட்டுமல்லாமல் சத்தாம் அரபிகளின் தியாகி என்றும் பட்டம் சூட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாகக் கூறினால் :-

* சத்தாம் ஈரான் ஈராக் போருக்கு முதல் = பாத் சோசலிச வாதி, இடதுசாரி - உறவுக்குப் பொருத்தமில்லாதவன்

* சத்தாம் ஈரானுடன் போர் செய்து கொண்டிருந்த போது = உற்ற நண்பன்

* சத்தாம் குவைத்தை ஆக்கிரமித்த போது = துரோகி, எதிரி

* சத்தாம் சிறைபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்ட போது = அரபிகளின் தியாகி

வஹ்ஹாபிகளின் சுயரூபத்தையும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தாரின் சுயரூபங்களையும் அளவிட இவ்விரு உதாரணங்களுமே போதுமானதாகும்.

சத்தாம் விசாரிக்கப்பட்ட முறை, நீதி மன்றம் பற்றி இங்கு குறிப்பிட வரவில்லை. சத்தாம் நியாயமான முறையில் விசாரிக்கப்பட்டிருந்தால் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தையும், சவூதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகளையும் நிச்சயம் சத்தாம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருப்பான். ஏனெனில், ஏற்கனவே கூறியதுபோல் ஈராக் ஈரானுடன் போர் தொடுத்திருந்த வேளையில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மன் போன்ற நாடுகள் இரசாயன - உயிரியல் ஆயுதங்கள் அடங்கலாக கனரக ஆயுதங்களை சத்தாமுக்கு வாரி வழங்கின. பிரித்தானியா நச்சு வாயு தயாரிக்கும் தொழிற்சாலையையும் நிர்மானித்துக் கொடுத்தது. பிரான்ஸ் அதிவேக யுத்த விமானங்ளையும், ர்'யா ஏவுகனைகளையும், யுத்த தாங்கிகளையும் கொடுத்தன. இவைகளுக்கான கொடுப்பனவுகளை கனடாவும், சவூதி அரேபியா தலைமையிலான அரபு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இவ்வாயுதங்களைக் கொண்டே சத்தாம் தனது சொந்த நாட்டு மக்களையும், ஈரான் நாட்டு போராளிகளையும், பொது மக்களையும் ஈவிரக்கமின்றி அழித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைக்குப்பின் நடந்தேறிய இம்மோசமான இரகசிய நடவடிக்கை களையெல்லாம் தற்போது சத்தாம் அவனது மண்ணறைக்கு அவனுடனேயே எடுத்துச் சென்றது மட்டுமல்லாமல் தனது கொடிய நண்பர்களையும் காப் பாற்றியுள்ளான். சத்தாமுடனேயே தூக்கிலிடப்படவேண்டிய இக்கொடியோர் கள் பெரும் சாதனை படைத்தவர்கள் போல் இன்று பிதட்டிக் கொண்டிருக் கின்றார்கள்.

நிலைமை இவ்வாறிருக்கையில் பிர்அவ்ன், நம்ரூத், முசோலினி, ஹிட்லர், புஸ், ஸாரோன்,............ போன்ற கொடியோர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய சத்தாமை சலாஹுத்தீன் ஐயூபி (ரஹ்) அவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டது மட்டுமல்லாமல் அரபிகளின் தியாகி என்று வஹாபிகளினால் கௌரவிக்கப்பட்டுள்ளமை வேடிக்கையாகவே உள்ளது!!!!

1979ம் ஆண்டு இப்னு சவூத் குடும்பத்தின் ஆட்சிக்கு எதிராக விழித்தெழுந்த சில இளைஞர்கள் "கஹ்பதுல்லாவுக்குள்" அபயம் தேடி புகுந்த போது "ஹெலிகொப்டர்களினால்" குண்டுவீசி இவ்விளைஞர்கள் கொலைசெய்யப்பட்டார்கள். இக்குண்டு வீச்சால் கஹ்பதுல்லாவும் சேதமாகியது.

பலஸ்தீனத்தை அபகரித்து அந்நாட்டு மக்களை ஒவ்வொருநாளுமே கொடுமைப்படுத்தும் இஸ்ரேலர்களுக்கு எதிராக 1987ம் ஆண்டு ஆர்ப்பாட்டம் செய்த ஈரானிய ஹாஜிகளின் 420 பேரை ஹறம் சரீபிலே சுட்டுக் கொன்றார்கள் வஹாபிகள்.

நிக்கரகூவா அரசாங்கத்தை கவிழ்க்க போராடிக் கொண்டிருந்த அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பயங்கரவாதிகளுக்கு 1984ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்ய அமெரிக்கா காங்கிரஸ் சபை மறுத்துவிட்டது. அப்போது அமெரிக்க ஜனாதிபதி சவூதி மன்னன் பஹ்தை நாடினான். பஹ்த் 23 மில்லியன் டொலர்களை கொடுத்துதவினார்.

இஸ்ரேலர்களை முதன்முதலாக தோற்கடித்த லெபனான் ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தின் ஆத்மீக தலைவர் ஷேக் பத்லுல்லாவை கொலை செய்ய அமெரிக்க உளவு ஸ்தாபனமான - CIA திட்டமிட்டது. இத்திட்டத்தை அமுல்படுத்த சவூதி மன்னன் பஹ்த்திடமே ஒப்படைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. சில மாத இரகசிய ஏற்பாட்டின் பின் 8-3-1985 ஆம் நாள் வெடி மருந்துகள் நிரப்பிய கார் ஷேக் பத்லுல்லாவின் வீட்டை நோக்கி செலுத்தப் பட்டது. கார் வெடித்தது. 80 க்கும் அதிகமான பொதுமக்கள் கொலையுண்ட னர். 200 க்கும் அதிகமானோர் காயமுற்றனர். பல வீடுகளும், கட்டடங்களும் சுக்குநூறாகியது.

CIA இன் அக்கால இயக்குனர் வில்லியம் கேசியின் வேண்டு கோளுக்கிணங்க மன்னன் பஹ்த் சாத் நாட்டில் லிபியத் தலைவர் கடாபி யின் ராணுவ நடவடிக்கைகளுக்கெதிராக இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பஹ்த் இத்திட்டத்திற்கு 8 மில்லியன் டொலர்களை செலவு செய்தார்.

இன்று, மத்திய கிழக்கில் வஹ்ஹாபிகளின் கோட்டைகளை பாதுகாக் கும் முகமாக அமெரிக்கா 4 இலட்சத்திற்கும் அதிகமான படையினரை நவீன கனரக ஆயுதங்கள், போர்க்கப்பல்கள், போர் விமானங்கள்,............ சகிதம் நிலைநிறுத்தியுள்ளது. சவூதி அரேபியாவில் மட்டும் 2 இலட்சத்திற்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். கட்டார், ஓமான், குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், பெஹ்ரைன் போன்ற நாடுகளிலுள்ள களஞ்சிய சாலைகளில் அமெரிக்க ஆயுதங்கள் குவிந்த வண்ணம் உள்ளன. பாரசீக வளைகுடாவில் யுத்தவிமானங்கள் தாங்கிய யுத்தக் கப்பல்கள் நாளாந்தம் உலாவிய வண்ணமுள்ளன. ஈரானை ஒரு பதம் பார்த்து இஸ்ரேலை பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடு என்று அரசியல் அவதானிகள் இதைக் கருதுகின்றார்கள். இஸ்ரேல் பாதுகாக்கப்பட்டால் வஹ்ஹாபிகள் சுயமாகவே பாதுகாக்கப்படுவார்கள் என்பதும் இதன் மர்மமாகும்.

இவ்வாறு அமெரிக்காவினதும், இஸ்ரேலர்களினதும் சேவகர்களா கவே வஹ்ஹாபிய தலைமையகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இஸ்லாத்துக்கும், முஸ்லிம் உம்மத்தின் நலனுக்கும் முரணான இவ்வாறான செயல்களை மூடி மறைக்க ஸஹாபிகளில் சிலரை முன் வைக்கின்றார்கள் வஹ்ஹாபிகள்.

முஆவியா, அம்ர் இப்னு ஆஸ், யசீத், மர்வான்..... என்று தொடர்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். ஆனால் இவ்வாறான மிகப்பலவீனமான சஹாபாக்கள் பற்றிய ரஸூல் (ஸல்) அவர்களின் எச்சரிக்கைகள், இறைகட்டளைகள் வஹாபிகளின் கண்களில் தென்படுவதுமில்லை. காதுகளில் கேட்பதுமில்லை.

நேர்வழி நின்ற கலீபா இமாம் அலி அவர்களின் கிலாபத்துக் கெதிராக ஜமல் யுத்தமும், முஆவியாவின் தலைமையில் சிப்பின் யுத்தமும் நடைபெற்றன. இவ்யுத்தங்களைத் தொடர்ந்து பல்லாயிரம் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். பல கோடி பெறுமதியான சொத்துக்களும், கிராமங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இமாம் அலி கொலைசெய்யப்பட்டார். இமாம் ஹசன் முஆவியாவினால் நஞ்சூட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இமாம் ஹுசைன் கர்பலாக்களத்திலே தனது தோழர்கள், குடும்பத்தினர் 72 பேருடன் சண்டாளன் யசீதினால் கொலைசெய்யப்பட்டார்கள்.

முஸ்லிம் உம்மத்தின் மத்தியில் நிலவிக்கொண்டிருக்கும் பிளவுகளுக்கு அடித்தளமிட்டார்கள் இக்கொடியோர்கள். குடியாட்சி முடியாட்சியாக மாற்றப்பட்ட சிறுமை முஆவியாவையே சாருமென்று மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

"அம்மார் பின் யாசிர் அநியாயக்காரர்களினால் கொலை செய்யப்படுவார்" என்று சஹாபாக்களை ரஸூல் (ஸல்) அவர்கள் எச்சரித்திருந்தார். சிப்பின் யுத்தத்தில் முஆவியாவின் படையினரால் ஹஸ்ரத் அம்மார் பின் யாசிர் அவர்கள் கொலைசெய்யப்பட்டார்கள்.

முஸ்லிம்களின் நலன்களை தலைகீழாக்கிய இக்கொடிய நிகழ்வுகளெல்லாம் இறைவனின் கட்டளைகளையும், ரஸூல் (ஸல்) அவர்களின் எச்சரிக்கைகளையும் மீறியே அரங்கேறின.

நிலைமை இவ்வாறிருக்க, முழுச் சுயநலத்துக்காக போர் தொடுத்த இக்கொடியோர்களை "சஹாபாக்கள்" என்ற முத்திரைக்குள் மறைத்து, வஹாபிகளின் அட்டூழியங்களையும், அநியாயங்களையும் இப்பலயீனமான சஹாபாக்களுக்குள் மறைக்க முற்படுவது பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றதாகும். இக்கொடியோர்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் தூய குடும்பத்திற்கும், முஸ்லிம் உம்மத்திற்கும் இஸ்லாத்தின் பேரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவித்த, விளைவித்துக்கொண்டிருக்கின்ற அநியாயங்களுக்காக இறைவனால் விசாரிக்கப்படமாட்டார்களா?? தண்டிக்கப்படமாட்டார்களா????

நன்மையை ஏவி தீமையை தடுப்பதற்கும், முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த திரிபுகளையும் மாற்றங்களையும் நெறிப்படுத்த முயன்ற போதே ரஸூல் (ஸல்) அவர்களின் அஹ்லுல் பைத் எனும் தூய குடும்பத்தினர் - சொர்க்கத்தின் கதாநாயகர்கள் சதிகாரர்களினால் சுயநலமிகளினால் அநியாயக்காரர்களினால் கொடியோர்களினால் சண்டாளர்களினால்........ அவமானப்படுத்தப்பட்டார்கள் துன்புறுத்தப்பட்டார்கள் கொலைசெய்யப்பட்டார்கள்.

இறைவனால் தூய்மையாக்கப்பட்ட இத்தூயவர்களை இடைச்செருகலின்றி தூய வடிவில் நம்பி பின்பற்றுபவர்களே ஷீஆக்களாகும். இந்த நம்பிக்கை ஷீஆக்களுக்கு மட்டும் உரியதல்ல. ஸுன்னத்வல் ஜமாஅத்தார் மீதும் கடமையாகும்.

* நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். ஒன்று அல்லாஹ்வின் வேதம் அடுத்தது எனது அஹ்லுல் பைத் (தூய குடும்பம்).
* இவ்விரண்டையும் நீங்கள் கைகொள்ளும் வரை என்றுமே வழிதவற மாட்டீர்கள்.
* நிச்சயமாக ஹவ்லுல் கௌஸரில் என்னிடம் வரும் வரை அவை இரண்டும் ஒன்றை ஒன்று பிரியமாட்டா. (அண்ணல் நபி (ஸல்) -திர்மிதி அத் 2 பக் 308, முஸ்லிம் அத் 7 பக் 127, முஸ்னத் அஹ்மத் அத் 4 பக் 366)

இந்த ஹதீதை 33 க்கும் மேற்பட்ட சிறந்த அறிவிப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறாக ரஸூல் (ஸல்) அவர்களின் தூய குடும்பத்தை முதன்மைப்படுத்தும் இறை கட்டளைகள், நபி (ஸல்) அவர்களின் ஆணைகள் அல்குர்ஆனிலும், நமது மூலாதாரங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன.

ஆகவே, ஷீஆக்களை வசைபாடுவது எங்களையும் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதாரங்களையும் வசைபாடுவதற்கு சமமானதாகும். ஆகவே ஷீஆக்கள் அதிசிறந்த சுன்னத்வல் ஜமாஅத்தினர்களாகும்.

வஹ்ஹாபிகள் இம்மூல மந்திரங்களை தெரிந்திருந்தும் தனது சுயநலன்களுக்காக வேண்டுமென்றே ஷீஆக்களை வசைபாடுகின்றார்கள். முஸ்லிம்களின் சிந்தனையை திசைதிருப்பி அநியாயக்கார வஹ்ஹாபிகளும், ஸியோனிஸ்டுகளும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் முஸ் லிம்களின் வளங்களை ஆக்கிரமித்து முஸ்லிம்களை விலாசமற்றவர்களாக அடக்கி, ஒடுக்கி வைத்திருப்பதற்கான யுக்தியே ஷீஆக்களுக்கு எதிரான பிரச்சாரமாகும்.

ஆகவேதான் சுன்னத்வல் ஜமாஅத்தைச் சேர்ந்த நவீன உலக சிந்தனையாளர்களான கலாநிதி கலீம் சித்தீக்கி (ரஹ்), இமாம் முஹம்மது அல்-ஆசி போன்றோர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

“முஸ்லிம் உம்மத் கண்ணியம், மரியாதையுடையவர்களாக வாழவேண்டுமென்றால் மூன்று புனித பூமிகளையும் மீட்டெடுத்தாலே அது சாத்தியமாகும். ஒரு பூமி (மஸ்ஜித் அல்-அக்ஸா) ஸியோனிச யூதர்களின் ஆக்கரமிப்பிலுள்ளது. மற்றைய இரண்டும் (கஹ்பா, மஸ்ஜித் அன்-நபவி) வஹ்ஹாபிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளது”.

இவைகள் மீட்டெடுக்கப்படுமானால் கதிரவனைக் கண்டு காலைப் பனி மறைந்துவிடுவது போல் வஹ்ஹாபிகள் மறைந்துவிடுவார்கள். முஸ்லிம் உம்மத் கண்ணியத்துக்குரியவர்களாக மாறுவார்கள்.

இதற்கான முயற்சியில் ஈடுபட ஷீஆக்களை, லெபனான் ஹிஸ்புல் லாக்களை, பாலஸ்தீனின் ஹமாஸ் முஜாஹிதீன்களை வசைபாடுபவர்கள், கண்டிப்பவர்கள், குறைகாண்பவர்கள் தயாராகுவார்களா??

வஸ்ஸலாம்.

***கே.எம். முஹம்மது அலி,***
***பொட்டியார் ஒழுங்கை, அம்பாறை வீதி,***
***சம்மாந்துறை. தொ. பேசி 067 - 2260242***
***முஹர்ரம் 22, 1428 (11-02-2007)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாதம் தொடர்கிறது...

நஹ்மதுஹூ வநுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம். அல்லாஹ்வைப் புகழ்கிறேன். அவனின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக. அஸ்ஸலாமு அலைக்கும்

கருத்துக் கண்ணோட்டம் பாகம் 3ல் வாதம் II "மத்திய கிழக்கில் வஹாபிசமும் சியோனிஸமும்" எனும் தலைப்பிலான என் கட்டுரைக்கு வெலிகம மிலேனியம் கல்வி ஸ்தாபனத்தின் தலைவரே தம் வேலைப் பளுக்கிடையில் மறுப்புரை கூறவந்தமைக்கு முதற்கண் என் நன்றிகள். என் கட்டுரையின் பெறுமானத்தை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டமைக்கு இது சான்றாகும். ஆனால் அவரின் பெரும்பாலான மறுப்புரைகள் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வலுவிழந்து வாயடைத்துப் போயிருக்கின்றன. எனவே என் இந்த பதில் மூலம் கட்டுரையை வாசிக்கும் வாசகப் பெருமக்கள் அதனைப் புரிந்து அறிந்து கொள்வர் என்பது தெளிவு.

அவர் தம் மறுப்புரையில் 67ம் பக்கத்தில் "ஹிஸ்புல்லாக்களின் தலைவர் செய்யிது ஹஸன் நஸ்ருல்லா, லெபனான் யுத்தத்தில் பெற்றெடுத்த வெற்றிக்கும் யூதருடனான 8 யுத்தங்களின் தோல்விக்கும் காரணம் கூறிய கருத்துக்களை மையமாக வைத்து அதனை ஆராய்வது தான் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்." இதன் மூலம் எனது கட்டுரைக்குச் சரியான மறுப்புரை தர வாயெழாது நழுவல் போக்கைக் கையாண்டுள்ளார் என்பது தெரியவருகிறது. எனினும் தன் கட்டுரையின் ஒரு பகுதியைச் செலவழித்தேனும் எனக்கு மறுப்புரை எழுதியமைக்கு நன்றி கூறி என்னால் ஏற்க முடியாத, குர்ஆன் ஹதீஸுக்கு முரணான அவரின் கருத்துக்களுக்கு இயன்றவரை மறுமொழி தருகின்றேன் இன்'ா அல்லாஹ்.

*பதில்: உங்கள் கட்டுரையில் மறுதலித்து வாதிப்பதற்குத் தகுந்த கருப்பொருட்கள் அதிகம் காணப்படவில்லையே. அது நழுவல் அல்ல ஒதுக்குதல்.*

பக்கம் 54ல் எதுகை மோனையுடன் வார்த்தை ஜாலங்கள் புரிவது பாமரத்தனம் என்று அவர் கூறும் கருத்துக்களை இலக்கிய ரசனை தெரியாத ஒருவரின் கருத்துக்களாக ஒதுக்கிவிடுவதா? வாசகருக்கு உற்சாகமூட்டி கருத்துக்களை இலகுவாகப் புரிந்து கொள்ளும் விருப்பத்தை ஏற்படுத்த இலக்கியவாதிகள் கையாளும் வழி என்ன புரிந்து கொள்வதா? அவரின் கட்டுரையில் உக்கிப்போன சடங்கு சம்பிரதாயங்கள் என்ற பழமை சார்ந்த - நவீன உலகத்துக்கு ஒவ்வாத கிரியைகளைத் தூக்கி நிறுத்தி அதையே வேத வெளிப்பாடாகக் காட்ட நினைப்பது பொருத்தமா என்றே கேட்கிறேன். நதியிலே மீன் பிடித்து மதியிலே கறிசமைத்துக் கெதியிலே சாப்பிடத் துடிக்கும் இற்றை பொழுதில் சடங்கு சம்பிரதாயங்கள் என்று சாக்குப் போக்குக் காட்டுவது மனித முன்னேற்றத்தின் முதுகெலும்பை முறிப்பதற்குச் சமனன்றோ? சடங்கு, சடங்கெனறு அந்தக் கிடங்கிலே முடங்கிப் போனவர்களை மீட்டெடுப்பதில் முயன்றால் பல நன்மை அடங்குமல்லவா?

*பதில்: மெக்டொனாட்டில் சாப்பிட்டு ஏப்பமிடுகின்ற மத்தியகிழக்கு வஹ்ஹாபிய மன்னர்களைப் பிரதிநித்துவம் செய்கின்ற நீங்கள் அவர்களைப்போன்று FAST FOOD கலாசாரத்தை அதாவது ஸியோனிஸம் உருவாக்கிய அத்தகைய பரபரப்பான இயந்திரத் தனமான முதலாளித்துவ சுகபோகங்களுக்காக மற்றவர்களை கடின உழைப்புக்கு ஆளாக்குகின்ற இன்றைய இயந்திர உலகத்தையே கட்டியெழுப்ப முனைகின்றீர்கள் இது ஸியோனி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸத்திற்கும் வஹ்ஹாபிஸத்திற்கும் இடையே உள்ள ஒரு நடைமுறை உணவு வழக்கம். உளவியல் போன்றவை சார்பான பண்புகள் ஒற்றுமை. ஆனால் நாங்களோ எவ்வளவு வேகமாக இயங்கினாலும் ஆறுதலாகவும் அமைதியாகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆன்மீக உணர்வுடனே உணவு உண்ண விரும்புகின்றோம். அதனால் தான் கதியிலே உணவு உண்ண நாம் விரும்புவதில்லை. பழமையின் செழுமையை நினைவு கூர்வதற்கு இத்தகைய பழக்கவழக்கங்களும் பக்குவமும் அவசியம் சகோதரியே. இனிமேலாவது உணவு சமைக்கும்போது சற்று பக்குவமாய் சமைக்க முனையுங்கள். ஆன்மீக முக்தி அடைவதற்கு பக்குவமே மிக முக்கியம். கடக்கு-கிடக்கு-மடக்கு இந்த சந்த ஒற்றுமை ஒரு மந்த புத்தியின் வெளிப்பாடே அன்றி ஒரு பலமான சொந்த கருத்தியல் தெளிவினை உருவாக்கி விடாது.

கட்டுரை முழுக்க அரிஸ்டோட்டில், எட்மண்டபேக், ஹோமர், மாண்டே, கன்பியூஸியஸ், ருசோ, வால்டேர், ஹிட்லர், டார்வின் இப்படி சிர்க்கிலே சிக்கிச் சீரழிந்து குப்ரியத்தோடு குத்துக் கரணமடித்து மரித்தவர்களைத் தான் தனக்கு ஆதரவாக ஆதாரத்துக்கு எடுத்துக்கொண்டோரே தவிர மருந்துக்குக் கூட ஒரு முஸ்லிமை அவரால் இனங்காட்ட முடியாமற் போனதேன்? இஸ்லாமிய சரிதையில் அவருக்கு..............?

பதில்: ஹிஸ்புல்லாக்கள், ஈரானியரகள், என்று இன்றைய முஸ்லிம் கதாநாயகர்களைப்பற்றி நான் சொல்லவில்லையா? பெருமானார் (ஸல்) ஈசா (அலை) இமாம் ஹுஸைன் (ரலி) ஹாஜரா நாயகி (அலை) இஸ்மாயில் (அலை) என்றெல்லாம் தான் அணிந்திருக்கும் கறுப்புக் கண்ணாடியினூடாக வஹ்ஹாபிய சிந்தனை மட்டுந்தானா தோற்றமளிக்கும். ஆய்வினடிப்படையில் ஞானிகளையும் அறிஞர்களையும் உள்வாங்கி கூர்ப்படைந்த ஒரு சமூகமாக பரிணமிப்பதற்கு உங்களைப் போன்ற வஹ்ஹாபிகள் தான் தடையாக அமைககின்றார்கள் என்பதை வாசகர்கள் மிக இலகுவாக இதன் மூலம் அறிவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு சம்பிரதாயங்களுடன் முடங்கிப்போன சகோதரருக்கு அவற்றை விமர்சித்தால் அடங்கா கோபம் பன்மடங்காக வருவதேன்? கபுரை உடைப்பது. முன்னோரை இகழ்வது, அடையாளங்களை அழிப்பது, கிதாபுகளை அழிப்பது, கிராமங்களைக் கூறுபோடுவது இப்படி, குற்றங்களை அடுக்கிக் கொண்டே போகிறார்கள். அதற்கு மறுமொழி சொல்லாமல் விடுவோமா?

பதில்: *உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் மறுமொழி அல்ல ஆழ அகலமற்ற குறுமொழிதான் சகோதரியே. நீங்கள் சடங்கு என்ற விமர்சனத்தின் மூலம் ஒரு வரலாற்றை மறக்கடிக்க முனைகிறீர் கள். அது உங்கள் வஹ்ஹாபிய அரசியல் கபட இலக்கை அடைவதற்கு மிக முக்கியமானது. ஒரு சடங்கு கருத்தியல் வடிவமைக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகின்றபோது முற்போக்கான புரட்சி தோற்றம் பெற வாய்ப்பு உண்டு.*

*உதாரணமாக கம்யுனிஸத்தைப் பொறுத்தளவில் இன்று அது தோல்வியுற்ற சித்தாந்தமாக தோற்றமளிக்கலாம். சிவப்பு ஆடை அணிவதும் மேதினம் கொண்டாடுவதும் இன்று எமக்கெல்லாம் வெறும் சடங்காகத் தோற்றமளிக்கலாம். ஆனால் இந்த வருடம் கொண்டாடப்பட்ட மேதினங்களில் வெனிஸுலாவில் கொண்டா டப்பட்ட மேதினம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. ஏன்? வெனிஸுலா அதிபர் காவேஸ் முதலாலித்துவப் பொருளாதாரத் தைக் கொள்ளையடிக்கும் [(IMF),(world bank)] உவக வங்கி, மற்றும் சர்வதேச நாணய நிதியங்களிடம் வட்டியடிப்படையில் கடன் பெறுவதை நிறுத்திக்கொள்வதாக பிரகடனம் செய்தார். இது புரட்சிகரமாகன செய்தி. வஹ்ஹாபிய மன்னர்கள் எண் ணெய் விற்ற பணங்களை ஸியோனிஸ முதலைகளுக்கு தாரை வார்க்கும் போது ஷாவேஸ் போன்ற கம்யூனிஸ தலைவர்கள் அதை எதிக்கிறார்கள். மேதினம் என்ற ஒரு சடங்கு கருத்தியல் தெளிவுடன் சிந்தனையை தூண்டும் விதத்தில் முற்போக்கான தலைவர்களால் அல்லது புத்திஜீவிகளினால் மீளக் கட்டமைக் கப்பட்டது ஆரோக்கியமான விளைவுகளைத் தோற்றுவதற்கு வழியமைக்கும் என்பதை உணர்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாறாக பாரம்பரிய தாங்கள் அத்தனையையும் சிதைத்துவிட்டு சிர்க்கு கோஷம் போடுவதால் நீங்கள் மாற்றம் எதனையும் காணமுடியாது. இந்த பூமிக்கிரகத்தில் வாழத்தகுதியற்ற கூர்ப்படையாத, குறுகிய சிந்தனை வட்டம் கொண்ட, எதிர்மறை உணர்வின் மூலம் பிளவுகளை தூண்டுகின்ற குதர்க்கவாத பிற்போகுத்தனம் நிறைந்த அந்த அறிவற்ற மனிதப் பிண்டங்களைக் கொண்ட ஒரு சமூகத்தை தோற்றுவிப்பதே வஹ்ஹாபிஸத்தின் நோக்கம். அதுவே ஸியோனிஸத்தின் நிகழ்ச்சித் திட்டம். இதை சோதரி உணர்ந்துவிட்டால் நாமிருவரும் ஒரே அணியில்.*

கப்ருக்கு மேலால் கட்டிடங்கள் எழுப்பி அல்லாஹ்விடம் கேட்பதைவிட்டு கப்ராளிகளிடம் கையேந்துவது சிர்க்கல்லவா? கிதாபுகள் என்ற பெயரில் அல்லாஹ், ரசூலுக்கு விரோதமான கருத்துக்களை மக்கள் மனதில் புகுத்தி அவர்களை வழிகெடுக்கும் தகவல்களை ஹதீஸ்களாகக் காட்டுவது எவ்வளவு வெறுக்கத்தக்க சிர்க்காகும்? மசூதிகளை வைத்துக் கொண்டு பெரியார்கள் (?) சொன்னதை முன்னிறுத்தி புனிதமான ஹதீஸ்களைப் பின்னிறுத்தி ஈமானைப் பலவீனப்படுத்தும் கொள்கைகளைச் சாடுவது எங்கனம் குற்றமாகும்?

*பதில்: முதலில் சிர்க்கு என்ற பதம் பற்றி அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு முறுக்கு ஏறிவிட்டால் சிர்க்கு என்று குமுறுகின்றீர்கள்.*

பின்வரும் அவரின் சந்தேகங்களை நாம் நிவர்த்திக்க வேண்டும். (1) முழு அரபு நாட்டையும் வெற்றி கொண்டது ஈமானின் பலத்தினால் தான் என்பது பச்சைப் பொய்ப் புராணம் பாட ஆரம்பிக்கிறார் என்று பக்கம் 56 இலும் (2) அனைத்தையும் இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு (பக்கம் 72) (இது அவரின் கிண்டல் பேச்சு) (3) வெறும் ஈமானிய சமுதாயத்தால் நவீன தீமைகளை வெல்ல முடியுமென நினைப்பது ............ முட்டாள்தனம். இப்படியான அவரின் கூற்றுக்கள் அல்லாஹ்வின் மீதும் ஏகத்துவத்தின் மீதும் தளம்பல் நிலையை ஏற்படுத்தும் போக்கும், சிர்க்குக்கு விழி அமைக்கும் நோக்கு அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பதில்: ஈமானிய பலமும் அறிவியல் தெளிவும் அரசியல் பொருளாதார இராணுவ கட்டமைப்பும் இணைந்ததுதான் ஒரு புரட்சி. இது இஸ்லாமியப் புரட்சி பற்றி கனவு காண்கின்ற நடைமுறை சாத்தியவாதிகளுக்கே தெளிவாகப் புரியும்........................*

கட்டுரையாளர் பழமை என்ற கருத்தை இவ்வாறு தொடலாம் என்று நினைப்பதாக 56.57.58 ஆகிய மூன்று பக்கங்களில் காட்டுகிறார். 8 பகுதிகளில் அவரது கட்டுரைக் கருவின் பெரும்பகுதி ஒளிந்திருந்து ஓலமிடுகிறது. இதோ............

(1) 5000 வருடம் பழமையான மகாமே இப்றாஹீமை இன்றைய மனிதர்கள் செப்பமிடாமல் இருந்தார்களா? என்ற அவரின் கூற்றுக்கு அவரே தான் விடைதர வேண்டும். மகாமே இப்றாஹீம் பற்றி அல்லாஹ் "இப்றாஹீம் நின்ற இடத்தை (விசுவாசிகளே) தொழுமிட மாக்கிக் கொள்ளுங்கள்" (2:125) என்கிறான்.

*பதில்: நல்ல காலம். குர்ஆன் அப்படி நேரடியாகவே சொல்லிவிட்டது. இல்லாவிட்டால் அது சாக்கு என்று மகாமே இப்றாஹீமையும் சேர்த்து நீங்கள் உடைத்து நொறுக்கி இருப்பீர்கள்.*

(2) கஃபாவின் பக்கத்தில், ஹாஜாரா நாயகியின் ஸியாரம் உடைக்கப் படவில்லை என்றும் கஃபாவைச் சுற்றும் போது சிர்க் செய்கிறார் களா என்பது அவரது கேள்வி, ஸியாரத்தையும் சேர்த்துத் தானே சுற்றுகிறார்கள். இதனால் சியாரம் காப்பாற்றப்பட்டது. எனவே அதைச் சுற்றி வலம்வரலாம் தானே என்பதும் அவரது குழந்தைத் தனமான கேள்வி. இப்பொழுதெல்லாம் மௌட்டீகத்த தனமாக சில இடங்களில் சியாரங்களைப் பூசித்து சியாரம் சுற்றுகிறார்களே சில அறிவிலிகள். அவர்களின் செய்கைக்கு ஆதாரம் காட்ட முயல்கிறார். (ஹாஜரா அம்மையாரின் சியாரம் என்பது கட்டுரை யாளரின் கற்பனை) இதுவரை எந்த ஒரு ஹாஜியும் கஃபாவில் அப்படி ஸியாரம் இருப்பதாகச் சொல்லவில்லை.

(3) கஃபாவின் சுவர்களில் ஈஸா (அலை) அவர்களின் கற்பனைச் சித்திரம் வரையப்பட்டிருந்ததாம். அத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தச் சித்திரங்களை அழிக்கவில்லை என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரங்களை வரைவதை பெருமானார் அனுமதித்ததாக ஒரு கருத்தை நிறுவ முனைகிறார். எனவே ஹதீஸ் ஒன்றை இங்கு ஞாபகப்படுத்துகிறேன். அன்னை ஆயிசா (ரலி) அறிவிக்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை பிரயாணத்திலிருந்து திரும்பி வந்தார்கள். அப்போது நான் என் வீட்டுத் திண்ணையில் உருவப்படங்கள் இடம் பெற்றுள்ள திரையால் மூடியிருந்தேன். அண்ணல் நபி (ஸல்) அத்திரையிலுள்ள உருவப்படங்களைப் பார்த்ததும் அத்திரையிலுள்ள உருவப்படங்களைப் பிய்த்துள்ளார் கள். அவர்களின் முகத்தின் நிறம் மாறிவிட்டது. பின்னர் கூறினார் கள். "ஆயிசாவே கியாமத் நாளில் அல்லாஹ்விடம் மக்களில் மிகக் கடினமான வேதனைகள் அல்லாஹ்வின் படைப்புக்களை (போன்று வரைந்து) ஒப்பாக்குகிறவர்களுக்குத்தான்." (புஹாரி) அப்படிக் கூறிய நபியவர்கள் சித்திரங்களை அனுமதித்துள்ளார்கள் என்று கூறுவது பித்தலாட்டமாகும்.

பதில்: *எனது கருத்தை இயலுமானால் பிழை என்று நிரூபியுங்கள். உங்களால் அது முடியாது. ஏனெனில் அதைவிடுத்து சம்மந்தமற்ற உதாரணங்களை கலந்து சாம்பாறாக மாற்றா தீர்கள். வரலாறுகளை ஆய்வது உங்கள் அகீதாவின் படி பித்ஆ என ஓலமிடாதீர்கள்.*

(4) மினாவில் கல்லெறிதல், பழமையான சம்பவத்தில் ஒன்று. அது கிரியையாக மாற்றப்பட்டுள்ளது. பழமை என்று விட்டு விடாமல் ஏன் தொடர்கிறார்கள் என்பது அவரது கேள்வி. நிதானம் தவறிய இந்த வினா சரிதானா? கல்லெறிதல் என் ஹஜ்ஜின் கிரியை. அல்லாஹ்வின் கட்டளை. இதற்குப் பழமை முலாம் பூசுவது அறி வீனமல்லவா? கட்டுரையாளரின் கண்ணுக்கு மட்டும் கல்லெறிதல் சடங்காக தெரிகிறது. எங்கோ நபிகள் காட்டிய வழிமுறையாகத் தெரிகிறது.

பதில்: *எமக்கு நபிகள் காட்டிய சீர்திருத்தமாகவும் பழமையை கிண்ட லடிக்காத பெருமானாரின் உயர்ந்த பண்பாடாகவுமே தெரிகிறது. உங்களுக்கு ஒரே ஒரு பரிமாணம்தான் தெரியும். எங்களுக்கு பல பரிமாணங்கள் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) தொங்கோட்டமோடுதல் பழமை சம்பிரதாயத்திலிருந்து பரிணமித்த தாம். அது ஒரு கலாச்சார பாரம்பரியம் என்கிறார். நாம் கூறுகிறோம். அது ஆண்டவன் கட்டளை. ஹஜ்ஜின் கடமைகளில் ஒன்று. பழமை யான சம்பிரதாயம் என்றால் தூக்கி எறிந்து விடலாமே. இதோ குர்ஆன் கூறுகிறது. "மெய்யாகவே ஸபா (மலை) மர்வா (மலை) அல்லாஹ்வின் மார்க்க அடையாளங்களில் உள்ளவையாயிருக் கின்றன. ஆகையால் எவர்கள் (கஃபா எனும்) அவ்வீட்டை ஹஜ்ஜு அல்லது உம்ரா செய்தார்களோ அவர்கள் அவ்விரண்டையும் சுற்றி வருவது குற்றமல்ல (2:158) இவ்வறான அலலாஹ்வின் கட்டளையொன்றை கலாசார மாரம்பரியம். சம்பிரதாயம் என்று ஒதுக்கிக் காட்டுவது எவ்வளவு மதியீனமாகும்?

*பதில்: அவை அல்லாஹ்வின் அடையாளங்கள் என்றே குர்ஆன் கூறு கின்றதே. அடையாளங்கள் பழமையின் சின்னங்கள் இல்லையா? உங்களுக்கு வாசித்து கிரகிக்கும் ஆற்றலில்லையா? நீங்கள் அகராதி புரட்டிப் பாருங்கள். நீங்கள் எவ்வளவு தான் கட்டுரை எழுத சரக்கு இல்லாமல் முண்டியடிக்கின்றீர்களா?*

(6) கர்பலாவை நினைவுகூறும் சம்பவம் ஹாஜரா நாயகி நினைவு கூரும் நிகழ்வுக்குச் சமனாகும் என்பது கட்டுரையாளரின் முக்கிய கண்டுபிடிப்பு மட்டுமல்ல உறுதியான கூற்றுமாகும். இந்தச் சமப்படுத்தல் எதில் கொண்டுபோய் முடியுமோ? அல்லாஹ் அஃலம். ஹஜ்ஜின் கடமை ஒன்றை கர்பலாவுக்கு நிகராக்குவது சிக்கலல்லவா?

*பதில்: இமாம் ஹுசைனின் ஷபாஅத்தில் கொண்டு முடியும். எதிர் வீட்டுக்காரியுடன் சண்டை பிடித்துவிட்டு ஒப்பாரி ஓலமிடும் பெண் களைப் போல் கட்டுரையும் எழுதுவதா?*

(7) ஹுனைன் யுத்தத்தில் 1000 க்கும் அதிகமான சிலை வணங்கிகள் பயன்படுத்தப்பட்டதாகவும் அவர்களின் சமயச் சடங்குகளுக்கு பெருமானார் (ஸல்) அனுமதித்ததாகவும் கூறுகிறார் கட்டுரையாளர். அப்ரஹாவின் யானைப் படையிலிருந்து கஃபாவைக் காப்பற்றிய அல்லாஹ் சிலையையும் சேர்த்தல்லவா காப்பாற்றினான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிடும் கட்டுரையாளர் (சிலைகளை அழிப்பதில் அல்லாஹுவுக் கில்லாத கோபம் எனக்கேன் என்று கேட்கும் கட்டுரையாளர்) இவ்விடத்தில் ஹுனைன் யுத்தத்தில் பெருமானார் சிலைகளை அனுமதித்ததாகவும் கூறி இஸ்லாத்தில் சிலைகளை நுழைத்து விடக் குத்துக்கரணம் அடிப்பதாகத் தெரிகிறது. ஏன் இந்த சிலை ஆசையோ?

*பதில்: மத்திய கிழக்கில் மன்னராட்சி என்கின்ற மாபெரும் சிலைகளை முதலில் சிதைத்துவிட்டு மற்ற சிலைகளைப் பற்றி பேச வாருங்கள்*

(8) கட்டுரையாளரின் 8 ஆம் இலக்கத்தில், அப்ரஹா கஃபாவை அழிக்கவந்த போது கஃபாவை மட்டுமல்ல 366 சிலைகளையும் அல்லாஹ் பாதுகாத்ததாக நிறுவ முயல்கிறார். இப்படி 366 சிலைகளுக்கும் எதிராக அல்லாஹ்வுக்கு ஏற்படாத சீற்றம் ஏன் வஹ்ஹாபிகளுக்கு ஏற்படுகிறது என்று கேட்கத் தோன்றுகிறது என்றார். எங்களை வஹ்ஹாபியாகக் கணித்துச் சீறுகிறார். இந்த இடத்தில் அல்லாஹ்வின் திருவசனமான 6:74 இப்படி எச்சரிக்கிறது. (விக்கிரங்களுக்கு எதிராக அல்லாஹ்வுக்கு ஏற்பட்டிருக்கும் உண் மையான சீற்றம் எப்படிப்பட்டதென்று கட்டாயம் கட்டுரையாளர் அறிந்துகொள்ள வேண்டும். இதோ!

“இன்னும் இப்றாஹீம் தன் தந்தையாகிய ஆஸரிடம்” விக்கிரகங்களைத் தெய்வங்களாக எடுத்துக்கொண்டீரா? உம்மையும் எம்முடைய சமூகத்தாரையும் பகிரங்கமான வழிகேட்டிலிருப்பதை நிச்சயமாக நான் காண்கிறேன் “என்று கூறியதை (நபியே நினைவு கூர்வீராக)” (6:74) இந்த இடத்தில் கட்டுரையாளருக்கு ஒன்றை நினைவூட்டுகிறேன். கோவிலிலுள்ள சிலைகள் அனைத்தையும் உடைத்து ஏகத்துவத்தை நிலை நிறுத்திய இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு தானே அல்லாஹ் புனிதமிக்க கஃபாவை கட்டும் பணியை ஒப்படைத்தான் அல்லவா

1. கஃபாவை கட்டியெழுப்பும் கைங்கரியத்தை சிலைகளை உடைத்து சுக்குநூறாக்கிய இப்றாஹீம் நபிக்கு அல்லவா அல்லாஹ் கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பதில்: நான் சிலைவணக்கத்தோடு உடன்பட்டிலன் என்பது உமக்கு நன்றாகவே தெரியும். ஆனால் சிலைகளை தலிபான் பாணியில் காட்டுமிராண்டித்தனமாக சிதைப்பதற்கு எமது இஸ்லாமிய பண்பாடு அனுமதிக்கவில்லை. மிக நாகரீகமான முறையில் இஸ்லாமிய ஆட்சியும் அறிவியல் மறுமலர்ச்சியும் தோற்றம் பெற்று இஸ்லாமிய ஆன்மிக அரசியல் தலைமைகளின் அறிவுரைக்கமைய மக்காவெற்றியின்போது இறைதூதர் சிலைகளை அகற்றியது போன்றே இடம்பெற வேண்டும் என்ற ஆழமான கருத்தை உணராமல் மட்டகரமாக சிலைவணக்கத்தினை நான் ஆதரிப்பவன் என்று நிறுவ முனைவது எவ்வளவு கேவலமானது.*

2. கஃபாவின் பக்கத்தில் ஹாஜர் அம்மையாரின் ஸியாரம் இருப்பதாகவும் கஃபாவின் சுவர்களில் ஈஸா நபியின் உருவம் வரையப்பட்டிருப்பதாகவும் மினாவில் கல்லெறிதல், தொங்கோட்டம் ஓடுதல் பழைய சடங்கென்பதாகவும் கூறுபவர்கள் அவற்றை ஜாஹிலியாக்கால சிலை வணக்கத்தின் எச்சசொச்சங்களாகக் காட்டக் குத்துக்கரணமடிக்கிறார்கள். இஸ்லாம் வந்ததே சிலை வணக்கத்தையும் அதனூடான எல்லா வி'யங்களையும் உடைத்து நொறுக்கவே தவிர வேறில்ல. ஹஜ்ஜின் கடமைகள் ஒவ்வொன்றும் ஏகத்துவத்தின் அங்கீகாரமாகவே அமைந்த தெளிவான தவ்ஹீதாகும்.

*பதில்: உடைத்தல், நொறுக்குதல், இடித்தல், தகர்த்தல் இவை தவிர வேறு வார்த்தைகள் இல்லையா உமக்கு?*

மேற்கூறப்பட்ட அவரின் 8 அம்சங்களுக்கும் மறுமொழி கிடைத்துள்ளது. அவரின் கட்டுரையின் போக்கில் பௌத்த இந்து மதச்சிந்தனைகளை இஸ்லாத்தில் இணைக்க முயலும் வாடை வீசுகிறதா அல்லது எம்மதமும் சம்மதம் எனும் கொள்கையைப் புகுத்த முனைகிறாரா தெரியவில்லை. சடங்கு, சம்பிரதாயங்கள் என்று கூறி உருவப்படங்களையும் சிலைகளையும் இஸ்லாத்தில் உள்வாங்க முயற்சிக்கிறாரா? மேற்படி வி'யங்களைப் புரிந்து கொள்ள சரித்திரப் புத்தகங்களைப் புரட்டத் தேவையில்லை ஈமானில் உறுதியிருந்தாலே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பதில்: சரித்திரம் உங்களுக்கு நஞ்சு. ஏனெனில் வஹ்ஹாபிய பூர்வீகம் அத்தனையும் தோலுரித்து வண்டவாளங்களை சரித்திரப் புத்தகங்கள் அவிழ்த்துவிடும் என்ற பயம் உங்களுக்கு?*

அக்கால யூதர்களும் தவ்ஹீத் வாதிகளே என்று கூறும் கட்டுரை யாளருக்கு தவ்ஹீத் என்றால் என்ன என்று புரியவைக்க வேண்டியுள்ளது. வணக்க வழிபாடுகள் யாவும் அல்லாஹ்வுக்கா மட்டுமே செய்து அவனை ஒருமைப்படுத்துவதே தவ்ஹீத் ஆகும். இதுவே ஏக இறை நம்பிக்கையா கும். உலகில் வந்த அத்தனை நபிமாரும் இதற்காகவே பாடுபட்டார்கள்

58ம் பக்கத்தில் அஹதியா வகுப்புக்களைச் சாடுகிறார். எதிர்மறைக் கல்வியைப் புகட்டுகிற ஒரு வழிமுறை அஹதியா வகுப்புக்களில் தென் படுகிறது என்ற ஒரு குற்றச் சாட்டைப் போட்டு அருமையாகச் செயல்படும் அஹதியா வகுப்புக்களை அநாதரவாக விட்டு அகதியாவே ஆக்கிட முயல்கிறார்.

*பதில்: அஹதியா அறிவியல் அகதிகளை உருவாக்குகின்றது என்பதை நான் துணிந்து கூறுவேன்.*

மனனம் செய்கின்ற பயிற்சிகள் அனைத்தும் தவறானது என்று 58ம் பக்கத்தில் கூறும் அவர் குர்ஆனின் நற்போதனைகள் அதனை அடி யொட்டி நடப்பதற்காகத் தானேயொழிய (1) வெறுமனே மனனஞ் செய்வதற் காக அல்ல என்றும் (2) மனனம் செய்யும் பயிற்சிகள் அனைத்தும் தவ றானது என்றும் (3) மனனம் செய்யும் பயிற்சிகள் சிந்திக்க முடியாத பிண்டங்களாக இளம் பிஞ்சுகளை மாற்றி விடுகின்றன (பக். 59) என்றும் வளர்ந்துவரும் மாணவக் குருத்துக்களுக்கு எதிராக நச்சுக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பாடசாலையில் நன்றாக மனனம் செய்யும் மாணவர்களைப் பார்த்து மனனமிடக் க்டப்படுபர்கள் கோபம். பொறாமை கொண்டு போலி நியாயங்களைக் காட்டுவதுண்டல்லவா?

பொதுவாக மனனம் பற்றியும் குறிப்பாக குர்ஆன் மனனம் பற்றியும் இவ்வித்தில் தெளிவுபெற வேண்டும். அல்குர்ஆன் அல்லாஹ்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளப்பட்ட காலத்திலிருந்தே ஸஹாபித் தோழர்கள் மனனமிட்டு வந்ததாலேயே பின்நாட்களில் அது பூரண தொகுப்பாக அமையப்பெற்றது என்பது நமக்கெல்லாம் தெரிந்த செய்தி. அல்குர்ஆனைத் தானே பாதுகாப்பதாக அலாஹ்வின் வாக்குறுதியை மனனமிடப்பட்டதன் முலம் நிறைவுசெய்துள்ளான். நிச்சயமாக நாம்தான் (திருக்குர்ஆன் எனும் இவ்) வேதத்தை (உம்மீது) இறக்கிவைத்தோம். நிச்சயமாக நாமே அதனைப் பாதுகாப்பவர்கள். திருக்குர்ஆன் மனனம் செய்வதற்கு மட்டுமல்ல என்ற கட்டுரையாளரின் கூற்று பக்தி சிரத்தையுடன் வெளிவந்ததல்ல.

தொழுகையின் பல்வேறு இடங்களில் பல்வேறு ஓதல்களைக் கட்டாயம் நாம் ஓதியாக வேண்டும். அவை சுன்னா, பர்ளு என்று வருகின்றன. பாத்திஹா (மற்றும் சூராக்கள்) அத்தஹிய்யாத், ஸலவாத்து என்பவை மனனம் செய்யாமல் தொழுகையே நிறைவேறாதே ஒரு வேளை தமக்குக் கடமையில்லை என்போர் இந்த மனனப் பயிற்சியை உதாசீனம் செய்ய முயலலாம்.

*பதில்: தொழுகையின்போது அத்தஹீய்யாத், ஸலவாத் கடமை என்பதை ஏற்கிறீர்கள். ஆனால் அவற்றின் அர்த்தங்களை நீங்கள் சீர் தூக்கிப் பார்ப்பதுண்டா? இறைவன் நபிகளார் மீதும் அன்னாருடைய பரிசுத்த குடும்பத்தவர் மீதும் வழித்தோன்றல்கள் மீதும் ஸலவாத் சொல்வதை கடமையாக்கி அவர்களை நேசிக்கும் பக்குவத்தை தோற்றுவிப்பதற்கல்லவா அத்தஹிய்யத்தும் ஸலவாத்தும் சொல்லும்படி ஆணையிடுகிறான். ஆனால் உங்களுடைய வஹ்ஹாபிய சித்தாந்தத்தில் ஸலவாத்து சொல்வதே ஒரு பித்ஆவே? பாங்கின் முன் பின் ஸலவாத்தே ஷிர்க்கே எனினும் நீங்கள் அவற்றை கடமையாக்கியது பற்றி பேசியதற்கு நன்றிகள். நீங்கள் மனனம் செய்தால் மட்டும்போதாது. வெறுமனே வார்த்தைகளால் சொல்லிவிட்டாலும் போதாது. அவற்றின் பொருள்களை மானசீகமாக உணர்ந்து அறிவியல் தெளிவோடு செயற்பட வேண்டும் என்பதே எனது கருத்து. மாறாக மனனம் செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எனது வசன நடையினை வேண்டுமென்றே இன்னொரு கோணத்திற்கு திசைதிருப்பும் உங்களது மலிவான சாகசம் கட்டுரை முழுவதிலுமே காணக் கிடைக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனது சமுதாயத்தில் கண்ணியம் உள்ளவர் அல்குர்ஆனைச் சுமந்தவர்களே. (திர்மிதி) சுமந்தவர்கள் என்றால் மனனமிட்டவரன்றோ?

II. யாருடைய உள்ளத்தில் அல்குர்ஆனின் சிறு பகுதியேனும் இல்லையோ அவருடைய உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்ற தாகும்.

III. அல்பகராவையும் ஆலஇம்ரானையும் (மனனமிட்டு) ஓதுபவராக ஒருவர் காணப்பட்டால் அவர் எங்கள் மத்தியில் மதிப்பிற்குரிய வராக ஆகிவிடுவார். (முஸ்னத் அஹ்மத்)
(நீங்களும் நாங்களும் போற்றும் அலி (ரலி) ) மேற்படி ஹதீஸை கூறுகிறார்கள் இவற்றுக்கு என்ன பதிலோ?

மனனம் என்றால் என்ன? மனதில் பதித்தலன்றோ? ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்லும் ஒருவருக்கு சில தகவல்களை வாய்மூலம் சொல்லி அனுப்புவது வழக்கம். அவர் அதைத் தன் மனப்பெட்டகத்துள் பதித்துச் செல்லாவிடின் சம்பந்தப்பட்டோரிடம் போய் விழிக்க வேண்டிவரும் அல்லவா? மனனம் தேவையில்லை என்றால் குர்ஆன், ஹிபுள் மத்ரஸாக் களை இழுத்து மூடுவதா? பாடசாலைப் பாடங்களை மனதில் தக்க வைக்கா மல் அடுத்த நாட்பாடசாலைக்கு போய் விழி பிதுங்க நிற்பதா? கீழ்வகுப்பு மாணவர்கள் வாய்ப்பாட்டுக் கணக்குகளை மனனமிடாமல் கணித பாடத்துக்கு முகம் காட்டுவது எங்கனம்? பரீட்சைக்குத் தோற்றும் மாணாக்கர் தாம் படித்தவைகளை மனதிலிறுத்தாமல் போனால் பரீட்சையில் கோட்டை விடவேண்டிய தானே. நேர்முகப் பரீட்சையில்...............? சட்டியில் இருந்தால் தானே அகப்பைக்கு வரும்.

*பதில்: சட்டியில் என்ன கறி இருக்கிறதோ அந்தக் கறிதானே அகப்பையில் வரும். அஹதியாவின் சட்டியில் வருவன அரைவேக்காடுகளாகவே உள்ளன.*

பக்கம் 59ல் எதையும் படித்தல்ல சான்றோரைப் பின்பற்றியே புத்திசாலியாகிறான் என்ற கருத்தை குழந்தைகளின் மனதில் பதியச் செய்ய வேண்டும் என்று எழுதியுள்ள கட்டுரையாளரின் கருத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டும். ஹிப்ள் மத்ரஸாக்களை மூடச் சொல்வது போல அனைத்துப் பாடசாலைகளையும் மூடிவிடுவதா? மேற்படி கூற்று தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வழிபாட்டுக்கு அடித்த(ா)ளம் போடுவதாக எனக்குப்படுகிறது.

*பதில்: நபிகளாரைப் புகழ்வதே உங்கள் பார்வையில் ஷிர்க்கு. நபிகளாரையும் நல்வழி நடந்த சான்றோர்களையும் நினைவு கூராமல் இந்த மத்ரஸாக்கள் எதைத்தான கற்கப் போகின்றன. வஹ்ஹாபிய முல்லாக்கள் மத்ரஸாக்களில் இன்னும் சில வருடங்களில் அலவாங்குகளுடனும் கோடரிகளுடனும் நின்றுகொண்டு கப்றை உடைப்பது எப்படி தொல்பெருள் அடையாளங்களை நொறுக்குவது எப்படி என்று வரிந்து கட்டிக்கொண்டு அடாவடித்தனத்தையும் கற்பிப்பார்கள.*

பக்கம் 60ல் வெறும் மறுமை வாழ்க்கைக்கு அழைக்கும் இவர்கள் என்று எம்மைக் கேலியாக குத்திக் காட்டுகிறார். இதைக் கவனிக்கும்போது உலகம் நிரந்தரமானது என்றாகுமா? அதன் மாயையில் மூழ்கி இன்பம் அனுபவிக்கும் சீமானுக்கு நல்லதே தவிர ஈமானுக்கு நல்லதல்ல. “அத்துன்யா மஸ்ரஅதுல் ஆஹிரா” இம்மையானது மறுமையின் விளை நிலம் என்றார்கள் அன்பு நபி (ஸல்) அவர்கள். இவ்வுலகம் ஓர் ஈயின் இறக்கைக்குக் கூட சமனாகமாட்டாதென்பதும் எவ்வளவு உண்மை!

மீண்டும் அதே பக்கத்தில் வெறும் மறுமை வாழ்க்கைக்கு அழைப்பதில் தான் மனிதனின் அழிவின் விதை புதைந்திருக்கிறது என்கிறார். அத்துடன் விட்டாரா? அதே பந்தியில் மனித வாழ்வில் எவ்வளவு தான் ஆன்மீகம் மற்றும் சமுதாய மாற்றங்களைக் கொண்டு வந்தாலும் தீமைகளை நீக்க முடியாது. என்று அடித்துச் சொல்வதை எடுத்துக் காட்டுவது என் பொறுப்பல்லவா?

மறுமை என்றொரு வாழ்வே இல்லை. இவ்வுலகுடன் எல்லாம் முடிந்துவிடும் என்று கூறுவதில் நாஸ்திக வாடை கடுமையாக வீசுகிறதல்லவா? “ இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை” (3:185) என்ற அல்லாஹ்வின் எச்சரிக்கையை இங்கு நினைவூட்டுகிறேன். அத்துடன் பின்வரும் ஹதீஸை அபூஹுரைரா (ரலி) (ரிவாயத்) “உலகம் முஃமின்களின் சிறைச்சாலை. காபிர்களின் சுவர்க்கமாகும்.” (முஸ்லிம்) கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான் ஆங்கிலேயன் அரேபியாவை ஆக்கிரமிப்பதை நியாயப் படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

60ம் பக்கம் கடைசிப் பந்தியில் நாட்டுக்கு நல்லது செய்து குழந்தைகளை சிறுவர்களைத் தூக்கிவிடும் அஹதிய்யா பாடசாலைகளில் கிளிப்பிள்ளைப் பயிற்சி அளிக்கிறார்கள் என்று அலுப்பில்லாமல் சொல்லிக் கிண்டலடிக்கிறார். அத்துடன் விட்டாரா? 61ம் பக்கத்தில் புனிதமானவற்றைக் கேலி செய்து காலத்தை வீணாக்குகிற ஆசிரியர்களிடம் ஒரு வெங்காயத் தையும் எதிர்பார்க்க முடியாது என்று வெட்டுக் காயப்பட்டவர் போல அலறுகிறார். இவர் எதிர்பார்க்கும் புனிதம் என்ன தெரியுமா? கர்பலா, சமாதி வணக்கம், சடங்கு. சம்பிரதாயம், பெரியார்க் கைபிடித்து முத்தமிடல், தனிமனித வழிபாடு இத்தியாதி. வாசகப் பெருமக்களுக்குப் புரிகிறதா? கட்டுரையாளர் எம்மை இட்டுச் செல்லும் வழி குருட்டு வழி என்று.

குருட்டு வழி பற்றிப் பேச வஹ்ஹாபிகளுக்கு என்ன அருகதை இருக்கிறது. மத்திய கிழக்கு முழுவதும் குருட்டு வழியில்தானே செல் கிறது. ஆசிரியர்கள், சீர்திருத்தவாதிகள், முல்லாக்களை முதலில் நீங்கள் இனங்கண்டு கொள்ளுங்கள்.

"குர்ஆன் கருத்துக்களுக்கு முரண்படும் ஒரு நாஸ்திகன் அல்ல நான்" என்று ஒரு போடு போடுகிறார். 61ம் பக்கத்தில், குர்ஆன் ஹதீஸுக்கு முரணான கருத்துக்களை வழங்கிவிட்டு எம்மை ஏமாற்ற முயலும் தந்திரமா இக்கூற்று?

என்னை ஒரு நாஸ்திகனாக சித்தரிக்க முயல்வதும் முஆவியா பாணியிலான ஒரு தந்திரம் தான்.

61ம் பக்கம் இங்கு எனதும் சகோதரியினதும் முரண்பாடுகள் முறையே அறிதலுக்கும் அறியாமைக்கும் இடையிலான முரண்பாடுபோல எனக்குத் தோன்றுகிறது என்கிறார். அறியாமை என்ற உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டால் அறிதல் தானாகவே வரும் என்பதல்லவா உண்மை. இன்றேல் அத்தொடரை முன்பின்னாக மாற்றிவிடுவதே வெகு பொருத்தம்.

அறிவு பற்றிப் பேசுவதற்கு ஒரு அருகதை இருக்க வேண்டும் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் நிலைமை எய்துவதற்கு நெல்சன் பிரபு. வெலிங்டன் கோமகன். சேக்ஸ்பியர் போன்றோரை ஞாபகத்தில் இருத்த வேண்டும் என்று அவர் கூறுவதைப் பார்த்தால் காபிர்களை விட்டால் உதாரணம் காட்ட ஆளே கிடைக்காது போலிருக்கிறது. இதில் சிர்க்கு வாடை வீசுகிறதல்லவா? ஆனால் நாம் கூறுகிறோம் இப்படி, உமர் பாரூக், அலி பின் அபீதாலிப், காலித் பின் வலீத், உமர்பின் அப்துல் அஸீஸ், தாரிக் பின் ஸியாத் போன்ற இஸ்லாமிய வீரச் சிங்கங்களை நினைவில் கொள்ளவேண்டும் என்று.

*பதில்: மூக்கிழந்தவனுக்கு கண்ணாடியோடு கோபமாம். அந்த வரலாறு தெரியாமல் வாதத்திற்கு வந்தால் இப்படியெல்லாம் சொல்லத்தான் தூண்டும் சோதரி.*

அதே 62ம் பக்கத்தில் தெரு நாய்களுக்கு இருக்கக் கூடிய தகுதி கூட இவர்கள் வாழ்வில் தென்படுவதில்லை என்று காட்டமாகக் கண்ணியமிழந்து கதறிக் கொட்டுகிறார். அத்துடன் விட்டாரா? பிராந்திய சொந்தம் காரணமாக ஒரு தெருவில் உள்ள நாய்கள் மறுதெருவிலுள்ள தெரு நாய்களை அந்தத் தெருவில் நுழைய அனுமதிப்பதில்லை என்று நாய்ப்பாட்டு பாடுவது அவ்வளவு நல்லதல்ல. அறிவுக்கு அழகுமல்ல. பேனா பிடிப்பவர்க்குப் பெருமையும் அல்ல

கண்ணியம் என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்குக் கூட உமக்கு ஒரு கண்ணியம் இருக்க வேண்டும்.

கருத்துக்களோடு கருத்துக்கள் மோதச் சரக்கில்லை என்றால் கிறுக்குப் பிடித்த தெருநாய்களையேனும் உதவிக்கழைக்கத் தான் வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களக விரும்பாத,காலின் கீழ் போட்டு மிதித்த இந்த பிராந்தியவாதம் இஸ்லாத்தில் எடுபடுமா சிந்தியுங்கள், “அல்முஸ்லிம் அகுல் முஸ்லிம்” என்ற தாரக மந்திரத்தைத் தாங்கிய நாம் இப்படி பிராந்திய வாதத்தில் சிக்கி ஒரு சடங்காக முடங்கிப்போவது சரிதானா?

*பதில்: உங்கள் வார்த்தைகள் தெருநாயின் சத்தத்தை மிகைத்து விடும் போலிருக்கிறதே. சற்று அடக்கி வாசியுங்கள் சோதரியே. நான் அரேபியனுடைய பிராந்தியங்களை ஆங்கிலேயன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆக்கிரமிக்கின்றான் என்றுதான் ஆதங்கப்பட்டேன். தெருநாய்களுக்குக் கூட பிராந்தியச் சொந்தம் இருக்கின்றது. ஆனால் அது ஏன் அரேபியனுக்கு இல்லை என்ற எனது கூற்றை நாய் பாட்டினால் திசை திருப்ப முயலாதீர். பிராந்திய வாதத்தையும் பிராந்திய சொந்தத்தையும் போட்டு குளப்பி இருக்கின்றீர்கள். உங்கள் அறியாமையின் வெளிப்பாடுதான் இது.*

சொந்த ஊரான மக்காவை விட்டு நெடுந்தூரம் போய் மதீனாவில் பக்தர்களை உண்டாக்கிய நம் திருநபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிராந்தியச் சொந்தம் பாராட்டவில்லை. அன்னார் தன் இறுதி ஹஜ்ஜில் அரபா முற்றவெளியில் இதோ பேசுகிறார்கள். நாமும் காது தாழ்த்திக் கேட்போமா?

“மக்களே அறியாமைக் காலத்து அனைத்துச் செயல்களையும் நான் எனது பாதங்களுக்குக் கீழ் புதைத்து அழித்துவிட்டேன். அல்லாஹ்வை வணங்குங்கள். மனித சமுதாயம் ஆதம் ஹவ்வாவிலிருந்து உருவாக்கியுள்ளது. அரபிக்கு அரபி அல்லாதவரை விடவோ, அரபி அல்லாதவருக்கு அரபியை விடவோ ஒரு வெள்ளையனுக்கு கறுப்பனை விடவோ ஒரு கறுப்பனுக்கு வெள்ளையனை விடவோ எந்த விதத்திலும் மேன்மையும் இல்லை. இறையச்சத்தையும், நற்செயலையும் விட முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரன்.” இப்படி கூறி பிராந்திய வாதம் என்ற மயக்கம் தரும் பிராந்தியை அழித்தொழிக்கவில்லையா?

பிராந்தியச் சொந்தம் என்ற பதத்திற்கே பொருள் தெரியாமல் உளலுகிறீர். மீண்டும் ஒரு முறை எனது கட்டுரையை வாசிக்கவும்.

பலஸ்தீன் இஸ்ரவேலில் ஆப்பானில் கா'மீரில் கொசோவோவில் சோமாலியாவில் செச்னியாவில் அல்லல்படும் முஸ்லிம்களைக் கைதூக்கிவிட நாதியில்லை. இங்கு என்னடாவென்றால். கபுர்வணக்கம், கத்தம், சடங்கு, சம்பிரதாயம், முன்னோர் வழி இப்படி இப்படியெல்லாம் கருத்துக்களைக் காட்டி பாமர மக்களை திசைதிருப்புகிறார்கள். பாரம்பரியம், கலாசாரப் பண்பாடு என்ற குறுகிய வட்டத்தில் சுற்றுவதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர இவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. சொன்னாலும் புரிவதில்லை. அவற்றின் உண்மையை அறிவதுமில்லை.

பதில்: உங்கள் மத்திய கிழக்கு மன்னர்கள் இஸ்ரேலுடன் கள்ளத்தொடர்பினை வேண்டியதனால் அமெரிக்காவுக்கு எண்ணெய்யை தாரை வார்க்கின்றீர்கள். நாம் எப்படி பலஸ்தீனில் ஆப்கானில் சோமாலியாவில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? நீங்கள் தான் சில்லறைப் பிரச்சினைகளை தூக்கிப்பிடித்து அரசியலைப் பின்தள்ளுகிறீர்கள் அதனால் தான் குறுந்தாடி மன்னர்களை நீங்கள் எவரும் விமர்சிப்பதில்லை.

அண்மையில் கிழக்கிலங்கையில் மரணித்த ஒருவரின் உடலை 3 நாட்களுக்குப் பின் தோண்டி எடுத்து தாலிபான்களைப் போல அவமானப்படுத்தி............ என்று அவரின்கட்டுரையின் ஒரு பகுதி குறிப்பிடுகிறது. இந்தச் சம்பவம் வானொலி, பத்திரிகை முதலாம் ஊடகங்கள் மூலம் நாட்கணக்காகப் பிரபல்யப்படுத்தப்பட்ட செய்தி. ஆனால் கட்டுரையாளரோ விசயம் புரியாச் சாதுவாக உண்மையை மறைத்து மக்களைத் திசைதிருப்ப முயலுவதாகத் தெரிகிறது.

இறந்த உடல் அன்புக்கும் மரியாதைக்கும் உரியது. அதன் அடக்கஸ் தலத்தில் ஒவ்வொரு மண்மனியும் புனிதமானது. புனிதம் அற்புதம், தலைமைத்துவம் போன்ற பதங்களே வஹாபிய அகராதியில் ீர்க்கானது. எனவேதான் கட்டுரை நெடுகிலும் ீர்க்குப் புராணம் பாடியுள்ளீர்கள்.

அந்த நிகழ்ச்சி : இறை நிராகரிப்பின் வித்தாக முஸ்லிம்களை காபிராக்கி தனி வழிபாடு நடத்திக் கொண்டிருந்த பிர்அவ்னின் வழிவந்த ஒருவரின் செயல், ஊரைப் பிரித்துத் தனக்காக ஒரு பள்ளி அமைத்து தனக்கென்று சில அடிமைகளை (பணக்கார) ஏற்படுத்தி தனிவழிபாடு அமைத்த ஒருவர். அந்த நபர் மரணித்த போது அவரை அடக்கி அதற்கு மேல் கட்டடம் எழுப்பி இஸ்லாம் கண்டித்த பூசை வழிபாடு சமாதி வழிபாடுகளுக்கு முனைந்தது ஒரு சிறு கூட்டம். அதை முழு ஊரும் எதிர்த்தது. இது கதை அல்ல. நடந்த சம்பவம். இஸ்லாத்தின் தூய்மையை மாசுபடுத்த முயன்ற அந்தப் பயில்வானைத் தோண்டி எடுத்து வேறோரிடத்தல் அடக்கம் செய்ய கோட்டாரே கட்டளை இட்டது. தனிநபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டுக்குத் தூபமிட்ட அந்த சிரக்குச் சம்பவத்தை கட்டுரையாளர் பிழையான கோணத்திலிருந்து படம்பிடத்துக் காட்டுவது தான் விநோதம். விபரீதம் இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் மக்கள் ஏமாளிகளா?

கன்பியூஸியஸ் ஒரு சீன தேசத்தவர். அவனின் வார்த்தையை வேதவாக்காகச்சொல்கிறார் கட்டுரையாளர். இதை அப்படியே தருகிறேன். "கன்பியூஸியஸின் பழமைக் கருத்தை வஹ்ஹாபிஸம் 2ம் பாகத்தில் இணைத்திருந்தேன். மீண்டும் முன்வைக்கிறேன்." " காலஞ்சென்றவர்களின் நினைவை மதித்து. ஈமச் சடங்குகளைக் கவனத்துடன் நடத்தியும், மாண்டு போனவர்காக வரையறையின்றி சமர்ப்பிணங்களை மதவிதிமுறைப்படி செய்தும் வரக்கூடிய மக்கள் நெறியின் உச்ச கட்டத்தை அடைந்து விடுவார்கள்" இக்கருத்து இன்றைக்கு எம்பெருமானாருக்கு முன்பு சுமார் 1000 வருடம் பழமை வாய்ந்ததாகும். என்று புகழ்வேறு பாடுகிறார் கட்டுரையாளர்.

வரலாறுகளைப் படிக்கக் கூடாது என்று ஆணையிடுவது போல் பாவனை செய்து வாசகர்களைத் திசைதிருப்பி விடுவது உங்களுக்கு கைவந்த கலைதானே. பழைய வழிபாட்டு முறைகளிலிருந்துதான் இன்றைய பூரண வழிபாட்டு முறையை இறைவன் எமக்கு அன்பளித்தான்.

இனி அவர் போற்றும் ஞானி கன்பியூஸியஸினது கருத்தையும் அவன்மீதுள்ள கட்டுரையாளரின் அபிமானத்தையும் அப்படியே தந்துள்ளேன். சிந்திப்பது வாசகர் பொறுப்பு. கட்டுரையாளரைச் சந்திப்பது என் பொறுப்பு.

*பதில்: நீங்கள் வாசகர்களுக்கு ஏற்றாதீர்கள் வெறுப்பு.*

நம் உயிரினும் மேலான தலைவர் ஈருலக ரட்சகர் ரஸூல் (ஸல்) அவர்கள் காட்டாத வழிமுறையொன்றை கன்பியூஸியஸ் சொன்னதற்காக மிகப் பழமை என்பதற்காக போற்றுகிறீர்கள் அல்லவா? இந்த சிர்க்குகளை ஈமச் சடங்கு செய்வது. மாண்டு போனவர்க்கு சமர்ப்பணம் செய்வது பற்றி குர்ஆனில் ஹதீஸில் ஆதாரம் காட்ட முடியுமா?

69ம் பக்கத்தில் அதானுக்கு (பாங்கு) முன்பு ஸலவாத்துச் சொல் வது கூடுமா? அல்லது கூடாதா? என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கட்டுரையாளரின் கூற்று விளக்கமின்மையை தோற்றுவித்துள்ளது. கட்டுரையாளருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நினைவூட்டுகிறேன். வஹ்ஹாபிகள் மட்டுமென்ன ஸஹாபிகளாகட்டும் ஒவ்வொரு முஸ்லிமும் இதைப் பற்றிச்சிந்தித்து செயல்பட வேண்டும். ஏன் தெரியுமா? இது வள்ளல் நபி (ஸல்) அவர்களின் வழிமுறை. அந்த ஸலவாத் சொல்வதை எந்த இடத்தில் அன்னார் அனுமதித்தார்களோ அதே இடத்தில் தூதரின் வார்த்தைகளை இடம்மாற்ற முடியாது. நபியவர்களின் புனிதமான சுன்னா அது. கட்டுரையாளர் கருதும் எந்தப் பெரியாராலும் மாற்ற முடியவே முடியாது. அப்படி ஒரு பெரியார் முயற்சித்தால் அவர் சுன்னாவை அறியாத வெறியாரே தவிர வேறில்ல.

*பதில்: உங்களுக்கு வெறியாட்டம் மட்டுந்தானே தெரியும். அதனால்தான் பெரியார் எல்லாம் உங்களுக்கு வெறியாராகத் தெரிகிறார்கள், ஸலவாத் சொல்வதன் மூலம் பெருமானாரினதும் அன்னாரது வழித் தோன்றல்களினதும் புகழ் பரவுவதை வஹ்ஹாபிகளால் ஜீரணிக்க முடியாது. அந்த வயிற்றெரிச்சல் தோற்றுவித்த ஒரு கிறுக்குத்தனமான சிந்தனையை இஸ்லாமிய சித்தாந்தமாக அந்த வஹ்ஹாபிய குறுநில மன்னர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்கே உணர்க.*

*பெரியார்-வெறியார்-என்று சந்தத்திற்காக எழுதிய உங்களது வார்த்தை என்னை மேற்படி கருத்தியலுடன் விமர்சிக்க வைத்துள்ளது. இலக்கியத்தில் அழகியல் கருத்தியலைச் சிதைக்கக் கூடாது அதே வேளை அலங்காரங்கள் கருப் பொருளை திசை திருப்பவும்* கூடாது.

72ம் பக்கத்தில் (1) பிரார்த்தனையை விட சிறந்த ஆயுதம் உலகத்தில் ஒன்றுமில்லை என வானொலி முல்லாக்கள் பேசுகிறார்கள். (2) அனைத்தையும் இறைவன் மீது பாரத்தை போட்டுவிட்டு........... என்ற கூற்றுக்கள் மூலம் அல்லாஹ்விடமே கேட்கப்படும் துஆவையும் அல்லாஹ் வின் மீது பாரம் சாட்டுவதையும் கிண்டல் பண்ணுகிறார் இஃது ஈமானைக் கொச்சைப்படுத்தும் பச்சை நாத்திக வாதமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: *வாசகர்களின் கவனத்தை திசைதிருப்பாதீர்கள். செயலுடன் கூடிய பிராத்தனைகளைத்தான் இறைவன் விரும்புகின்றான் என்று தான் சொல்லி வருகின்றோம். பத்றுப் போர் இதற்குச் சிறந்த உதாரணமாகும். நடைமுறை வாழ்விற்கு வித்திட்ட ஒரு மாமனிதர் என் பெருமானார் (ஸல்) அவர்கள் என்று தானே கூறி வருகின்றோம். உங்களால் இதுவைரையில் இறைவனிடம் மாத்திரம் கேட்கப்பட்ட பிரார்த்தனைகள் எதனைச் சாதித்துள்ளன. நயம் இழந்து கொண்டிருக்கின்ற ஆன்மீக சாம்ராஜ்யங்களை பாதுகாக்க உங்களது பிராத்தனைகள் போதுமானதா? இறைவனிடத்தில் பிரார்த்தனையில். மாத்திரம் ஈடுபட்டு பௌதீக பலம் இல்லாமல் பறிபோய் இருக்கும். அல் அக்ஸா பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், ஈராக் பொன்ற நாடுகளை மீட்டுத்தர முயலுங்கள். மஸ்ஜிதியில் ஒன்றுகூடி கைகளை தலைக்கு மேல் உயர்த்தி மின்விழக்குகளை அணைத்து கதறியழுது பிரார்த்தனை செய்து நாம் இழந்திருக்கின்ற இதயமான அல்-அக்ஸாவை மீட்டுத்தாருங்கள். ஆன்மீகத்தையும் லௌகீகத்தையும் பிரிக்க முடியாது என்பதுதான் எம் பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியான நம்பிக்கையாகும்.*

துஆவின் (பிரார்த்தனை) பெறுமதி கட்டுரையாளர் அறியவில்லையா? முஸீபத்துகளை தட்டிவிடக் கூடியதே இந்த பிரார்த்தனை தானே. இது ஹதீஸல்லவா. நிச்சயமாக துஆவும் (பிராரத்தனையும்) ஒரு வணக்கமாகும் என்று நபிகளார் கூறியதாக நுஃமான் இப்னு பீர் (ரலி) அறிவிக்கிறார்கள். (திர்மி. அபூதாவூத், இப்னு மாஜா) துஆ தான் வணக்கத்தின் கரு. அனஸ் (ரலி) (திர்மிதி)

பத்ர் யுத்த சமயம் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கிப்லாவை முன்னோக்கி இரு கரமேந்தி "நீ எனக்கு எதை வாக்களித்தாயோ அதை நிறைவேற்று. மேலும் எனக்கு வாக்களித்தாயே அதைத் தா, இந்த மக்கள் அழிக்கப்பட்டால் இப்பூமியில் உன்னை வணங்கப்படமாட்டாது........"என்று கண்ணீர் மல்க காப்பாளனாகிய அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிய உடனே இந்த குர்ஆன் ஆயத் இறங்கியது. "நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத் தேடிய போது (அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியாக) உங்களோடு இணைந்து (அடுத்து) வரக்கூடியவர்களாக மலக்குகளில் ஆயிரம் (பேர்களைக்) கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என்று அவன் உங்களுக்கு பதில் அளித்தான். (859)

கிண்டல் செய்பவர்கள் சிந்திக்க வேண்டும். நபியவர்கள் பத்ருக் களத்தில் அல்லாஹ்விடம் பிரார்த்தித்ததையும் பிரார்த்தனை புரியாதே. அல்லாஹ்வை நம்பி அவனிடம் பாரத்தைப் போடாதே என்று கூறுபவர் பதில் சொல்வார்களா பத்ர் தந்த பாடத்தை விட்டு விட்டு சபுர் இழந்து கபுர்களிடம் கையேந்தினால் என்ன என்று கேட்பதா? ஈமானின் அரிவரிப் பாடத்தையோ பத்ரு யுத்தம் தந்த படிப்பினையோ தெரியாத ஓர் இளிச்சவாயன்கூட இப்படி சொல்ல மாட்டார்களே.

உங்களைப் போன்ற இழிச்ச வாயர்கள் எல்லாம் ஈமான் பற்றிப் பேச முனைந்ததாலேயே எமக்குள் இந்த 10 வருட காலத்திற்குள் இத்தனை பிளவுகள்.

72 கூட்டங்களாக நீங்கள் சிதறிச் சீரழிவீர்கள் என்று எம் முன்னோர்கள் எம்மைச் சபித்தார்கள் என்று கட்டுரையாளர் கூறுவது தான் வேடிக்கை, அனஸ் பின் மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள். "நிச்சயமாக பனூ இஸ்ராஈல்கள் 71 கூட்டமாக பிரிந்தனர். நிச்சயமாக எனது உம்மத் 72 கூட்டமாக பிரிவார்கள். அவர்கள் அனைத்தும் நரகத்தில் ஒன்றைத் தவிர, அதுவே அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத் (இப்னுமாஜா 3983 ஹாகிம்) நபிகளார் திருவாய் மலர்ந்த ஹதீஸை என் முன்னோர் கூறியதாக அறியாமல் சொன்னாரா? புரியாமல் சொன்னாரா? வேண்டுமென்றே கூறினாரா?

*பதில்: அதில்வகாபிய ஜமாஅத்தாராகிய நீங்கள் தான் சுவர்க்கத்தில் நுழைபவர்கள் என்ற பூரிப்பில் வாழ்கிறீர்கள் போலும். எனவே தான் அடுத்தவர்களை உடனடியாக நீங்களாகவே................*

பக்கம் 74ல் 2500 ஆண்டுகளாக ஓர் எழுத்துப் பிசகாமல் ஹோமரின கவிதைகள் பாதுகாப்பாக இருப்பதாகப் பக்தி சிரத்தையுடன் கூறுகிறார் கட்டுரையாளர். அது அரபுகளிம் தோன்றியிருந்தால் அது சிர்க் என்று அழித்துவிடுவர் என்று குறிப்பிடுகிறார், ஆனால் குர்ஆனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி உங்களுக்குத் தெரியுமா? அது ஹோமரின் கவிதை நூலைப் போல மனிதப் படைப்பல்ல. அந்தக் குர்ஆன் நீங்கள் கிண்டலடிக்கும் அதே அரபுகளிடம் தான் தோன்றியது. ஆனால் உங்கள் ஹோமரின் கவிதைகள் எத்தனை மனித மனங்களில் இடம் பிடித்துள்ளது. அல்குர்ஆன் நீங்கள் கிண்டல் பண்ணிய அதே அரபுகள் தான் தம் மனப்பெட்டகத்துள் பதித்து உயிரினும் மேலாகப் பாதுகத்து வந்தனர். இன்று நாம் அல்லாஹ்வின் வேதம் என்று பெருமைப்படுகிறோமே அது நீங்கள் கிண்டல் பண்ணும் அரபுகள் பாதுகாத்துத் தந்தது தானே, இக் குர்ஆன் எத்தனை இலட்சம் விசுவாசிகள் இன்று கூடப் பாதுகாக்கிறார்கள் மனனமிட்டு மனனத்தை வெறுக்கும் நீங்கள் ஹோமரின் கவிதைகளை எத்தனை பேர் மனனமிட்டுள்ளார்கள் என்று கூற முடியுமா? இதை சவாலாகவே ஏற்றுக் கொள்ளுங்கள். கேவலம் நான் ஹோமரின் பக்தன் அல்லன். சிர்க்கிலே சிக்கி சிர்க்கிலே அழிந்துபோன ஹோமரின் கவிதைகள் எத்தனை பேருக்கு மனப்பாடம். எத்தனை பேரை அது திருத்தி நல்வழிப்படுத்தி உள்ளது கூற முடியுமா?

*பதில்: அவை அதே அரபி வஹ்ஹாபிகள் தான் பெருமானாரின் குடும்பத்தினரின் வீடுகளில் கொண்டிருந்த பொருட்களை அழித்தொழித்தார்கள். மனிதப் படைப்புகள் மீது வஹ்ஹாபி களுக்கு ஏன் இவ்வளவு கோபம். மனிதயியல் சிந்தனைக்குத் தூபமிடுகின்ற கைவினையின் நினைவுச் சின்னங்கள், புலமையின் நினைவுச் சின்னங்கள் அனைத்தும் ஷிர்க்கானால் இந்த கிறுக்கினை எம்மால் நிவர்த்தி பண்ண முடியாது.*

அதே 74ம் பக்கத்தில் சிற்பம், சிலை, கவிதை, மவ்லித் கிதாபு, கல்வெட்டுக்கள். கோபுரங்கள் நினைவுச் சின்னங்கள் பழமை மிக்க இவைகள் (உங்கள் அகராதிப்படி பக்தி சிரத்தையுடன் மனனமிட்டு பூசித்து வழிபட்டு பாதுகாக்கப்பட வேண்டியவை) ஆனால் அவை சிர்க்கைப் பெருக்கும் வர்க்கம் என்று நாங்கள் தர்க்கம் புரிகிறோம்.

*பதில்: நீங்கள் ஒரு நாகரீகம் புரியாத வர்க்கம். வஹ்ஹாபிகள் புரிவது எப்போதும் குதர்க்கம்.*

76ம் பக்கத்தில் கப்ரில் கூடிக் கையேந்தி இறைவனிடம் கேட்காதவர்கள் ஏன் மசூதியில் கையேந்திக் கேட்கக் கூடாது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினவுகிறார். கப்ருகளைத் தவிர மசூதியில் மட்டுமல்ல புனிதமான எந்த இடத்திலும் அல்லாஹ்விடம் கையேந்தலாம். கபுராளிகளிடம் கையேந்தக் கூடாது என்று ஏன் கூறுகிறோம் தெரியுமா? அது சிர்க்கு, குப்ரை ஏற்படுத்தும் செயல், கப்ரில் அடங்கப்பட்டவர் எந்தளவு பெரியாராயிருப்பினும் சரியே, ஏன் தெரியுமா? "இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தஈன்" என்று தொழுகையில் தினம் ஐந்து வேளை 17 முறை கேட்க வேண்டும். அல்லாஹ்விடம் மட்டுமே கேட்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

*பதில்: நீங்கள் தனியாக மஸ்ஜிதுகள் கட்டியும் தனித்தனியாக பிரார்த்தனை (கூட்டு துஆ உங்கள் அகீதாவில் ஹறாமே) செய்தும் பலஸ்தீனை விடுதலை செய்துவிட்டீர்களா?*

இன்னும் எத்தனை சுன்னத் தொழுகை தொழுதாலும் எத்தனை பாத்திஹா ஸூராக்கள் ஓதினாலும் அல்லாஹ்விடம் மட்டுமே. வேறெவரிடமும் கேட்பது மனிதனை நரகுக்கிழுக்கும் சிர்க்காகும்

அவரின் கட்டுரையின் கருவை பட்டியலிட்டு சுருக்குகிறோம்.

1. மாண்டவர்க்கு 3,7,15,30,40,60,100, வருட கத்தம் கொடுக்க ஆதாரமாக கன்பியுஸியஸின் கருத்தைத் தருகிறார்.
2. சிறார்க்கு மனனப் பயிற்சி ஆகாதாம், அத்துடன் அஹதிய்யாப் பாடசாலையைச் சாடுகிறார்.
3. சடங்கு சம்பிரதாயம், பாரம்பரியம் தொல்பொருள், சிலை வணக்கம், உருவச் சித்திரம், முன்னோர் போன்ற பழமைகளைப் பேணிப் பூசித்தல்.
4. மாண்டவரிடம் கையேந்தல், கபுர்வணக்கம் போன்றவற்றை உயிர்ப்பிக்க முயற்சி
5. சியோனிஸத்தை எதிர்க்கும் போர்வையில் சீயானிஸத்தையும் பரப்ப முயற்சி.
6. குர்ஆன் ஹதீஸை எந்த இடத்திலும் ஆதாரம் காட்டாது சிர்க்கில் சீரழிந்த காபிர்களை பெரியார்களின் கூற்றை மட்டுமே ஆதாரம் காட்டுகிறார்.
7. வஹ்ஹாபிஸத்தைக் காரணம் காட்டி அரபுகளைத் திட்டித் தீர்க்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எல்லாவற்றுக்கும் மேலாக இஸ்லாத்துக்கு அப்பாலிருந்தே தம் கருத்துக்களை வெளியிடுகிறார்.

கருத்துக்களைப் புரிந்தோ புரியாமலோ திரித்துக் கூறுவதில் வஹ்ஹாபிகள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை உமது எழுத்துக்கள் இங்கு தெளிவாக்கியுள்ளன. ஜோர்ஜ் புஷ் என்ற அரக்கனுக்கு முத்தமிடுகின்ற மன்னர் அப்துல்லாஹ்வும் அரேபியப் பெண்ணும் நிச்சயமாக சியோனிஸத்தின் எதிரிகள். எனவேதான் உம்மையும் வஹாபிய மன்னர்களையும் அவர்களது முல்லாக்களையும் எவ்வாறு அழைப்பது. மேலும் சியோனிஸம் என்றாலே என்னவென்று தெரியாத நீங்கள் சியோனிஸம் பற்றிப் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவது போலல்லவா? ஆன்மீகம் இல்லாத அறிவும் அறிவில்லாத ஆன்மீகமும் சாத்தானின் இருகரங்களில் ஒரு கரம் போல. நீங்கள் கட்டுரை முழுவதிலும் தெரிகிறீர்கள்.

இறுதியாக இந்தக் குர்ஆனின் குரலைக் கூறி விடைபெறுகிறேன். "(நபியே !) நிச்சயமாக உமதிரட்சகன் தன் வழியை விட்டும் தவறியவர் யார் என்பதை அவன் மிக்க அறிந்தவன். மேலும் நேர்வழியைப் பெற்று விட்டவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்." (6:17)

"திட்டமாக ஜின்களிலும் மனிதர்களிலும் அநேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். (அவர்கள் எத்தகையோர் என்றால்) அவர்களுக்கு இதயங்களிருக்கின்றன. அவற்றைக் கொண்டு (நல்லவற்றை) அவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு கண்களுமுண்டு (எனினும்) அவற்றைக் கொண்டு (இவ்வுலகிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு காதுகளுமுண்டு (எனினும்) அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லவற்றை) செவியேற்க மாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். ஏன் (அவற்றை விடவும்) அவர்கள் மிக அதிகம் வழிகெட்டவர்கள். அவர்கள் தாம் நம் வசனங்களை அலட்சியம் செய்து பராமுகமாகவுள்ளவர்களாவர்." (7:179)

பதில்: சகோதரியே! நம்மிருவரில் யார் அறியாமையிலும் விழிகேட்டிலும் உள்ளார் என்பதை அல்லாஹ் அறிவான். வாசகர்களுக்கும் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியப்படுத்துவான். பத்வா கொடுப்பதில் உங்கள் அணிக்கு அப்படி ஒரு அலாதிப் பிரியம் ஏன்?

மேலும் உங்கள் சிந்தனைக்கு,

01. உங்களது இஸ்லாமியக் கண்ணோட்டம் எல்லோருக்கும் நன்கு புரியும் எதையும் நிராகரிப்பது தான் உங்களது இஸ்லாமியக் கண்ணோட்டமாகும். பகவான் புத்தர் பெருமானின் நிராகரிப்புக் கொள்கை தான் புத்த மதம் இந்தியாவிலிருந்து துடைத்தெறியப்படக் காரணமாயிற்று. அவ்வாறே அரேபிய வஹாபிகளும் இஸ்லாத்தை மத்திய கிழக்கிலிருந்து துடைத்தெறியப்பாடுபடும் யூதர்களுக்கு உதவிக்கொண்டிருக்கிறார்கள். உங்களது அள்ளி வீசவேண்டும், கிள்ளி வீசவேண்டும் போன்ற கருத்தியல் இல்லாத எதுகை, மோனைப் பூச்சாண்டிகள் காலத்தின் தேவைகளுக்குத் தீர்வாகாது. உங்களது கட்டுரைகளுக்கு எந்தவிதத்தில் கருத்தியல் மறுப்புரை எழுதமுடியும். கருத்தியலே இல்லாத உங்களது எழுத்துக்களும், மாக்சிய இலக்கியவாதிகளுடைய எதிர்மறைச் சிந்தனைகளும் உங்களுக்குக் கருத்தியல் ஆகலாம். இவர்கள் எமது முன்னோர்களையெல்லாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி எழுதுவது எதுகை, மோனைகளைக் கொண்டு நையாண்டித்தனம் காட்டுவது, உங்களுக்குக் கருத்தியல் ஆகலாம், ஆனால் எங்களுக்கு அது கருத்தியலாகாகாது. மேலும் கருத்துக்கள் நிறைந்த எனது ஆக்கமொன்று இந்த நூலில் இடம் பெறுகின்றது. நடுநிலை மனதுடன் அதனைப்படித்து தெளிவு பெறுங்கள்,

02. மிலேமியம் கல்வி இஸ்தாபனம் அறிவைப் போற்றுகிற. ஞானத்தைக் கண்ணியப்படுத்துகிறது. ஆனால் வகாபிசம் ஆராய்ச்சி செய்யும் மனோநிலையை குப்ர் என்று நிராகரிக்கிறது. ஞானிகளைத் தூற்றுகிறது. நீங்கள் ஒருபோதும் ஞானநிலையை அல்லது முக்தி நிலையை அடைய முடியாது என்பதற்கு ஞானிகள் மீது நீங்கள் கொண்டுள்ள குரோதம் ஒரு சான்று. வகாபியர்கள் எதிர் மறை அறிவின், உணர்வின் பிண்டம் போன்றவர்கள்

03. இலக்கியத்தின் சுவை உணர்ந்தவர்கள் ஒரு போதும் அதனைக் துப்பிரயோகம் செய்யமாட்டார்கள், ஏனெனில் கவித்துவம் கூட ஞானப்பாதையின் முதற்படிகளில் ஒன்று. ஆனால் கவிநயத்துடன் புகழ்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குச் சிர்க்கு என்பதை எதுகை, மோனை நையாண்டித்தனம் புரிவதில் சில வேளை நீங்கள் மறந்து விடுகிறீர்கள். காரணம் அது எதிர் மறை அறிவை பிரதிபலிப்பதால். மேலும் நீங்கள் கருத்தியல் அற்றவர்கள். ஆழம் உணராதவர்கள், அதனால்தான் உங்கள் நையாண்டி வார்த்தைகள் எதுகை, மோனை என்ற போர்வையில் காழ்ப்புணர்ச்சிகளை உமிழ்ந்து கொண்டிருக்கின்றன. உங்களது மொழிநடை துள்ளி நடந்து. தட்டுதடு மாறும், முரட்டுக்கிழவியைப் போல் முகம் சுளிக்க வைக்கிறது. அதே நேரம் உங்கள் மீது அனுதாபத்தையும் தோற்றுவிக்கிறது. உங்கள் பாமரத்திற்கு மிலேனியம் கல்விஸ்தாபனம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை உத்தியோகபூர்வமாக தெரிவித்துக் கொள்கிறது.

04. இஸ்லாம் என்பது உலகப்பொது வழி. வகாபிசம் இஸ்லாத்தின் பெயரைக் கெடுக்கிறது. அரேபிய மன்னர்களும், வகாபிய முல்லாக்களும் சியோனிசத்துடன் கள்ளத்தொடர்பை பேணுகின்றனர். அதற்காக முஸ்லிம் களை அறிவியலிலிருந்து அந்நியப்படுத்த முனைகிறார்கள் இந்த மாய வலைக்குள் நீங்கள் அகப்பட்டுக் கொண்டீர்கள், இதை நீங்கள் உணர்வதற்கு எமது கட்டுரைகளே போதும், கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல குதர்க்கமாக வாதித்து தோல்வியை ஒப்புக்கொள்ள ஏன் தயங்குகின்றீர்கள்?

சிர்க்கு, பித்ஆ, குப்ர், காபிர் நவ்துபில்லாஹி மின்ஹா மேலும் நாம் எல்லோரும் பாவிகள் இவை சபிக்கின்ற வார்த்தைகள். இவ்வாறு சபிப்பதைத் தவிர உங்களால் வேறு எதுவும் செய்ய முடியாது. மக்களைச் சபிப்பதே பாவம் என்பதை முதலில் ஒத்துக்கொள்ளுங்கள், அத்தோடு இந்த வகாபிய ஆன்மீக வட்டத்திலிருந்து வெளிவர முயலுங்கள். அப்போது தான் நாம் கருத்தியலோடு முரண்படலாம், கருத்து முரண்பாடுதான் அறிவின் வளர்ச்சி, மாறாக எதிர் மறைக் கருத்தை திணிக்க முயலுகிறீர்கள். இந்தக் கருத்துத்திணிப்புத்தான் மிலேச்சத்தனமாகும், அப்போதுதான் அரிஸ்டோட்டில், எட்டமண்ட்பேக், ஹோமா, மாண்டே, வால்டேயர், ரூசோ, கம்பூசியஸ், ஜீஸஸ், பகவான், புத்தர் பெருமான், கிருஷ்ணர், மகாத்மா காந்தி, சங்கரர், ஆதிசங்கரர், சூபிஞானிகள், கபீர்பாய், காஸிம்பாய், பட்டினத்தார். ராமகிருஷ்ணபரமஹம்சர், திருவள்ளுவர், நொம்சொம்ஸ்கி, சாஅதி, கலீல்ஜிப்ரான், சாக்ரடீஸ், பிளேட்டோ போன்ற இன்னோரன்ன அனேக ஞானிகளுடைய வாழ்க்கை வரலாற்றைத் தேடிப்படியுங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தான் உங்களது நேர்முக அறிவை வளர்த்துக் கொண்டு நடுநிலைப் போக்கை உங்களால் கடைபிடிக்க முடியும். மாறாக வகாபிகளுடைய நூல்களுக்கே அடிமையாகி எதிர்மறைவாதம் புரிகின்ற எதிர்மறை அறிவின் ஒரு பிண்டமாகவே காணப்படுவீர்கள். இதனால் தான் உங்களால் கருத்து முரண்பட முடியாத நிலையிலுள்ளீர்கள்.

***எஸ். ஹுஸைன் மௌலானா***
***வெலிகம.***
***0777328743.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பார்வையில் வகாபிசம்

நிகழ்கால அவலத்தைக்கண்டு, இறந்தகாலத்தை முன்னிறுத்தி, எதிர்காலத்தைப்பற்றி கவலைகொண்டு செயல்படுகின்றது மிலேனியம் கல்வி ஸ்தாபனம். மனித இயல்சிந்தனைக்கு ஆதாரங்கள் தேடும் பொழுது எதிலிருந்து உங்கள் தேடல்களை ஆரம்பிக்கப்போகின்றீர்கள். பழமையின் சிறப்பும், புதுமையின் இயல்பும இணையும் பொழுதுதான் அங்கு புதிய பரிணாமமே பிறக்கின்றது. இஸ்லாம் என்பதும் பழமைக் கருத்துக் களில் இருந்துதான் வடித்தெடுக்கப்பட்ட ஒரு தூய நடைமுறை வாழ்விற் கான சித்தாந்தமாக இறையருள் இதை அங்கீகரித்தும் இருக்கின்றது.

ஒரு குறுகிய ஆன்மீகவட்டத்திற்குள் (வகாபிய ஆன்மீக வட்டத்திற் குள்) சுழலாது அது ஆன்மீகம், அறிவியல், அரசியல் போன்ற மானுடத் தேவைகளை அலச வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் எமது ஸ்தாபனம் கருத்துக் கண்ணோட்டமென்ற ஒரு ஆரோக்கியமான ஒரு கருத்தாடல் களமொன்றை ஆரம்பித்தது. ஆனால் எம்முடன் முரண்பட முனைகின்ற எழுத்தாளர்கள் கருத்தியலற்ற வாதப்பிரவாதங்களுக்குள் எம்மைக் சிக்கவைத்து அவர்களு டைய வழமையான வஞ்சிக்கின்ற எழுத்துக்களால் வாசகர்களை ஏமாற்ற எத்தினிக்கும் பொழுது, எமக்கு அவர்களிடத்தில் ஏற்பட்ட அதிருப்தியே கருத்துக் கண்டேணாட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் பாகம் தாமதத்திற்கான காரணமாகும். சட்டத்தரணி மர்சூம் மௌலானா விடமும் என்னிடமும் கட்டுரையாளர்கள் முன்வைக்கின்ற வெற்றுக் கருத்துக்கள், இன்றைய அறிவுலகிற்கு ஏற்புடைய தல்ல. எனவேதான் அவர் தனது மறுப்பை இவ்வாக்கத்தில் ஒரு கடிதத்தின் மூலம் தெளிவு படுத்தியுள்ளார். நானோ கட்டுரையாளரின் மொழியியிலே, எனது பிரதி வாதத்திற்கு அவர்களின் பாணியில் பதிலளித்துள்ளேன். எனவே எனது எதிர்காலக் கருத்தியல் ஆக்கங்கள் அறியப்படாத அரேபியவாக, பல பாகங்களாக வெளிவரவுள்ளன. இவ்வாறு புதியதொரு கருத்துலகம் விரியவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

கருத்துக் கண்டோட்டத்திற்காகப் பேனாவை உயர்த்திப்பிடிக்கும் பொழுது எமக்குள் பல கேள்விகள் உதயமாகின்றன

01. எமது சமூகம் அல்லாஹ் விவகாரத்தில் பிளவுப்பட்டு நிற்பது சமூக நிர்மாணத்திட்டங்களுக்கு அவசியமாகின்றதா ?

02. உலகம் தழுவிய மதமாக இஸ்லாம் மாறிவருவதாகப் பிதற்றிக் கொள்கிறீர்கள், இனத்தில் ஐக்கியமும், ஆன்மீகத்துடன் அறிவியலும் இணைந்த ஒரு சமூகத்தாலேதான் இதை சாத்தியப்படுத்த முடியும். மாறாகக் கண்மூடித்தனமாக அனைத்தையும் எதிர்க்கின்ற ஷிர்க்காளர்களால், நவ்து பில்லாஹி மின்னாக்களால் ஐரோப்பியர்களுக்கு மத்தியில் ஒரு கருத்து மாற்றத்தை ஏற்படுத்தமுடியுமா? நடைமுறைகளால், ஒருங்கிணைந்து செயல்படுகின்ற (Team Work) பண்புகளால் (உலக சகோதரத்துவத்தால் - ஹஜ்) சிந்தனை மாற்றங்களால் மனித மனங்களிலே மாற்றங்களை ஏற்படுத்தி இஸ்லாத்தைப் பரப்புவதா? அல்லது அந்நிய சமூகங்களின் சிலைகளை உடைத்து, கலை வடிவங்களை வன்முறையால் எதிர்கொண்டு [redacted] தாலிபாண் பாணியில் இறந்த உடல்களைப் அவமானப்படுத்தி, தௌஹீதை நிறுவி, அசத்தியக்குரல் பாணியில் தொல்பொருள் அடையாளங்களை (Archological Proof) அழித்து, எமது முன்னோர்களை இகழ்ந்து, பெருமானார் (ஸல்) அவர்களை ஒரு தபால்காரனாகத் தரம் தாழ்த்தி, அன்னாரை ஒரு மகான் என்ற தரத்திற்குத் தகுதியற்றவராகக் காட்டி, இவ்வாறு அன்னார் மீது இருந்த பற்றுதலை (ஹுப்பை)ச் சிதைத்து, எமது ஆன்மீக உள்ளுணர்வுகளை (Spirutual Innerfeeling) கெடுத்து பெருமானார் (ஸல்) அவர்களின் பாதுகாவலனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து மறைந்த அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களை ஒரு நரகவாதியாகக் கருத்துரைத்து, ஏளனப்படுத்தி, சவூதியின் கொடியில் லா இலாஹ இல்லல்லாஹு" முகம்மதுர் ரசூலுல் லாஹ்'' என்ற தாரக மந்திரத்துடன் ஒருவாளையும் கீறி, இஸ்லாத்தை "ஒரு ராணுவ மதம்'' என்ற வில்சன் சேர்ச்சிலின் கருத்தை உயிர்ப்பித்து, மேலும் மசூதிகளுக்குப்பக்கத்தில் நபிவழி மசூதிகட்டிப் பிளவுபட்டு, வன் முறை புரிந்து, காவல்நிலையம் சென்று, அந்நியர் இடத்தில் நியாயம் கேட்கும் உங்களது தௌ சிந்தனைதானா இதனைச் சாதிக்கவல்லது ?

03. இன்று மேற்கினுடைய நவீன தீமைகளை (யூதத் தீமைகளை) முகங்கொள்வதற்கு சியா, சுன்னிப்பிளவுகள் அவசியமாகிறதா? கால மாற்றம் கருத்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். காலத்திற்கு ஏற்பக் கருத்து மாற்றத்தை ஏற்படுத்தாத சமூதாயம் அழிந்து விடும் என்ற நியதியும் இருக்கின்றது. இவ்வாறிருக்க உங்களது கப்ருச்சீர்திருத்தம், இறந்த உடல் சீர்த்திருத்தம், சிர்க்குச் சீர்திருத்தம், விரல் துனிச் சீர்திருத்தம் என்பன யூதனின் நவீன தீமைகளை வென்று பறிபோய் இருக்கின்ற எமது இதய பூமியாகிய அல் அக்ஸா, பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான் ஈராக் போன்ற நாடுகளை மீட்டுத்தர வழிவகுக்குமா? நீங்கள் எல்லாத் துறைகளிலும் பேதங்கண்டு, வேறுபட்டுப், பிளவுபட்டு நிற்கின்றீர்கள், ஏன் நீங்கள் ஒன்றுவிட்டு ஒருங்கிணைந்து, உயர்வதற்குப் பாடுவடுவதில்லை. இந்த ஒற்றுமைதான் ஒரு சமூகத்தின் மூலதனம்.

04. ஓர் இனத்தைச் சேர்ந்த உயிர் தேவையை முன்னிட்டு, சூழ் நிலையின் தாக்கத்தாலும் இன்னோர் உயர் நிலை உயிராகப் பரிணமிக்கி றது என்பது பரிணாம வளர்ச்சிக் கோட்பாடாகும் (Theary of Evulution). இன்று மத்திய கிழக்கு நாடுகள் சுமார் 50 வருட காலமாக மேற்கினால் இம்சைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் தான் ஈரானி யச் சமூதாயம் நவீன தீமைகளுக்கு எதிராக எழுச்சியடைந்திருக்கின்றது.? இது உங்களது சிந்தனைகளில் சிர்க்காகின்றதா? அதனால் தானா ஈரானியர்கள் சியாக்கள் காபிராகிறார்கள்? ஒரு தேசத்திற்கு ஒரு தொலை நோக்கு இல்லாமல் போனால் அற்பப் புத்தி கொண்டவர்கள் தங்கள் கைவரிசைகளக் காட்ட ஆரம்பித்து விடுவார்கள். எனவே தான் அற்பப் புத்திக் கொண்ட உலகக் கொள்ளைக்காரர்களான (World Robbers) ஜோஜ் புஷ், கொண்டளிசாரைஸ், ஓல்மெட் ரம்ஸ்பீஸ்ட், வோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவிச், டிக்சினி, பந்தர் சுல்தான் போன்றவர்கள் அரேபியா தேசங்களிலே நாளொன்றுக்குச் சுமார் 200 பேர் வீதம் கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை எழுதிக் கொண்டிருக்கின்ற பொழுது ஓல்மட்டின் விமானம், (F16) பாலஸ்தீனர்களின் 167 இன்னுயிர்களை அழித்திருக்கின்றது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பலாபலன்களைக் கொண்டு சேர்ப்பதற்கு அறிவியலும், ஆன்மீகமும், சங்கமிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் என்பதை உணர்த்திய இன்றைய நவீனகாலத்தின் மகான் இமாம் ஆயத்துல்லா குமைனி என்றால் அது மிகைப்படாது. எனவே இந்த மகானுடைய அரசியல் தொலை நோக்கு ஆன்மீகத்திற்கு முரணானதா? அல்லது எமது பெருமானார் (ஸல்) அவர்களின் சிந்தனையுடன் அது முரண்படுகிறதா? இது போன்ற அறிவியல் சார்ந்த நடவடிக்கைகள் தான் மனிதனுக்குப் பாதுகாப்பானது என்பதை 1979ம் ஆண்டில் ஈரானிய இஸ்லாமியக் குடியரசாக வடிவமைத்து மறைந்து சென்றுள்ளார். இது வெறும் மத்திய கிழக்கிற்கான கோட்பாடு மாத்திரமல்ல முழு மனித சமூதாயத்திற்காகவும் வடிவமைக்கப்பட்ட, மானுட மேன்மைக் கோட்பாடாக பரிணமிக்குமென உறுதியாகவே நம்ப முடியும்.

05. சுயநலமாக உள்ளது தீயொழுக்கமெனவும், பொது நலமாக உள்ளது நல்லொழுக்கமெனவும் கூறப்படுகிறது. முழுக்க சுயநலமற்ற, தனக்கென்று எதையும் செய்யாத, தனக்கென்று எதையும் பேசாத, இமாம் ஆயத்துல்லா குமைனி அவர்களை நினைத்துப்பாருங்கள். அதே வேளையில் வல்லாதிக்கவாதி ஜோஜ் புஷ்ஷை முத்தமிடுகின்ற மன்னன் அப்துள்ளாவையும் நினைத்துப்பாருங்கள். அத்தோடு அரேபியா தேசங்களை ஆக்கிர மித்திருக்கின்ற சர்வாதிகார மன்னர்களையும், ஈரானிய ஆட்சியாளர்களான இமாம் அலி குமைனி, பெருந்தலைவர் அகமட் நஜாத் போன்ற புனிதப் பிறவிகளையும் நினைத்துப்பாருங்கள். வெள்ளை மாளிகைக்கு அந்த மண்ணின் வளங்களை தாரைவார்த்துக்கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த மன்னர்கள் தானா எமது இரண்டு ஹரமைன்களின் காவலர்கள்? இந்த அநீதி அகல வேண்டும். இதை ஈரானியர்களால்தான் சாதிக்க முடியுமென நம்புகின்றேன் இன்ஷா அல்லாஹ்

06. விபச்சாரம் பாம்புக் கடியை விட மோசமானது. பாம்புக்கடி உடலை மாத்திரம் அழிக்கின்றது. விபச்சாரம் உடலையும், உள்ளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், ஆன்மாவையும், அழிக்கின்றது. இன்று மத்திய கிழக்கு நாடுகள் வகாபிய மன்னர்களால் விபச்சார மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு துபாயையும் ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளமுடிகிறது. எல்லா நாடுகளையும் சேர்ந்த விபச்சாரிகள் அங்கு கூவி விற்கப்படுகிறார்கள். அங்கு வெள்ளிக்கிழமை விடுமுறை தினம். வியாழன் மாலை முதல் விடுமுறை ஆரம்பமாகிறது. மாலை வேளைகளில் அரேபிய இளைஞர்கள் நகரப்புறங்களை நோக்கி பயணப்பட ஆரம்பிக்கின்றனர். வெள்ளி இரவு முழுவதும் அவர்கள் உல்லாசமாக மது, மாதுவுடன் வாழ்கின்றனர். காலை 6.00 மணியளவில் வீடு சென்று உறங்கி மாலை 4 மணியளவில் தான் விழித்துக் கொள்வது அங்கு வழக்கமாக்கப்பட்டுள்ளது. எனவே வெள்ளி இரவு என்பது அனேக மான அறபு நாடுகளில் கலியுகமாகவே கழிகிறது. இவ்வாறு விபச்சாரமயப் படுத்தப்பட்ட ஒரு சமூக அமைப்பின் பின்னணியில் யூதத்தீமை ஒழிந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறுதான் அரேபியா முழுவதும் ஐரோப்பிய மயமாக்கப்பட்டு வருகிறது. ஐரோப்பிய மயமாக்கல் எனபதே விபச்சார மயமாக்குதலும், ஆயுத மயமாக்கு தலுமேயாகும். வெளிநாட்டுக்காரர்கள் இவ்வாறுதான் அந்த மண்ணை வழிகெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனை அங்கு வாழ்கின்ற வகாபிய முல்லாக்கள் கண்டுகொள்வதே இல்லை.

உலகிலேயே தனிச்சிறப்புடைய அரேபியர்கள் ஒழுக்க நெறியை மூச்சாகக் கொண்டவர்கள். இவர்கள்தான் இன்று ஒழுக்கக்கேடானவர்களாக மாற்றப்பட்டு வருகின்றார்கள். ஒழுக்கக்கேடு ஆன்மாவையும், ஆண்மையை யும் அழிக்கும். இது போராட்டக் குணங்களைச் சிதைக்கும். இவ்வாறான சமூகத்தை ஆயூதபலத்தினால் நீண்ட காலத்திற்குக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியுமென யூதர்கள் கருதுகிறார்கள். இங்கே தலை மைத்துவப்பண்புகளை இழந்த, வாழ்கின்ற தகுதிகளையும் இழந்த ஒரு சமூகத்தை யூதர்கள் வடிவமைப்பதில் வெற்றி கண்டுள்ளார்கள். புனிதம் (Holy) என்ற வார்த்தைக்கே இங்கு இடம் இருப்பதில்லை. இவ்வாறுதான் அரேபியர்கள் விபச்சார மயப்படுத்தப்பட்டு, தீமையை உணராது திசைதிருப் பப்பட்டு, ஆக்கிரமிப்பிற்கும் அழிவிற்கும் உள்ளார்க்கப்பட்டு வருகிறார்கள். இது தான் உண்மையிலே இறைவனுக்கு எதிரான இன்றைய காலத்தினுடைய பாரிய குப்ராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. ஆத்மீகம் பிறந்தது கிழக்கேதான். மேற்கில் அல்ல. சூரியன் உதயமாவதும் கிழக்கேதான். இங்குதான் ஆராய்ச்சி பிறந்தது. விஞ்ஞானம் தோன்றியது தத்துவம் வளர்ந்தது. மெய்யடியார்கள் அவதரித்தார்கள். இறைவனின் திருத்தூதர்கள் தோன்றினார்கள். கிழக்கத்தியவர்கள் வாழ்ந்த அந்தப் பொற்காலத்தில் மேற்கே வாழ்ந்தவர்கள் இருளில் தவித்துக் கொண்டிருந்தார்கள். பெண்ணுக்கு ஆத்மா உண்டா? இல்லையா? என்று அவர்கள் குழம்பிக்கொண்டிருந்த வேளையில் தான் இஸ்லாம் பெண்ணுக்கு சம உரிமை வழங்கியது. கணக்கு என்றால் பொருள் என்ன? என்று மேற்கு நாட்டவர்கள் கேட்டுக் கொண்டிருந்த பொழுதுதான் உலகப் பெரும் கவிஞர் உமர்கையாம் அல்ஜிப்ரா என்னும் அட்சர கணிதம் மூலம் அரும் புகழ்பெற்றார். திரு நபியின் அருமைப்புதல்வி பாத்திமா நாயகி அவர்களை மணந்த ஹசரத் அலி (ரலி) அவர்களின் வழித்தோன்றல் என்று பெருமகன் சாஅதி அவர்களைக் குறிப்பிடுகிறார்கள். லைலா மஜ்னூான் என்ற அமரகாவியத்தை எழுதிய கவிஞர் நிஜாமியும் பராசீகத்தில் பிறந்தவர்தான். இன்னும் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். இவ்வாறான அளப்பரிய பழமை வாய்ந்த எமது ஆற்றல்களை நாம் பயன்படுத்திக் கொள்ளாது தவறிவிடுகின்றோம். இவை நான் நேசிக்கும் மானுடத்தின் மாபெரும் செல்வங்களாகும்.

மேலும் ஜாபிர் இப்னு ஹையான் இரசாயனவியலுக்கும், இப்னுசீனா மருத்துவத்திற்கும், இப்னு பதூதா உலகப் பயணத்திலும், இப்னு கல்த்தும் வரலாறு தொடர்பாகவும் முன்னோடிய இந்த மகான்கள் எல்லாம் சூபிஞானி கள்தான். இவர்கள் சிந்திக்கின்ற, ஆராய்கின்ற மனோநிலையில் உள்ளவர் கள், உலக நாகரீகங்களுக்கு அதிக பங்களிப்பு வழங்கியவர்கள். இவர்கள் நாகரீகங்களை கட்டியெழுப்பிய அதே வேளையில் முல்லா ஓமர், பில் லேடன், சவுத் மன்னன், மொஹமட் அம்றிப்னு வகாப் போன்றவர்கள் நாகரீகங்களுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள். வன்முறையில் நம்பிக்கை கொண்டவர்கள். எதையும் அழிப்பது தான் இவர்களது கலாசாரம் ஆகும். இவர்களால் வடிவமைக்கப்படு கின்ற ஒரு சமூக அமைப்பை அல்ல, ஒரு மனிதக் கும்பலையே வகாபிகள் விரும்புகின்றனர். சிறுக்கென்று கூறிக்கொண்டு சீறி யெழுந்து தாலிபான்கள் கலை வடிவங்களை வன்முறையால் திர்கொண்டதை நாம் ஆப்கானிஸ்தானில் பார்க்கக்கூடியதாக இருந்தது. பிற்போக்கு வாதம் அந்த அளவுக்கு அங்கு தலைவிரித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடியது. ஆனால் சூபீஞானிகள் சமூகங்களின் கலாசாரங்களுக்கு எதிராக வன்முறையால் பரிகாரம் தேடியதாக வரலாறே கிடையாது. ஆன்மீகத்துடன் அறிவியலையும் இணைத்துச் செயல்படுகின்ற ஒரு முற்போக்கான பண்புப்பதிவுகளை விட்டுச் செல்பவர்கள் தான் சூபீஞானிகளாகும்.

மதம் மக்களுக்கு அபின் போன்ற நாஸ்திகப் போதனை களைப் பயன்படுத்தி, கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட கால் மாக்ஸ், லெனின் போன்ற யூதர்கள் மிகவும் திறமையாக தங்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். உது மானிய கிலாபத்தைத் துண்டாடிய லோரன்ஸ் (பார்க்க **Lorans of Arabia**) போன்ற ,யூதச் சிந்தனையாளர்கள் இஸ்லாமியர்களை பிளவுப்படுத்தவதற் காக ஆன்மீக முரண்பாடுகளை தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டனர். அதேவேளை ஐரோப்பாவை வழிகெடுத்த நாஸ்தீகக் கருத்துக்கள் இஸ்லாமிய நாடுகளில் அதிக செல்வாக்கைப் பெறாததால் “வகாபிசம்” என்ற நிராகரிப் புக் கொள்கையை முன்னெடுத்துச் சென்றனர். (பார்க்க ஹம்ரியின் டயரி)

இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் உள்ள தொடர்பை உடைத்தெறிவதற்கு சூபீஞானிகள் தான் தடையாக இருப்பதாக யூதர்கள் கருதினர். நாஸ்தீகம் ஐரோப்பாவில் செய்த அதே வேலையை இஸ்லாமிய நாடுகளில் அது இலகுவாகச் செய்து விடாது என்பதை யூதர்கள் அறிந்திருந்தனர். இதற்கு சூபிஞானிகள் தான் காரணமெனத் தெரிந்து கொண்டனர். சூபித்துவப் பண்புகள் தான் பலமான ஆன்மீக ஆற்றலையும், அறிவியலையும் கொண்ட தாக இருந்தது. இது அரேபிய தேசங்களை பஹ்ரைன், சவூதி, குவைத், ஈரான், ஈராக், டுபாய், கட்டார், ஓமான், லிபியா, துருக்கி போன்ற செயற்கை தேசங்களை உருவாக்கப் பெருந்தடையாக இருந்தது. இன்று ஈராக்கை யூதர்களின் நலன்களுக்காக பல துண்டுகளாகத் துண்டாட வகாபிய தேசங்கள் துணை நிற்கின்றன.

ஒரு தேசத்தின் கலை, கலாசார உறவுகளை பேணிக் காக்கின்றவர்களும் சூபீஞானிகள் தான். சிங்களக் கலை,கலாசார,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுக் கூறுகளால் கவரப்பட்டிருந்த இஸ்லாமியப் பெண்மணி களை தலைப்பாத்திஹா போன்ற காவியம் மூலம் இஸ்லாமிய சூழலுக்கு இழுத்துச் சென்றவரும் மாப்பிள்ளை லெப்பை ஆலீம் போன்ற சூபீஞானிகள் தான். மௌலூது போன்ற காவியங்களும் தௌஹீதுக்கும் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றது. இறை நம்பிக்கையற்ற ஒரு சூழலில் இறைவன்பால் மக்களைக் கவர மௌலூது போன்ற காவியங்கள் உதவியிருக்கின்றன. இந்தக் காவியத்தை வடிவமைத்தவரும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள்தான். கலை நயம் கொண்ட மனிதர்களால்தான் இவ்வா றான சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ் நாட்டில் இறை நம்பிக்கை யற்ற ஒரு சமூதாயத்தை ஓரிறைவன்பால் அழைப்பதற்காக திருவள் ளுவர் போன்ற மகான்கள் தோன்றி "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவான் முதற்றே உலகு" என்று குரல் கொடுத்ததும் முழு சமூதாயமுமே ஓர் இறைவன் பால் இணைந்தது. எனவே தௌஹீ துக்கு பெரும் பங்களிப்பு திருவள்ளுவராலும் வழங்கப்பட்டிருக்கின் றது. இவ்வாறான மாபெரும் மனிதர்கள் தோன்றி ஒரு யுகத்தின் சூழலுக்கும், இயல்பிற்கும் தேவையான பழக்கவழக்கங்களை உருவாக்கி அவர்களை வழிநடாத்திச் சென்றவர்களும் சூபீஞானி கள் தான்.

இவர்களுக்குத்தான் மனித சமூதாயத்தை தன்பால் இழுத்துச் செல்லும் ஆற்றல் இருக்கின்றது. இந்த ஆற்றல்களை உடைக்கின்ற காரணிகளாகத்தான் வகாபிகள் பித்ஆ, சிர்க்கு, குப்ரு, நவ்துபில் லாஹிமின்ஹா போன்ற கெட்டவார்த்தைகளைப் பயன்படுத்த ஆரம் பித்தனர். முகியத்தீன் அப்துல் காதர் ஜெய் லானி போன்ற சூபீ ஞானிகளின் உலக பங்களிப்புக்களை இங்கு விபரிக்க முடியாது. இன்ஷா அல்லாஹ் வேறொரு சந்தர்ப்பத்தில் ஆராயலாமென உத்தே சித்துள்ளேன். இவ்வாறு நாம் உலகப் புத்தகங்களையெல்லாம் புரட்டுவதால்தான் தவறானவர்களாகத் தெரிகின்றோம்.

பொருள் உலகம் + விபச்சாரம் + நாஸ்திகம் = உங்களு டைய மத்தியகிழக்கு மன்னர்களின் **Kingdom** என்பதை எல்லோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் அறிவார்கள். **International Jew** என்ற ஹென்றி போட்டின் (**Ford** கார் உற்பத்தியாளர்) ஒரு நூலில் இது விரிவாக ஆராயப்பட் டுள்ளது. எனவே சியோனிசத்திற்கும், வகாபிசத்திற்கும் நெருங்கிய உறவுண்டு என்பதில் ஐயமே இல்லை.

இறைவனுடைய பாதையில் இறந்தவர்கள் மரணிப்பதில்லை என்பது குர்ஆன் வாக்கு. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்தார், வாழ்ந்தார், மறைந்தார், அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் எதுவுமில்லை. வெறும் எலும்புக் கூடுகள் தான் இருக்கின் றன அற்புதங்கள் இல்லாத இந்த வெறும் குழியை இஸ்லாமியர்கள் தரிசிக்கின்றார்கள் என்று யூதர்கள் கூறுகிறார்கள். இவ்வாறுதான் எம் பெருமானாரை யூதர்கள் இழிவுபடுத்துகின்றார்கள். எனவே யூதர்கள் யார் என்பதை எம்மால் இனங்காணமுடிகின்றது. அதே வேளையில் எமக்குள் இருந்து கொண்டு மிம்பர்களை அபகரிக் கின்ற தௌமுல்லாக்களும் என்ன கூறுகிறார்கள்? சாதாரண மனிதனாகப் பிறந்து, வாழ்ந்து மறைந்த தபால்காரனின் தாய், தந்தையர்கள் கூட காபீர்கள் என்றும், அன்னாரின் பாதுகாவலரான அப்துல் முத்தலிப் (ரலி) அவர்கள் நரகவாதி என்றும் விவாதிக்க ஆரம்பித்துள்ளனர்.

மேலும் ஒரு தபாற்காரனை நினைவு கூறுகின்ற பிறந்த தின விழாக்கள் எதற்கு? என்று கேட்கின்றவர்கள் பித்ஆ பாட்டும் பாடுகின்றார்கள். இவ்விதமாக எமக்கிருந்த ஆன்மீக உள்ளுணர்வு களை வகாபிகள் சிதைக்கிறார்கள். மேற்கில் (ஐரோப்பாவில்) ஆங்கிலேயரின் ஆன்மீக உள்ளுணர்வுகளை சியோனிஸம் எவ்வாறு சிதைக்கிறதோ அவ்வாறே இன்று இஸ்லாமியர்களின் ஆன்மீக உள்ளுணர்வுகளை வகாபிசம் சிதைத்து வருகின்றது. வகாபிசமும் சியோனிசமும் சாத்தானின் இருகரங்களாகவே மத்திய கிழக்கு முழுவதும் செயல்பட்டு வருகின்றது. இவ்வாறுதான் மத்திய கிழக் கில் பண்பாடுகள் சிதைக்கப்பட்ட சமூகங்களை உருவாக்குவதில் சியோனிசம் வெற்றி கண்டு வருகிறது. ஆனால் ஈரான் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றது. இதுதான் வகாபிகளின் சீற்றத்திற்கு முக்கிய காரணமாகும். பண்பாடுதான் அதிர்ச்சிகளைத் தாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடியென என்பதை யூதர்கள் நன்கு அறிந்து வைத்திருக் கின்றார்கள் (பார்க்க ஹிட்லரின் மெயின் கேம்ப்)

கடந்த காலம் திரும்பி வந்து நிகழ்காலத்தைப்பார்ப்பது போல உங்களது கருத்துக்கள் பிரதிபலிக்க வேண்டும். மனிதன் நல்லதைச் செய்யச் செய்ய அவனிடம் நல்ல பண்புகள் வளர்கின்றன. தீயபண்புகள் மறைகின்றன. மாறாகத் தீயதையே சிந்தித்து, தீயதையே எழுத முனைகின்றவர்களின் பண்புகள் காமுகமாக, வன்முறையாக, மதவெறி யாக, ஒருபக்கச் சார்பாக வெளிவரும். எப்பொழுதும் எச்சரிக்கைகளும், சாபங்களும் அங்கு நிறைந்திருக்கும். சந்தோசப்படுத்துவதையும், பயங்காட்டு வதையும், இவர்கள் இலக்காகக் கொண்டிருப்பர். இதற்காக சிர்க்கு, குப்ரு, பித்ஆ, நவ்துபில்லாஹி மின்ஹா போன்ற கெட்டவார்த்தைகளை அதிகம் பயன்படுத்திக்கொள்வர். சுவர்க்கம், நரகங்களை இதற்கு இவர்கள் உரத்து உச்சரிப்பர். மேலும் நிரந்தரத் தண்டனைக்கு ஆளாகி விடுவீர்கள் என்று எச்சரிப்பர். நிரந்தரத் தண்டனை கூட நியாயமாகுமா? என்று கேட்கவே எமக்கு இப்பொழுது தோன்றுகிறது. ஆசீர்வாதம் என்ற சொல்லுக்கு சிர்க்கென்ற ஒரு பொருளும் அங்குண்டு. அவர்களது பேனாமுனைகளில் கருத்தியலே வராது. (மாதாந்த அசத்தியக் குரல்களை ஊன்றிப்பார்க்கவும்) இவ்வாறான எழுத்துக்களிலும், கருத்துக்களிலும் இளைய தலைமுறைகளினது உளவியலுக்கு என்ன தீனி இருக்கின்றது ? எதிர் மறை அறிவும், எதிர்மறை உணர்வுகளும் சாவைவிடக் கொடியது. என்றே கூறுகிறார்கள். எனவே தான் உங்களுக்கும், சீர்திருத்தங்க ளுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றன என்று கேட்க விரும்புகின் றோம். இறைவனே நீதான் அறிவாய்? எச்சரிக்கை செய்வது, பயம் காட்டுவது, சபிப்பது, இழிவுபடுத்துவது, முன்னோர்களின் சிறிய தவறுகளை காம லீலைகளாக மிகைப்படுத்தி சித்திரித்து எழுதுவதெல்லாம் சீர்திருத்தம் தானா? இதுதானா தவ்ஹீதுக்கு நாம் செய்கின்ற பணி. குர்ஆனை கையிலேந்துகின்ற நீங்கள் எந்தக் குர்ஆனிலிருந்து [redacted] இந்தக் கழிவுக் கருத்துக்களைப் பொறுக்கி எடுக்கிறீர்கள். அசத்தியக் குரல்காரர்களே கூறுங்கள்.

அன்பினாலும், பண்பினாலும் இறைவனின் திருப்பொருத்தத்தை அடைவது தான் சிறந்த வழியாகும். இதைத்தான் மிலேனியத்தாரும் செய்து வருகிறார்கள். அல்லது அசத்தியக்குரல் மொழியில் பேசுவதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? இவர்கள் கூறுவதுபோல் காமுகக்கருத்துகளால், வன் முறைகளால், ஏளனத்தால், அனைத்தையும் எதிர்மறையாக நோக்குகின்ற பண்புகளால் இறைவனின் திருப்பொருத்தத்தை அடைவதா ? இவர்களுக்கென்றே ஒரு சமூகம் அவர்களுக்குள்ளே இருக்கின்றதா ?

உலகிலேயே சக்தி வாய்ந்த ஒரு மாமனிதனை பெருமானார் (ஸல்) அவர்களை ஒரு சாதாரண அதாவது ஒரு தபால் காரனாக, ஒரு பலவீனமான மனிதனாக (யூதர்கள் சித்தரிப்பது போல்) சித்தரிக்கின்றவர் களும் நீங்கள் தானே? ஒரு உத்தமத்தாய், தந்தையினருக்குப் பிறவி எடுக்கும் பிறவிகளின் சிந்தனைகள் நிச்சயமாக உத்தமாகவே இருக்கும என்பதில் ஐயமே இல்லை.

ஒரு உத்தமத்தாயின் உண்மைச் சம்பவம் இது. ஒரு சினிமா வசனம் இவ்வாறு வருகிறது. அது சிந்தனைக்குரிய வசனம் என்பதால் அதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். பாகிஸ்தான் ராவல்பிடிண்டியைச் சேர்ந்த மொகமட் தல்ஹா என்ற ஒரு இளைஞன் தனது இரண்டு கண்களையும் பிறவியிலேயே பார்வை இழந்த நிலையில் சென்னை ஆஸ் பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்படுகின்றான். அப்பொழுது இறக்கும் தறுவாயில் இருந்த சென்னை மைலாப்பூரைச் சேர்ந்த மரகதம் வெங்கடேசன் அம்மா அவர்களின் இரு கண்களையும் அச்சிறுவனுக்குத் தானம் செய்யும் படி கட்டளையிடுகின்றார். கண்மாற்றுச் சிகிச்சையில் சிறுவனுக்குப் பார்வை வருகின்றது. பின்பு அவன் தன் குடும்பம் சகிதம் பாகிஸ்தான் சென்று விடுகின்றான். இது சென்றவருடம் சென்னை ஆஸ்பத்திரி ஒன்றில் நடந்த உண்மைச் சம்பவமாகும். "வாழ்த்துக்கள்" என்ற சினிமாவில் முன்மொழியப் படுகின்ற வசனம் இவ்வாறு வருகிறது. முன்பு அந்த இரண்டு கண்களும் பகவத்கீதையைப் படித்தன. இப்பொழுது அவை குர்ஆனைப்படிக்கின்றன. கண்களுக்கு மதபேதம் கிடையாது. அது எத்தகைய கண்களுக்கு? உத்தமத்தாயின் கண்களுக்குத்தான் அந்தத் தகுதி இருக்கின்றது. எனவே ஊடகங்கள் தான் சமூகத்தில் பெரும்மாற்றங்களை ஏற்படுத்தவல்லன. அதிலும் சினிமா என்பது பெரும் முழக்கத்தையே சமூகத்துக்குள் ஏற்படுத்தவல்லது. சினிமாவை முழுமையாக எதிர்க்கின்ற முல்லாக்களின் உளவியலுக்கும் இங்கு தீனி இருக்கின்றது. இவ்வாறு முற்போக்காக எழுதுவதால் தான் நாம் உங்களுக்கு தவறானவர்களாகத் தெரிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் துரதிஷ்டவசமாக எமக்குள் நுழைந்திருக்கின்ற இந்தச் சிர்க்குச் சீர்திருத்தம் மனித விழுமியங்களுக்கெதிராக விடப்பட்டிருக்கின்ற பாரிய சவாலாகவே கருத வேண்டியுள்ளது. புரிந்தோ, புரியாமலோ அனைத்தையும் நிராகரிக்கின்ற இந்த சிர்க்குச் சிந்தனை மனித இயலுக்கே விடப்படுகின்ற பாரிய தூரோகமாகும். காரணம், வாழ்ந்து மறைந்த எம்முன்னோர்களின் பழைய உறவின் சின்னங்கள் எதுவுமே இருக்கக் கூடாதென பாடுபடுகின்றீர்களே, இது தொடர்பாக ஒரு விரிவான ஒரு கருத்துரை அறியப்படாத அரேபியாவின் இரண்டாம் பாகத்தில் இடம் பெறவிருக்கின்றது.

உலகக் கொள்கைக்கு உரமிட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் வன்முறைகளை விரும்பினாரா? அன்று அவர் யூத, கிறிஸ்தவ சிலை வணங்கிகளுக்கு மத்தியிலே ஒரு பரிணாமக்குரலாகவே அவதரித்தார். மாறாகச் சிலைகளை, அடையாளங்களை, கலாச்சார முதுசங்களை, கலைவடிவங்களை வன்முறையால் எதிர்கொண்டாரா ? அடுத்தவர்களை வாழவிடாது தடுக்கின்றவர்களாகவா பிறவி எடுத்தார் ? எப்பொழுதும் பண்புள்ளவர்கள் மற்றவர்களும் வாழவேண்டும் என்றே ஆசைப்படு வார்கள். இவ்வாறு சாதாரண பிரவியாக அல்லது அசாதாரண பிரவியாகவா பெருமானார் அவர்கள் அவதரித்தார். இதனால்தானா அன்னாரது பிறந்ததின விழாக்களை தடைசெய்து வருகிறீர்கள். கூட்டு நிகழ்வுகள் கூடாது. கூட்டுத்துவாக்கள் கூடாது. நவீன தீமைகளுக்கு எதிராக ஈரான் எழுச்சியடை யவே கூடாது என்று நீங்கள் சொல்வதெல்லாம் இப்பொழுது எங்களுக்குக் கூடாததாகவே தெரிகிறது. மேலும் ஒரு கௌரவ உணர்வைப் போற்றி வளர்ப்பது கூடாதா ? விழாக்களில் பேசப்படுகின்ற உற்சாகமொழிகள், நல்வாழ்த்துக்கள், ஆசிகள் அனைத்தும் நிச்சயமாகப பித்ஆ ஆகாது என்பது எமது துணிவான கருத்தாகும். இவ்வாறு நாம் முற்போக்காக எழுதுவதும் உங்களுக்கு கூடாது என்பது எங்களுக்கு நன்கு தெரியும்.

ஆசைக்காட்டி, எச்சரிக்கை செய்து, பயங்காட்டி, சபித்து, அவமானப் படுத்தி எழுதும் உங்களது பாணியை மாற்றி அமைத்துக் கொள்ளுங்கள். சபாத்திற்கு இருக்கின்ற வலிமையைவிட ஆசீர்வாதற்கு உண்டு என்பதை உணர முற்படுங்கள். எமது முன்னோர்கள் நீண்ட தொலைவுவரை இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு முன்னெடுத்துச் சென்றார்கள் என்பதை ஞானிகளின் வரலாறு களிலிருந்து கற்றுணர்ந்து கொள்ளுங்கள். கூடாது, என்று ஒரு குழந்தையை யும் வளர்க்க முற்படாது கூடும் என்று கூறி வளர்க்க முற்படுங்கள். இவ் வாறான நேர்முக அறிவினால் சிந்திக்கின்ற, ஆற்றல்மிக்க ஒரு இளைஞனை எம்மால் உருவாக்க முடியும். மாறாக எதிர்மறை அறிவினால் சிந்திக்க முடியாத மனிதப்பிண்டங்களைத்தான் உருவாக்க முடிகிறது . இவ்வாறு சமூகம் சிந்திக்காத வரையில் அது உங்களுக்குப் பொற்காலமாக அமைய லாம். சமூகம் சிந்திக்க முற்பட்டவிட்டால் நீங்கள் உங்கள் சமூக சீர்திருத் தங்களிலிருந்து ஓடிவிடுவீர்கள். இது உறுதி. உங்களது சமயப்பாடசாலை களும் இதைத்தான் செய்து வருகின்றது என்று நாம் கூறிவருகின்றோம். எனவேதான் மாற்றுக்கருத்துக்களை ஏற்க முடியாத வகாபியக் குஞ்சுகள் ஆன்மீகக் குண்டர்களாகக், கிராமம் தோறும் மாறிவருகிறார்கள்.

ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அனைத்து சமூகங்களின் உணர்வுகளை வென்றவராக கருத்து மாற்றங்களினுடாகவே இஸ்லாத்தை நிறுவினார். 1400 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தைக் கட்டியெழுப்பக் காபிர்களுக்கு மத்தியில் தெய்வீகச் சவால்களை இவ்வாறுதான் எதிர் கொண்டார். ஏனெனில் இன்றும் இஸ்லாத்தைப் பாதுகாக்க இதை இவ்வாறு தான் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. ஏன் யூதத்தீமைகளிலிருந்து மத்திய கிழக்கை மீட்டெடுப்பதென்பது மிகவும் இலகுவானதல்ல. அத்தீமை இன்று சியோனிசமாக, வகாபிசமாக, கொம்யுனிசமாக அரேபியா மண்முழுவதும் வேரூன்றி ஆழச்சென்றுள்ளது. இது சுரண்டலாக, சூறையாடலாக, வன்முறையக மத்தியகிழக்கு முழுவதையும் மேற்கு இவ்வாறுதான் ஆக்கிரமித்திருக்கின்றது. வன்முறைக்கு அடிப்படைக்காரணம் சுரண்டலும், சூறையாடலும் என்று குர்ஆன் கூறுகின்றது. பேராசைச்.சக்திகள் அனைத்தையும் ஒரு மு.்.மீனின் நடத்தை நிராகரிக்கும். இது குற்றத்தின் மீது ஏற்படுகின்ற கோபத்தினால் உண்டாவதாகும். இது தான் வாழ்கின்ற ஒரு தகு தியை ஒரு சமூதாயத்திற்கு வழங்குகின்றது. ஆனால் இன்று மத்தியகிழக்கு முழுவதும் இத்தகுதியை இழந்த ஒரு சமூதாயத்தை வடிவமைப்பதில் யூதர்களும், வகாபிகளும் வெற்றியடைந்துள்ளார்கள். இவ்வாறு நிராகரிக்கப்பட்ட ஆட்சியாளர்களால் மத்திய கிழக்கு முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஈரான் இதற்கு முற்றிலும் விதி விலக்கானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலமும் ஒழுக்கக்கேடும் உள்ளவர்கள் ஆட்சிபீடமேறுவதால் அரசியல் தாறுமாறுகள் நிகழ்கின்றன. சுய நலமின்மை ஒழுக்க மேன்மை உள்ளவர்களே ஆட்சிபீட மேறவேண்டுமென குர்ஆன் அரசியல்புரட்சி ஒன்றும் செய்திருக்கின்றது. அரசியலையும், ஆன்மீகத்தையும் இணைத்த ஒரு சமுதாயமே ஈரானை ஆட்சி செய்கிறது. மத்திய கிழக்கு மன்னர்கள் ஆன்மீகத்தில் அரசியல் கலக்காது அதனை மசூதிகளுடன் சுருக்கப்பட்ட வெறும் சடங்குகளாக மாத்திரம் மாற்றியிருக்கிறார்கள். உலகம் தழுவிய இஸ்லாமியர்களின் குரல்கள் நசுக்கப்பட்ட நிலையிலே ஹஜ் கிரியை களுக்காக ஒன்று கூடுகிறார்கள். சடங்கு சம்பிரதாயங்களை எதிர் கின்ற வகாபிகள் ஹஜ் கிரிகைகளை வெறும் சடங்குகளாகவே செய்துவருகிறார்கள். அங்கு எமது உம்மத்துக்கள் சிந்துகின்ற ஒரு துளி இரத்திற்காகவும் கூட குரல் கொடுக்கவே முடியாது. ஈரானியர்கள் 1987ல் இவ்வாறு குரல் கொடுத்ததால் தான் காமுக மன்னர்களின் இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்டார்கள்.

இன்று உலக இஸ்லாமியர்களின் கௌரவத்தை ஈரான் பல முனை களிலும் நிறுவி வருகிறது. அது ஆன்மீகமாக, அரசியலாக, அறிவியலாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனால் தான் முதுகெலும்பற்ற, காமுக, சுயநலமிக்க மன்னர்கள் கொடுங்கோலன் ஜோர்ஜ்புஷ்சின் கரங் களை வலுப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இக்கால கட்டத்தில்தான் கருதியலற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத பிதற்றல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு பத்திரிகை (அசத்தியக்குரல்) சென்ற மாதம் (பெப்ரவரி) ஈரானைப்பார்த்து மிகவும் அதிகமாகவே வாந்தியெடுத் திருக்கின்றது. ஈரானை அமெரிக்கா இன்று தொலைத்துக்கட்ட முனைகிறது. அதற்குப் பலவழிகளும் உதவி தேடிக்கொண்டும் இருக்கின்றது.. இஸ் ரேலோ 100 இற்கும் அதிகமான அணுகுண்டுகளைப் போட்டு ஈரானை அழித்துவிட ஆதங்கிக்கின்றது. மேற்கு நாடுகளினதும், அரேபிய மன்னர் களினதும் ஒரே இலக்கும் இதற்கு மாறுபட்டதல்ல. காரணம் சியோனிசத்தி னுடைய பலம் வாய்ந்த எதிரி ஈரான்தான் என்பதை இவர்கள் அனைவரும் இனங்கண்டு ஒன்றிணைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதே வேளை அசத்தியக் குரலின் தட்குறிகளும், அறியாமையினால் ஈரானைப் பார்த்து அதிகமாகவே குரைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் இவர்களுடைய அறியாமை காமுகமாக (ஜெலில் மொழியில்) வெற்றுச் சிந்தனைகளாக, ஏளனமாக வன்முறையாக, (வெலி கமையில் அண்மையில் தௌமுல்லாக்களுடன், அவர்களின் ஆன்மீகக் குண்டர்களும் ஒன்றிணைந்து ஒரு சூபிஞானியை வன்முறையால் எதிர் கொண்டார்களாம்) மாதாந்த வாந்தியைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே சியோனிசத்திற்கும், இவர்களுக்கும் இருக்கின்ற உறவு என்ன என்பதே நாம் வாசகர்களிடத்தில் முன்வைக்கின்ற கேள்வியாகும்.? இத் தீமைகளை இனங்காண்கின்ற, அதை எதிர்த்துப் போராடுகின்ற, அறிவைக் குர்ஆனிய சமுதாயங்களில் காணலாம். எனவே தான் யூதர்கள் இந்த உண்மைகளை உணர்ந்தவர்களாக, திறமைமிக்கவர் களாக, வகாபிசத்தை மத்திய கிழக்கு முழுவதிலும் நிறுவி, அதைப் பாதுகாத்தும் வருகிறார்கள். உண்மையில் மேற்கிற்கும் அரேபிய மன்னர்களுக்கும் இடையிலான உறவு சாதாரணமானதல்ல. இது கோட்பாட்டு ரீதியிலான, வளங்கள் தொடர்பான, யூதன் கனவு காண்கின்ற அகன்ற இஸ்ரேலின் மொத்த உறவு அது.

அரேபிய மண்கள் ஆக்கிரமிக்கப்படுவதிலும், பாலஸ்தீனத்தின் இனசங்காரத்திலும் (Holo Coust) அல்அக்ஸா சொலமன் கோயிலாக மாற்றப்படுவதிலும், அரேபிய மன்னர்களுக்கும், யூத இனத்தினருக்கும், வெள்ளை மாளிகைக்கும், வரலாற்று ரீதியான உறவுகள் இருக்கின்றன இத்தீமைகளை உணராத அசத்தியக்குரல், யூதனின் ஊது குழலாகவே இருந்து வருகிறது என்று கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது.

உலகிலேயே தனிச்சிறப்புடைய ஒழுக்க நெறியை மூச்சாகக் கொண்ட ஒரு சமுதாயம் நாம். குர்ஆன் அதற்கு அத்திவாரமிடுகிறது. அரேபியாவினுடைய ஒழுக்கம், பண்பாடு, நாகரீகம், கலாசாரம், அனைத்தை யும் வகாபிசம் சிதைத்து வருகிறது. தொலைநோக்கு இல்லாத ஒரு சமு தாயத்தை மத்திய இழக்கில் வகாபிசம் கட்டியெழுப்பி உள்ளது. எமது சமுதாயத்திற்கு எதிரான தீமைகளை நீண்ட தொலைவு வரை கனவுகண்ட எம்முன்னோர்கள் இகழப்படுகிறார்கள். அவர்களின் அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. தொலைநோக்கு இல்லாத, அரேபிய தேசங்கள் மேற்கிற்குப்பின்னால் மது, மாது, புகழ், செல்வம் என ஓடிக்கொண்டிருக் கின்றன. தார்மீக, ஆன்மீக, நீதி நெறி உறவுகள் இவர்களிடத்தில் காணக் கிடைப்பது அரிது. இவர்களின் புலன் இன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பு கடந்து இன்பத்தினாலும், மகிழ்ச்சியினாலும் சுவைப்பித் தேறியவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு முறை (GMF) அவர்களது நாளாந்த உணவில் கலந்துள்ளன. இவர்கள் விலங்குகள் போன்று புலனின்ப நாட்டமுடையவர்களாக இசைவாக்கப்பட்டுள்ளனர். இதனால் தான் இவர்கள் உணவில் அதிக நாட்டமுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்க ளைப்பார்த்து நாம் பெருமை கொள்வதற்கு அவர்களிடத்தில் எதுவுமே கிடையாது.

தாழ்ந்த நிலையில் உள்ள மிருகங்களுடைய கேட்கும் ஆற்றலை யும், காணும் ஆற்றலையும் நினைத்துப் பாருங்கள். அவற்றின் புலன் ஆற்றல்கள் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளன. அதன் புலன் இன்பம் வரம்பு கடந்து இன்பத்தினாலும், மகிழ்ச்சியினாலும் சுவைப்பித் தேறியவையா கின்றன. ஒரு பன்றி உணவருந்தும் போது இடையிடையே உறுமும். நாயும் அவ்வாறு உணவருந்தும் போது குறைத்துக் கொள்ளும். இது புலனின்பத்தின் உச்சம். இவ்வாறு ஓசையை வெளிப்படுத்தி மற்ற விலங்கு கள் அணுகாது பார்த்துக்கொள்வதே இதன் நோக்கமாகும். இவ்வாறான மனிதர்களும் எமக்குள்ளும் வாழ்கிறார்கள். இவ்வாறுதான் அரேபியா முழுவதும் ஐரோப்பிய மயமாக்கப்பட்டு வருகிறது. ஒரு தேசம் ஒழுக்கம் தவறுவதுதான் மாபெரும் தீமையாகும்.

கனடாவிலிருந்து வெளிவருகின்ற ஒரு நாளேடொன்றில் ஒரு யூதன் ஒரு கருத்தை இவ்வாறு வெளியிட்டிருக்கிறான். இவ்வாறுதான் ஜப்பானி யர்களும் மதப்பித்துப் பிடித்து அலைந்து திரிந்தார்கள். அவர்களுக்கு நாம் ஒரு அழகான சத்திர சிகிச்சையை வழங்கி இருந்தோம். அதாவது இரண்டு அணுகுண்டுகளைப் போட்டு அவர்களை ஒரு வர்த்தக சமூதாயமாக, ஒரு நாகரீகமுள்ள சமூதாயமாக மாற்றி அமைத்துள்ளோம். உலகச் சகோதரத்துவம் எனக் கூறிக்கொள்கின்ற அந்தக் காட்டுமிராண்டிச் சமூதாயம் ஒன்று கூடுகின்ற அதாவது உலகப் பயங்கரவாதிகள் ஒன்று கூடுகின்ற மெகா (மக்கா) வுக்கும் ஒரு அணுகுண்டினைப் போட்டு அவர்களையும், ஒரு வர்த்தக சமூதாயமாக, ஒரு நாகரீகம் உள்ள சமூதாயமாக ஏன் மாற்றிவிட முடியாது என்று கேட்கின்ற விதமாக எழுதியுள்ளான். இதுதான் இன்று எமது சமூகம் இனங்காணவேண்டிய பாரிய தீமையாகும். உலகத் தீமைகள் காலத்துக்கு காலம் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மாறுபடுகின்றன. இத்தீமைகளை எதிர்கொள்கின்ற அறிவும், காலத்துக்குக் காலம் மாறுபட வேண்டும். வாழத்தகுதியற்ற சமூகங்கள் வரலாறுகளிலிருந்து மறைந்தொழிவதும் இவ்வாறுதான்.

இக்கால கட்டத்தில் தான் ஒரு சீர்திருத்தக்குரல் பாரசீகத்தில் இருந்து எதிரொலிக்கின்றது. அது ஆன்மீக, அறிவியல், அரசியல் சித்தாந்த மாக பரிணமித்துள்ளது. குர்ஆனிய சமூதாயம் இத்தீமைகளை இனங்காண முடியாதவாறு தடுக்கின்ற அனைத்து சக்திகளுக்கும் அது ஒரு பெருஞ் சவாலாக மாறியுள்ளது. இமாம் ஆயத்துள்ளா ரூகுல்லா ருமைனி அவர்கள் நிறுவிய அறிவாற்றல் மிக்க கோட்பாட்டில் உலகை இஸ்லாமியச் சமூகம் இந்த வசிய சக்தியில் கட்டுண்டு யூதத் தீமைக்கெதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளது. ஆம் ! வரலாற்று நெடுகிலும் ஒரு தீர்க்கதரிசியின் பயணத்தில் இடையூறுகள் நிறைந்து காணப்படும். தனது வாழ்க்கையை விட்டு முற்போக்காகச் சிந்திக்கும் எந்த ஒரு மனிதனும் நிச்சியமாகத் தவறாகவே புரிந்து கொள்ளப்படுவான்.

இன்று ஈரானை மத்திய கிழக்கைக் காக்கின்ற ஒரு வீரபூமி யாக மாற்றிய மகத்தான மனிதனாகிய இமாம் ஆயத்துல்லா ரூகுல்லா குமைனி அவர்கள் உண்மையிலேயே காலத்தின் அவதார மாகும. இவ்வாறு தான் இன்று ஈரான் மத்திய கிழக்கில் எல்லாத் துறைகளிலும் எழுச்சி அடைந்திருக்கின்றது. எனவே தான் யூதர்கள் இன்று ஈரானை மூர்க்கமாக எதிர்க்க முனைகிறார்கள். அமெரிக்காவும் ஈரானை என்ன விலைகொடுத்தாவது மடக்கி விடவேண்டும் என்று துல்லியமாக திட்டம் தீட்டி வருகிறது. மேற்கினுடைய சிந்தனை களிலும் இவர்களிடத்தில் முரண்பாடுகள் இல்லை. வகாபிகள் இவர் களுக்கு பின்பலமாக இருந்து செயல்படுகிறார்கள். எமது நாட்டிலும் ஈரானை கண்மூடித்தனமாக எதிர்க்கின்ற ஒரு பிற்போக்கு வாதக் குரலாக அசத்திய குரல் (பூச்சாண்டிக்குரல்) செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. (பார்க்க பெப்ரவரி 2008 வெளியீடு) ஒரு சில ஆன்மீக முரண்பாடுகளை இவர்கள் இதற்கு ஆதாரமாகக் கொள்கிறார்கள். உலகின் எல்லாக் கால கட்டங்களிலும் ஆன்மீக முரண்பாடுகள் இல்லாத ஒரு சமூதாயம் இருந்ததாக வரலாறே கிடையாது. இவ்வாறு தான் நாம் ஈரானின் எழுச்சியை எழுதுகின்றோம், பேசுகின்றோம். எனவேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் தவறானவர்களாக அசத்தியக்குரல்காரர்களாலும், ஒரு சில தௌ முல்லாக்களாலும் விமர்சிக்கப்பட்டுவருகின்றோம்.

லெபனானின் போர் யூதர்களுக்கு ஒரு சிறந்த பாடத்தினை அண்மையில் புகட்டி இருக்கின்றது. இமாம் குமைனி அவர்களின் சிந்தனையால் உந்தப்பட்ட செய்யது ஹசன் நஸ்ருல்லா அவர்கள் போரின் தீரத்தையும், ஆத்ம தீரத்தையும் போர்முனையில் நிறுவியிருந்தார்கள். அல்லாவினுடைய பாதையில் செய்யப்பட்ட இந்தப் பரிசுத்த யுத்தம் "ஜிஹாதுக்கு" ஒரு சிறந்த உதாரணமாகும். அங்கே அரசியலை வடிவமைத்திருக்கின்ற அஃலுல் பைத்துக்களின் ஆத்மீக ஒற்றுமை இதற்கு முக்கிய காரணமாகும்.

இன்று மத்திய கிழக்கில் மன்னர்களுக்கு இதுதான் பெரும் தலையிடியைக் கொடுத்திருக்கின்றது எனவே தான் சியாக்கள் காபிர்கள் என்று (1979 இல் ஈரனிய இஸ்லாமிய புரட்சிக்குப்பின்) வகாபிய முல்லாக்களாலும், ஒரு சில முட்டாள் மௌலானாக்களாலும், அசத்தியகுரல் காரர்களாலும் சித்தரிக்கப்படுகிறார்கள். சியாக்கள் ஹஜ் கடமைகளுக்காகவும் இந்த மன்னர்களால் தான் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த இரட்டை வேடம் கலையும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

வெள்ளை யூத ஆங்கில உலக வல்லாதிக்கத்தை முறியடிக்கும் ஆற்றலை இப்பூவுலகில் பெற்றிருக்கின்ற ஒரே ஒரு சமூதாயம் சியாக்களாகும். ஏனெனில் இன்றைய உலகில் அவர்கள் மாத்திரமே இந்தத் தீமையை எதிர்கின்ற கலாச்சார, ஆன்மீக, அரசியல், இராணுவ ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர். இவர்களின் ஆன்மீகம் என்பது ஏகாதிபத்தியத்தை முரட்டுத்தனமாக, கண்மூடித்தனமாக, எதிர்கின்ற தன்மை என்ற தரத்தில் இருந்து அறிவியலாய் அரசியலாய் எதிர்கின்ற தன்மையில் உள்ளதும் அதற்குக் காரணமாகும். உயிருள்ள தலைமைத்துவம் அதற்கு முழுமையாக இசைவடையும் தன்மை என்பன இவர்களின் ஆன்மீகததில் காணப்படுகின்ற சிறப்பம்சமாகும். காலனியமும், ஏகாதிபத்தியமும் இந்த இரண்டையுமே சிதைக்கின்றன. சியாக்கள் இந்த ஆபத்தில் இருந்து தப்பிவிட்டனர். ஒரு வகையில் இமாம் ஆயத்துல்லா குமைனி அதற்கு காரணமாக இருக்கலாம் (Noum Chomsky).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இமாம் ஆயத்துல்லா குமைனி அவர்கள் ஒரு சாதாரண மனித வெளிப்பாடல்ல அவர்கள் ஒரு அரசியல், ஆன்மீக, அறிவியல் போன்ற மனித விழுமியங்களின் வெளிப்பாடென்றே கூறலாம்.

காந்தியடிகளும் ஒரு தனிமனித வெளிப்பாடல்ல. இவர் சாத்வீகத்தின் ஒரு சிறந்த முன்மாதிரியாகும். அன்னாரிடத்தில் உங்களது இரத்தம் சிந் தாத சாத்வீகப் போராட்டம் வெற்றிபெறக் காரணம் என்ன? எனக் கேட்கப் பட்ட பொழுது அதற்கு அவர் "நான் கீதையை கையில் ஏந்தினேன்" அங்கு அகிம்சைக்கும் தர்மத்துக்கும் ஒரு பெரிய பரிமாணம் இருக்கின்றது. நான் கீதையின் பாதையில் சென்றேன்.

இதனால் தான் சாத்வீகத்தினூடாக சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது என்று கூறுகின்றார். அன்னாரைக் கொலை செய்த நாதிராம் கோட்சே இடம் இவ்வாறு ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. ஏன் ஐயா அந்த மகானை கொலை செய்தாய்? என்று கேட்டதற்கு! நான் கீதையை கையில் ஏந்தினேன். "ஒரு நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் குந்தகம் விளைவிக்கின்ற எந்த மனிதனையும் உன்னால் கொலை செய்யமுடியும்" என்று கீதை வலியுறுத்துகிறது. எனவே நான் கீதையின் வழியில் சென்றதால் தான் அந்த மனிதனை கொலை செய்ய வேண்டியிருந்தது. என்று கூறுகின்றான். இங்கு கீதை இவர்களால் இரண்டு விதமாகக் கையில் ஏந்தப்படுவதைப் பார்க்கின்றோம்.

இன்று எமக்குள்ளும் குர்ஆனை கையில் ஏந்துகின்றவர்கள் எம்மை பல கூறுகளாகப் பிரிக்க முனைகின்றனர். எமது சமூகத்தின் பிளவு, பித்தலாட்டங்களுக்கு குர்ஆன் காரணமாகின்றதா என்று கேட்க முனைகின்ற வர்களுக்கு வாழ்க்கைத் திட்டவாதிகளும், சிர்க்கு வாதிகளும், நவ்து பில்லாஹி மின்னாக்களும், அசத்தியக் குரல்காரர்களும் என்ன பதில் கூறப்போகிறீர்கள். மேலும் ஒரு சாரார் குர்ஆனை ஒரு போர்முரசாகவே கையில் ஏந்தப் பார்க்கின்றனர் என்பதும் உண்மை தான். இவ்வாறான சிந்தனைகள் ஒரு மனிதனின் மனதில் உதயமாகின்ற பொழுது உங்களுக்கு இதுவும் பித்ஆ ஆகிறதா? அல்லது நவ்துபில்லாஹி மின்ஹா வென ஒதுக்கிவிடப் போகின்றீர்களா? இன்று சிந்தனை வெடித்துச் சிதறும் ஒரு யுகத்தில் அல்லவா நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தான் நாம் உங்களது பித்தலாட்டங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திலும் இருக்கின்றோம்.

ஒரு சில வாழ்க்கைத் திட்டவாதிகளிடமும், (சில சஞ்சிகை வாதிகள்), பிடிவாத மனப்பான்மை கொண்ட சுயமத வெறியர்களிடமும் (அசத்தியக் குரல்காரர்கள்) நவ்துபிலல்ஷாஹி மின்னாக்களிடமும் மேலே கூறியது போன்ற கருத்துப் பரிமாறலை எதிர்பார்க்க முடியாதது உண்மைதான். பொது வாழ்க்கைப் பிதற்றலும், பத்திரிகைப் புகழும், காமுகக் கருத்தும், இலக்கியத்திருட்டும் (அல்ஜுபைல் தஹ்வா சென்டர் -ஜெலீலின், சவுதிஅரேபியாவின் சூபிகளின் தரிக்காக்கள் அன்றும் இன்றும் பாாக்க) அற்புத ஆராதனையும் (செயலில்லாமல், அனைத்தையும் அல்லாவிடம் கேட்டு, அறிவியலுக்கு எதிராக இஸ்லாத்தைத் திருப்ப முயலுகின்ற தௌ சிந்தனை) பொருள் நோக்கமும், சமூகம் பிளவு படுவதையே சீர்திருத்தமாக கொண்டு செயல் படுகின்ற உங்களிடத்தில் உணர்ச்சியிடம் அறிவு சரணடைய விடுகின்ற உங்களிடத்தில், இறந்த உடலுக்கு அன்பு செலுத்தத் தெரியாத உங்களிடத்தில் உரையாடுவதற்கு என்ன இருக்கின்றது.

மாறாகச் மனித இனத்தின் ஜீவியத்தைத் தொடுகின்ற எழுத்துக்கள் தான் இன்றைய காலததிற்கு தேவையானதாகும். ஆரோக்கியமான கருத்து வேறுபாடுகள் இருப்பதில் தீங்கு இல்லை. மாற்று கருத்துக்களையும் மதிக்கின்ற மனப்பான்மையும் முதலில் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாறாக சத்தியத்திற்கு எதிரான அசத்தியக் குரலின் காமுக எழுத்துக்களே நிஜமான குப்ராகும். காரணம் இக்கால கட்டத்தில் கூட்டு நிகழ்வுகளே கூடாது என்று கருத்துரைக்கின்றீர்கள். தலைமைத்துவத்திற்கு எதிராக பேசுகின்றீர்கள். சமூகம் பிளவு பட்டுச் சின்னாபின்னமாகி சிதறி விட வேண்டுமெனப் பாடுபடுகின்றீர்கள். அங்கு அரேபியாவில் - சியா - சுன்னிப்பிளவாக ஆயுதக் குழுக்கள் உருவாகி தனக்குள்ளும் போராடுவதைப் பார்த்து ஆறுதல் அடைகின்றீர்கள். இது அகன்ற இஸ்ரெயிலுக்கு வழிவகுக்கிறது எனக் கூறும் பொழுது எம்மை பார்த்து சமூக விரோதியெனக் கூறுகிறீர்கள். காமுகச்சோரம் போய் எழுதுவதையெல்லாம் “ஆகா என்ன ஆனந்தம்” எனக்கூறித் தமக்குள் ளேயே பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறீர்கள். மானுடச் சிந்தனைக் கூறுகள் அனைத்தையும் (கைவினையின் நினைவுச் சின்னங்களான -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முன்னோர்களின் அடையாளங்கள், கல்வெட்டுக்கள், கோபுரங்கள், கோட்டைகள், தொல்பொருள் அடையாளங்கள் புலமையின் நினைவு சின்னங்களான கிதாபுகள், கவிதை நூல்கள், காவியங்கள், மௌலூது போன்ற காவியங்கள், புராதன நூல்கள் சிர்க்கெனப் பயம் காட்டுகிறீர்கள். இவற்றிலுள்ள வடிவம், வரலாறு, அற்புதம், அழகு, ரகசியங்கள் எதுவுமே வஹாபிய மரமண்டைகளுக்குள் ஏறாது

உலக சகோதரத்துவத்தை வலியுறுத்தும் ஹஜ்ஜை ஆன்மீக சடங்குகளாக மாத்திரம் சுருக்கி இருக்கின்றீர்கள். ஹஜ்ஜின் போது உங்கள் அடுத்த வாசலில் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்ற பாலஸ்தீனர் களின் அவலம் பற்றி ஹஜ்ஜுரைகளில் இடம்பெறவே கூடாது என கவன மாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். உலக சகோதரத்துவம் என்ற முறையில் பெரும் பணத்தை விரயம் செய்து ஒன்று கூடுகின்ற இந்த நிகழ்வில் இந்த வகாபிய ஆன்மீகம் தேவைதானா? இதனால் தான் போதை ஏறிய நிலையில் இந்த இனம் அல்லாஹ் விவகாரத்தில் பேதப்பட்டு, பிளவுபட்டு சிதறி நிற்கின்றது. இதனைப் பார்த்து நீங்கள் நபி வழிப்பள்ளிகளில் ஆறுதல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கின்றீர்கள். இதுவும் சீர்திருத்தமாகுமா? இவ்வாறு தான் உங்களிடத்தில் அறியாமை தலை விரித்து ஆடுகின்றது என்று கூறி வருகின்றோம்.

எனவே சகிப்புத் தன்மை உண்மைகளை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். இதய மொழியையும் நீங்கள் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனின் தார்மீக இயல்புதான் அவனை நன்மையான, மேன்மையான சிந்தனைக்கு உயர்த்துகிறது. உங்களது எழுத்தறிவு மட்டும் கல்வியாகாது. பண்பையும் அது உருவாக்க வேண்டும். அதுதான் கல்வியாகும். எளிய வாழ்க்கையை கடைப்பிடிப்பதுடன் உயரிய சிந்தனைகளையம் வளர்த்துக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் உங்களது கருத்துக்களுக்கும் உருவம் கிடைக்கும். "வாழ்வும் பண்பாடும்" எங்கள் கருத்துக்களுக்கு மெதுவாக உருவம் கொடுக்க முயன்ற பொழுதுதான் எங்களைச் சுற்றி யுள்ள சிலரிட மிருந்து மாத்திரமல்ல, எமக்குள் இருக்கின்றவர்களிட மிருந்தும் உதையும் சாபங்களையும்தான் நாங்கள் பெற்று வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதை நாம் எமது இதயமாக நேசித்தோமோ, அதே இதயம் எம்மை ஓங்கி அறைவது போல் ஒரு சிலர் எம்மிடம் நடந்து கொள்கிறார் களே. நிறுவனரீதியாக நீங்கள் எழுந்து கொள்ளக் கூடாது எனப்பொச்சரிக் கின்றவர்கள் தான் இன்று சீர்திருத்தவாதிகள். செயல் இல்லாத திட்டங் களுடன் விழாக்கள் என்ற பெயரில் கூட்டப்படுகின்ற மனித கும்பல்களின் கதாநாயகர்கள் இவர்கள். ஆலயத்தின் நிழலில் அநீதி நடத்தாதே! அரியணையும், ஆலயமும் அநீதியின் இரு வேறுபெயர்கள் என்றான் வால்டேயர். இதனால் இவரைப் பார்த்து மதவிரோதியென மடக்க முயன்ற னர் மதவெறியர்கள். இவ்வாறான இருண்ட காலத்தில் நாமும் இப்பொழுது வாழ்ந்து வருகின்றோம். சிந்திக்காத ஒரு சமூகம் இருக்கும் வரையில் இது சாத்தியப்படலாம். ஆனால் சமூகம் சிந்திக்க ஆரம்பித்து விட்டால் அதை எந்தத் தீயசக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்று கூற விரும்புகின்றோம்.

எனவே தான் போலிகளையும், எத்திப்பிழைக்கின்ற எத்தர்களையும் எமது பேனா முனைகள் இனங்காட்டி வருகின்றன. இவ்வாறு இவர்களின் சுயரூபம் தகர்த்தெரியப்படுவதால்தான் வாழ்வும் பண்பாட்டின் குரலும் நசுக்கப்பட்டுவருகிறது. இது போன்ற தடைகள் இல்லாமல், உயர்ந்த எண்ணங்கள் ஒரு சமூகத்தின் இதயத்துக்குள் புகமுடியாது. இறுதி யாக முன்னோர்களைப் புகழ்வதால் நாம் வளர்கிறோம் எனக் கூறுவதுடன் எனது பாதை மாறாத இந்தப் பயணம் தொடர எல்லாம் வல்ல நாயனை வேண்டி விடைபெறுகின்றேன். வஸ்ஸலாம்

இ∴து
*செய்யது ஹுஸைன் மௌலானா*
*0777-328743*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை யூத ஆங்கில உலக வல்லாதிக்கத்தை முறியடிக்கும் ஆற்றலை இப்பூவுலகில் பெற்றிருக்கின்ற ஒரே ஒரு சமூதாயம் சியாக்களாகும். ஏனெனில் இன்றைய உலகில் அவர்கள் மாத்திரமே இந்தத் தீமையை எதிர்கின்ற கலாசார, ஆன்மீக, அரசியல், இராணுவ ஆற்றலைப் பெற்றிருக்கின்றனர். இவர்களின் ஆன்மீகம் என்பது ஏகாதிபத்தியத்தை முரட்டுத்தனமாக, கண்மூடித்தனமாக, எதிர்கின்ற தன்மை என்ற தரத்தில் இருந்து அறிவியலாய் அரசியலாய் எதிர்கின்ற தன்மையில் உள்ளதும் அதற்குக் காரணமாகும். உயிருள்ள தலைமைத்துவம் அதற்கு முழுமையாக இசைவடையும் தன்மை என்பன இவர்களின் ஆன்மீகததில் காணப்படுகின்ற சிறப்பம்சமாகும். காலனியமும், ஏகாதிபத்தியமும் இந்த இரண்டையுமே சிதைக்கின்றன. சியாக்கள் இந்த ஆபத்தில் இருந்து தப்பிவிட்டனர். ஒரு வகையில் இமாம் ஆயத்துல்லா குமைனி அதற்கு காரணமாக இருக்கலாம் (Noum Chomsky).